விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + XVI


# வலம்புரி Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை (29.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 10


சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம்

## இலங்கை அரசுக்கு இந்தியாவினூடாக அழுத்தங்களை நாம் பிரயோகிக்க வேண்டும்

மாவை எம்.பி வலியுறுத்து



(முறிகண்டி)

பௌத்த சிங்கள அரசாக தம்மை காண்பிக்க இந்த அரசு முயல்வதாக மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய கீதத்தினை தமிழ் மொழியில் பாட 15

## கொதிநீர் உடம்பில் பட்டதில் ஒரு வயது குழந்தை உயிரிழப்பு

கீரிமலையில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக கொதிநீர் உடம்பில் பட்டதில் குழந்தை சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவத்தில் கீரிமலை, நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த சஜீபன் சஹறாஸ் (1 வயது 2 மாதம்) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி அன்று குறித்த குழந்தை விளையாடும்போது பால் கரைப் பதற்கு

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால்

# கிளிநொச்சியில் நாளை மாபெரும் போராட்டம்

பேருந்து ஒழுங்குகளும் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்) வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நாளை மு.ப 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான பேருந்து ஒழுங்குகளும் அறிவிக்கப் பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த நான்கு அகதிகள் கைதாகி விடுதலை

(முறிகண்டி)

இராமேஸ்வரத்திலிருந்து நாட்டுப்படகை கடத்தி 4 அகதிகள் இலங்கைக்கு தப்பி வந்துள்ளதாக நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

சிறைச்சாலை

## வைத்தியரால் ராஜித பரிசோதனை

(கொழும்பு)

நாரஹேன்பிட்டிய லங்கா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ராஜித சேனாரத்னவின் உடல்நிலையை, வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியர் ஒருவர் நேற்று பரிசோதனை மேற்கொண் 15

உயர்தரப் பெறுபேறுகள்

## வேம்படி 43 மாணவிகள் 3A யாழ்.இந்து 36 மாணவர்கள் 3A

நடைபெற்ற (2019) இவ்வருட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வட மாகாணத்தில் யாழ்.வேம்படி மகளிர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 43 மாணவிகள் 3A சித்திகளையும் யாழ்.இந்துக் கல்லூரியில் 36 மாணவர்கள் 3A சித்திகளையும் பெற்றுள்ளனர்.

அதேநேரம் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் 2A சித்திகளை 28 மாணவிகள் பெற்றுள்ளனர். (ஞா-10,18)

## ஏகாதிபத்திய முறையை திரும்பவும் கொண்டுவருவதனை எதிர்ப்போம்

சுமந்திரன் எம்.பி ஆக்ரோசம்



(கரணவாய்)

ஜனநாயக சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் அப்படி அல்லாமல் ஒரு ஏகாதிபத்திய முறையை திரும்பவும் கொண்டுவருவதற்கான முயற்சியை எதிர்ப்போம் எனத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடக பேச்சாளருமான எம்.ஏ. 15

காய்ச்சலால்

## குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் மற்றும் வயிற்றுவலி காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் நேற்று முன்தினம் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான தங்கராஜ் சுபாஜினி (வயது - 45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 24ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் குறித்த பெண்ணுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

– டெங்கு நோய் காரணமாக –

## யாழ்.போதனா வைத்தியசாலையின் சுகாதார ஊழியர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சுகாதார ஊழியர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஸ்ணன் 15

இறக்குமதி செய்யப்பட்ட

## உருளைக்கிழங்கின் விலையை 50 ரூபாயால் குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த விலையை 50 ரூபாயால் குறைக்க அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் திட்டமிட்டுள்ளது.

• இந்நிலையில், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு மீதான சுங்க 15

## பிரிவினைவாதம் பேசும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு உடனடியாக புனர்வாழ்வளிக்க வேண்டும்

ராவய அமைப்பின் சுதந்த தேரர் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களின் கலாசாரத்தை ஏனையவர்கள் ஏற்றுக்கொள்வதன் மூலமே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். தமிழ் பிரிவினைவாதத்தை வளர்க்கும் தமிழ் அரசியல்வாதிகளிற்கு உடனடியாக புனர்வாழ்வளிக்க வேண்டும். தமிழ் மக்களை வைத்து ஏதாவது புரட்சி ஏற்படுத்த முயன்றால், பிரபா 15

# அரசாங்கம் வடக்கு கிழக்கில் வாக்களிப்பு நடத்தக் கூடாது

## அநுரகுமார விசனம்

(கொழும்பு)

சிங்கள - பௌத்த தேசத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் முனையுமானால் வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு நடத்தக் கூடாதென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அநுர குமார திசாநாயக்க மேலும் கூறியுள்ளதாவது, பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சிங்கள-பௌத்த தேசத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் எதிர்பார்த்தால், வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு நடத்தக் கூடாது.

அத்துடன் ஜனாதிபதியின் எதிர்கால கொள்கைகள் குறித்து பாராளுமன்ற விவாதத்தை நடத்துமாறு நாங்கள் சபாநாயகரிடம் கோருவதற்கு தீர்மானித்துள்ளோம்.

மேலும் 2020 ஜனவரி 3 ஆம் திகதிக்கு பின்னர் பாராளுமன்றக் கூட்டங்களை ஒத்திவைக்க வேண்டாமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார். (ஞா)


## வீடு விற்பனைக்கு

கொழும்பு வெள்ளவத்தை 46, IBC Road இல் (Visa பிள்ளையாருக்கு பின்னால்) 2002 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நன்கு பராமரிக்கப்படும் தொடர்மாடியின் 5ஆம் மாடியில், Deed உடன் கூடிய, 1100 Sq.ft 3 அறை, 2 குளியலறை, விசாலமான வரவேற்பறை, Vehicle Parking உடனான வீடு விற்பனைக்கு உண்டு. எதிர்பார்க்கும் விலை 19.25 Mil. பேசி தீர்க்கலாம்.

தொடர்பு இலக்கம் :
**077 926 1129, 077 386 7154**

(1601)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்

(1631)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532



# பணிநிலை வெற்றிடம்

## செக் குடியரசில்



| வேலைகள் | வேலையாட்கள் | சம்பளம் (யூரோ) |
|---|---|---|
| பொதுத் தொழிலாளர்கள் (ஆண்) | 150 | 650 |
| பொதுத் தொழிலாளர்கள் (பெண்) | 100 | 650 |
| வெல்டர்கள் (ஆண்) | 200 | 650 |
| ஆங்கில ஆசிரியர்கள் (பெண்) | 50 | 650 |
| ஜே.சி.பி ஆபரேட்டர்கள் (ஆண்) | 25 | 650 |
| ஹோட்டல் பணியாளர்கள் (ஆண் / பெண்) | 60 | 650 |

1 யூரோ - 202.50 LKR (பரிமாற்ற வீதத்திற்கு ஏற்ப நாணய வீதம் மாறும்)

1. ஒப்பந்த காலம் 1 வருடம் & புதுப்பிக்கத்தக்கது
2. வேலை நேரம் தினமும் 7.5 மணி நேரம் / வாரத்திற்கு 5 நாட்கள்
3. இலவச உணவு
4. இலவச தங்குமிடம்
5. இலவச போக்குவரத்து
6. இலவச மருத்துவம்
7. இலவச மீள்வரும் டிக்கெட்
8. கூடுதல் நேரம், குடியுரிமை அனுமதி நிறுவனத்தால் பெற்றுத்தரப் படும் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் செக் குடியரசு தொழிலாளர் சட்டத்தின்படி இருக்கும்.
9. அரச அனுமதிக்கட்டணம் 304, 317.000 (LKR)




**MELROY MANPOWER (PVT) LTD**
License No.2638, Approval No.AL/2638/0002/19
96A, 1/1, Main Street, Battaramulla.
Email: melroymanpower@gmail.com
Contact : 0114368425 / 0773527080 / 0778232397 / 072 711 1112

(C-8692)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவக்கொழுந்து

பிறப்பு 01 ✿ 05 ✿ 1950



இறப்பு 27 ✿ 12 ✿ 2019

இயதை, கரணவாய் மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவக்கொழுந்து அவர்கள் கடந்த 27.12.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், அமரர்களான கனகு - பூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் லீலாவதியின் அன்புக்கணவரும் சிவகுமாரி (பிரான்ஸ்), அமரர் சிவதாஸ், சிவப்பிரதாஸ் (லண்டன்), சிவானந்தபிரகாஷ் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ரதீஸ்கரன், தாட்சாயினி, டிலானி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரம்மியன், சதுர்த்திகா, அஸ்வின், ஆருஸ், டினோஜன், திவ்வியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2019) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"இயதை"
கரணவாய் மத்தி, கரவெட்டி. (1634)

தகவல் :- குடும்பத்தினர்
077 900 4556

## திருமதி
## ஜோண் பப்ரிஸ்ற் பிலேமினம்மா
### (செல்லமணி)



மண்ணில் : 08.07.1939 — விண்ணில் : 28.12.2019

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 88A, தேவாலய வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோண் பப்ரிஸ்ற் பிலோமினம்மா 28.12.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியா சாமிநாதர் - நீக்கிலாப்பிள்ளை மாகிறேட் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மடுத்தீன் ஜோண் பப்ரிஸ்ட் அவர்களின் அன்பு மனைவியும், அருட்பணி ஜோண் பப்ரிஸ்ட் அன்ரனி (தாசன் - பங்குத் தந்தை, யாழ் அடைக்கல அன்னை ஆலயம்), மேரி பியாற்றிஸ் (அவுஸ்திரேலியா), வின்செனரி (பிரான்ஸ்), அருட்சகோதரி பிறிசில்லா (திருச்சிலுவைக் கன்னியர்), விக்ரறின், மேரி யூட், இயூஜின் கிறிஸ்ரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், றெஜினா (பிரான்ஸ்), கியோமர் றஞ்சித், சேளின் சர்மினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கொட்பிரி (அவுஸ்திரேலியா), செறினா (பிரான்ஸ்), றொஸ்ணி (மாணவி - யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலை), யூபிசாலி, பப்ரிஸ்ரா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 88A, தேவாலய வீதி, யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் (ஞாயிறு) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளையதினம் திங்கள் (30.12.2019) காலை 10.00 மணிக்கு மண்டைதீவிற்கு எடுத்துச் செல்லப் படும். 30.12.2019 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவரின் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற்திருப்பலியைத் தொடர்ந்து மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

88A, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம். (1636)

தகவல் :-
அருட்பணி J.B.அன்ரனி (மகன்)



# சிறந்த தொழில்நுட்பவியலாளராவதே எனது இலட்சியம்

## யாழ்.மாவட்டத்தில் முன்னிலை பெற்ற மாணவன் விபரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு.இந்துக் கல்லூரி மாணவன் சிவகுமாரன் சிந்துஜன் முதலாவது தடவையாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் (புதிய பாடத்திட்டம்) மாவட்ட நிலையில் முதலாவது இடத்திலும் அகில இலங்கை ரீதியில் 31ஆவது இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

தனது பெறுபேறு குறித்து மாணவன் தெரிவிக்கையில், எனது குடும்பத்தில் நானும் அம்மாவும் தம்பியும் தான் இருக் கின்றோம். அப்பா வன்னி யுத்தத் தில் இறந்துவிட்டார். தம்பிக்கு 16 வயது.

எனது தம்பி விசேட தேவையுடைய ஒருவர். அம்மா தான் கூலி வேலைக்கு சென்று என்னை படிக்க வைத்தார். அம்மா படும் கஷ்டத்தினை பார்த்து நான் நிறைய நாட்கள் கவலைப்பட்டுள்ளேன்.

அதற்கான ஒரு பலனை பெற்று எனது அம்மாவை சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற இலக்குடனேயே படித்தேன்.

அதன் பலனை நான் அடைந்துள்ளேன். எனது அம்மா மிகவும் சந்தோஷத்தில் உள்ளார். இந்த சந்தோஷம் எனது அம்மாவின் பலநாள் கனவு. எனது இலட்சியம் ஒரு சிறந்த தொழில்நுட்பவியலாளர் ஆவதே.

நான் இந்த பெறுபேற்றினை பெறுவதற்கு உதவிய எனது பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம், தனியார் கல்வி நிலையம், நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

கஷ்டப்பட்டு படிக்கவேண்டிய அவசியமில்லை. விளங்கிப் படித்தால் உயர் பெறுபேற்றினை பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-104)

# எதிர்காலத்தில் வைத்தியராகி அனைவருக்கும் இலவசமாக சேவை செய்ய விரும்புகிறேன்

## உயிரியல் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுச் சாதித்த யாழ்.வேம்படி மாணவி

(குப்பிழான்)

எனக்குச் சிறுவயது முதல் வைத்தியராக வர வேண்டுமென்ற ஆர்வமிருந்தது. இதனால் தான் உயர்தரத்தில் உயிரியல் பிரிவைத் தெரிவு செய்து கல்வி கற்றேன். எனது கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்ட நிலையிலும், இடம்பெயர்ந்த நிலையிலும் பல மக்கள் வசித்து வருகிறார்கள். அத்துடன் வறுமையான நிலையிலும் பல மக்கள் வாழ்கிறார்கள்.

எனவே, எதிர்காலத்தில் வைத்தியராகி அவர்கள் அனைவருக்கும் இலவசமாக மருத்துவ சேவை செய்ய வேண்டுமென நான் விரும்புகின்றேன். எனது இந்த விருப்பம் நிறைவேற வேண்டுமெனக் கடவுளை வேண்டிக் கொள்கின்றேன் என வெளியாகியுள்ள 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் உயிரியல் பிரிவில் (பழைய பாடத்திட்டம்) தேசிய ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ள யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி அபர்ணா கருணாகரன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், நான் உயர்தரத்தில் முதலாவதாகத் தோற்றிய போது நல்ல பெறுபேறு கிடைக்குமென எதிர்பார்த்த போதும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் இரண்டாவது தடவையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தேன்.

வெளியான பெறுபேறுகளுக்கமைய இவ்வாறான மிகப் பெரிய அதிர்ஷ்டம் கிடைக்கு மென நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இதனால், இவ் வாறான மிகச் சிறந்த பெறுபேறு பெற்றமையை என் வாழ்வில் மிகவும் மகிழ்வான தருணமாக நான் உணர்கின்றேன். நான் தரம்-01 இலிருந்து 09 வரை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றேன்.


இதன்பின்னர் பத்தாம் தரம் முதல் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று வருகிறேன்.

நான் சிறுவயது முதல் பல வெற்றிகள் பெறுவதற்குப் பெற்றோர்களின் ஊக்குவிப்பும், பங்களிப்பும் முக்கியமானது. எனவே, என் சிறிய வயது முதலே கஷ்டப்பட்டுக் கல்வியறிவு புகட்டி நான் மிகச் சிறந்த பெறுபேறு பெறக் காரணமாகவிருந்த பெற்றோருக்கும் இந்தத் தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் கற்பதற்கு மேலாக அதிக நேரம் ஆர்வத்துடன் மீட்டல் செய்வேன். அவ்வாறு மீட்டல் செய்யும் போது கற்கும் முறையை அடிக்கடி மாற்றியமைப்பேன். இதனால் தான் சோர்வின்றியும், சலிப்பின்றியும் அக்கறையுடன் என்னால் கற்க முடிந்தது எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-18)

# விடாமுயற்சி வெற்றிதரும்

## பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் யாழில் முதலிடம் பெற்ற மாணவன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு இந்துக் கல்லூரி மாணவன் விஜயகுமார் ராகவன் இரண்டாவது தடவையாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் (பழைய பாடத்திட்டம்) மாவட்ட நிலையில் முதலாம் இடம் பெற்றதோடு அகில இலங்கை ரீதியில் 4ஆவது இடத்தை பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

தனது பெறுபேறு குறித்து மாணவன் தெரிவிக்கையில், நான் முதல் தடவையாக பரீட்சையில் தோற்றிய போது எனக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கான சிறந்த பெறுபேறு கிடைக்கவில்லை. இருந்தாலும் நான் மனதை தளரவிடாமல் அடுத்த தடவை முயற்சிப்போம் என விடா முயற்சியுடன் செயற்பட்டேன். அதற்கான பலனையே தற்போது பெற்றுள்ளேன். நான் இந்த பெறுபேற்றினை பெறுவதற்கு உதவிய எனது பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம், தனியார் கல்வி நிலையம், நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள். விடாமுயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். இதுவே அடுத்த ஆண்டு பரீட்சைக்கு தோற்றவிருக்கும் தம்பி தங்கையருக்கான எனது வழிகாட்டல் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-104)

# யுத்த காலத்தில் பெரும் நெருக்கடிக்கு மத்தியிலும் அர்ப்பணிப்பாக சேவையாற்றிய வைத்தியர்களைப் பார்த்த பின்னரே நானும் வைத்தியராக வர வேண்டுமென்ற எண்ணம் உருவானது

## உயிரியல் பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாமிடம் பெற்றுச் சாதித்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்

(குப்பிழான்)

சிறுவயதில் வன்னியில் யுத்த நிலைமைக்குள் சிக்குண்டு வாழ்ந்தோம். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பலகாலமாகத் தற்காலிக முகாம்களிலும் வாழ வேண்டியேற்பட்டது. இதனால், எமது மக்கள் பட்ட துன்பங்கள் யாவும் தெரியும். யுத்தக் கொடுமை காரணமாக சிலவேளைகளில் நாங்கள் அழுதுமிருக்கிறோம். யுத்த காலத்தில் பெரும் நெருக்கடிக்கு மத்தியிலும் சேவையாற்றிய வைத்தியர்களுமிருக்கிறார்கள். அவர்களது அர்ப்பணிப்பான சேவையைப் பார்த்த பின்னர் தான் நானும் எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக உருவாக வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு உருவானது.

ஆகவே, வைத்தியராக உருவாகிப் போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்பதில் மிகவும் ஆர்வமாகவுள்ளேன். இவ்வாறான சேவையாற்றுவதற்காக எதனை வேண்டுமானாலும் இழக்கவும் நான் தயாராகவிருக்கின்றேன் என வெளியாகியுள்ள 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுக்கமைய உயிரியல் பிரிவில் (புதிய பாடத்திட்டம்) தேசிய ரீதியில் இரண்டாமிடத்தையும், மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்றுச் சாதித்துள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஜெயானந்தராசா கிருஷிகன் தெரிவித்தார்.



தனது சாதனைப் பெறுபேறு தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

எனது சொந்த இடம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு. சிறுவயதில் எங்கள் பகுதிப் பாடசாலையில் கல்வி கற்றேன். யுத்த காலத்தில் தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டேன். இதன் பின்னர் தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்றேன்.

வீட்டுக் கஷ்ட நிலையைப் பார்த்து அதன் காரணமாகப் பக்குவப்பட்டு கடின முயற்சி செய்த காரணத்தால் தான் நான் உயர்தரத்தில் உயிரியல் பிரிவில்(புதிய பாடத்திட்டம்) தேசிய ரீதியில் இரண்டாமிடத்தையும், மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளேன். இவ்வாறான சிறந்த பெறுபேறு பெற்றுள்ளமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது கற்றலுக்கு உறுதுணையாகவிருந்த எனது பெற்றோர், அக்கா ஆகியோருக்கும், எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆகியோருக்கும், என்னுடன் இணைந்து கல்வி கற்ற நண்பர்கள் ஆகியோருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெற்றோர்களின் ஆதரவும், ஆசிரியர்களின் ஊக்குவிப்பும் மாத்திரமிருந்தால் போதாது. பிள்ளைகள் ஒவ்வொருவரும் தாங்களாகவே உணர்ந்து கல்வி கற்றால் மாத்திரம் தான் மேன்மையை அடைய முடியும். நானாக உணர்ந்து கல்வியில் அதிக ஆர்வம் செலுத்தியமையால் தான் என்னால் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடிந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

# வெற்றியை நோக்கி அவுஸ்திரேலியா



நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலியா அணி, இன்றைய ஆட்டநேர முடிவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், மெத்தியு வேட் 15 ஓட்டங்களுடனும், ட்ராவிஸ் ஹெட் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இதற்கமைய அவுஸ்ரேலியா அணி 456 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில், நாணயச் சுழற்சியில வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி, முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி, முதல் இன்னிங்ஸிற்காக 467 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ட்ராவிஸ் ஹெட் 114 ஓட்டங்களை யும், ஸ்டீவ் ஸ்மித் 85 ஓட்டங்களையும், டிம் பெய்ன் 79 ஓட்டங்களையும், மார்னஸ் லபுஸ்சகன் 63 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், நெய்ல் வாக்னர் 4 விக்கெட்டுகளையும், டிம் சவுத்தீ 3 விக் கெட்டுகளையும், கொலின டி கிராண்ட்ஹோம் 2 விக் கெட்டுகளையும், ட்ரென்ட் போல்ட் 1 விக் கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 148 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டொம் லதம் 50 ஓட்டங்களையும், நெய்ல் வாக்னர் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.


அவுஸ்திரேலியா அணியின் பந்துவீச்சில், பெட் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளையும், ஜேம்ஸ் பெட்டின்சன் 3 விக்கெட்டுளையும், மிட்செல் ஸ்டாக் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 319 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி, ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை பெற்றது.

இதில் அவுஸ்ரேலியா அணி சார்பில், டேவிட் வோர்னர் 38 ஓட்டங்களையும், ஜோ பர்ன்ஸ் 35 ஓட்டங்களையும், மார்னஸ் லபுஸ்சகன் 19 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், நெய்ல் வாக்னர் 2 விக்கெட்டுகளையும், மிட்செல் சான்ட்னர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இன்னமும் 6 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் நான்காவது நாளை அவுஸ்ரேலியா அணி இன்று தொடரவுள்ளது.



# டோனி தனது திட்டங்கள் குறித்து கோலியிடம் தெரிவித்திருப்பார்

## கங்குலி கருத்து



டோனி தனது எதிர்கால திட்டங்கள் குறித்து இந்திய அணி கப்டன் கோலி மற்றும் தேர்வாளர்களிடம் நிச்சயம் தெரிவித்திருப்பார் என ஐசிசி தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் தோனி தொடர்ந்து இடம்பெறாமல் இருந்து வரும் நிலையில் தோனி ஒய்வு குறித்த வதந்திகள் அவ்வப் போது எழுந்து வருகின்றனர்.

இந்தநிலையில் தோனி குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பிசிசிஐ தலைவர் கங்குலி பதிலளித்துள்ளார், " தோனி தனது எதிர்கால திட்டம் குறித்த கேப்டன் கோலி மற்றும் இந்திய அணியின் தேர்வாளர்களிடம் நிச்சயம் பேசியிருப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இதுபற்றி விவாதிக்க வேண்டிய தளம் இதுவல்ல என்று நினைக்கிறேன்.

தோனி என்ன செய்ய விரும்புகிறார் என்பது அவரது முடிவு. எனக்கு அதனை பற்றி தெரியாது. நான் அவரிடம் இதுகுறித்து பேசவில்லை. தோனி ஒரு சம்பியன்" என்று தெரிவித்துள்ளார்.

கேப்டனாக இந்திய அணிக்கு 2007-ல் ரி 20 உலகக் கிண்ணம், 2011-ல் 50 ஓவர் உலகக் கிண்ணம, 2013-ல் சம்பியன்ஸ் டிராபி ஆகியவற்றை வென்று கொடுத்துள்ளார். மேலும் டெஸ்டில் இந்திய அணியை நம்பர் ஒன் இடத்துக்கும் கொண்டு சென்றார். இதுதவிர ஐபிஎல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு 3 முறையும், சம்பியன்ஸ் லீக்கில் 2 முறையும் கிண்ணம் வென்று கொடுத்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற உலகக் கிண்ண தொடருக்கு பின்னர் தோனி, சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பீமர் பந்துகளை வீசி தென்னாபிரிக்காவை கலங்கடிக்கும் ஆர்ச்சரால் சர்ச்சை




ஜொவ்ரா ஆர்ச்சர் பீமர் பந்துகளை வீசியதால் அவர் பந்து வீசுவதற்கு தடை விதிக்கவேண்டும் என தென்னாபிரிக்க அணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளதால் சர்ச்சை உருவாகியுள்ளது.

இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளிற்கு இடையிலான முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் இந்த வேண்டுகோளைதென்னாபிரிக்க அணியினர் விடுத்தனர்.

இரண்டாவது நாளின் இறுதி ஓவரிற்கு முதல் ஓவரை ஆர்ச்சர் வீசினார்.அவரின் ஐந்தாவது ஆறாவதுபந்துகள் பீமர்களாக காணப்பட்டன.

அவர் பீமர்களை வீச முயலவில்லை நக்கிள் பந்தைவீச விரும்பினார் ஆனால் அதுபீமராக மாறிவிட்டதை தொலைக்காட்சி ரீபிளேக்கள் காண்பித்தன.

இரண்டு பீமர்களை தொடர்ந்து ஒருவர் வீசினால் அந்த இனிங்சில் அவர் தொடர்ந்து பந்து வீசுவதற்கு தடை விதிக்கவேண்டும் என்பது ஐசிசியின் விதிமுறை.

எனினும் நடுவர் முதலாவது பீமரை நோபோல் என அறிவித்ததுடன் அடுத்த பீமரை நோபோல் என அறிவித்த பின்னர் அதனை இரத்து செய்தார்.

# வில்லியம்ஸனின் தலைமைத்துவம் சிறப்பாக இல்லை - மக்கலம்

எம்.சி.ஜியில் நடைபெறும் 2வது டெஸ்ட் போட்டியின் 2ம் நாள் ஆட்டத்தின் போது வர்ணனையில் இருந்த முன்னாள் நியூஸிலாந்து கப்டன் பிரெண்டன் மெக்கலம் கடுமையாக நியூஸிலாந்தை விமர்சித்தார். மேலும் கேன் வில்லியம்சனுக்கு கவுன்சிலிங்கும் செய்தார் மெக்கலம்.

முதல் டெஸ்ட்டில் போராட்டமின்றி சரணடைந்த நியூஸிலாந்து 2வது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியாவை 467 ரன்கள் அடிக்கவிட்டது. பந்து வீச்சு திடீரென ஆக்ரோஷம் குறைந்தது, பீல்டிங் நிலையும் அருகில் நிறுத்தப்படாமல் தள்ளித்தள்ளி நிறுத்தப்பட்டதால் ஸ்மித், லபுஷேன், பிறகு ட்ராவிஸ் ஹெட், டிம் பெய்ன் ஆகியோரும் எளிதில் ரன்களைச் சேர்த்தனர்.

குறிப்பாக 2-ம் நாள் ஆட்டத்தில் உணவு இடைவேளைக்குப் பிறகு கேன் வில்லியம்சனின் கேப்டன்சியை கடுமையாக விமர்சித்தார் மெக்கலம். உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியவுடன் பகுதி நேர ஆஃப் ஸ்பின்னர் டாம் பிளெண்டலை பந்து வீச வில்லியம்சன் அழைத்தார். ஒரு முறை லார்ட்ஸ் கிரீன் டாப் பிட்சில் உணவு இடைவேளைக்குப் பிறகு நம் இந்திய அணியின் ஆகச்சிறந்த கேப்டனாக கருதப்படும் டோனி சுரேஷ் ரெய்னாவை பந்து வீச அழைத்தது போல் வில்லியம்சன் பகுதி நேர ஸ்பின்னரை அழைத்தது மெக்கலமின் விமர்சனத்துக்குள்ளானது.


இதே அவுஸ்திரேலியாவில் ஏகப்பட்ட தவறுகளைச் செய்த டோனி, 4 விக்கெட்டுகளை அவுஸ்திரேலியா 50 ரன்களுக்குள் இழந்திருந்த நிலையில் மறுநாள் காலை ஒரேயொரு ஸ்லிப் வைத்து பந்து வீசிய கொடூரமும் நடந்தது. அணியிலிருந்தே தூக்கப்பட வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்த பாண்டிங்கை இரட்டைச் சதம் அடிக்க வைத்தது தோனியின் அதிசய கேப்டன்சியினால் என்றால் மிகையாகாது. அதே தவற்றைத்தான் கேன் வில்லியம்சனும் செய்து வருகிறார்.

இந்நிலையில் மந்தமான கேப்டன்சி செய்த கேன் வில்லியம்சனுக்கு மெக்கலம் கவுன்சிலிங் அளித்துள்ளார்.

அது தொடர்பாக அவர் கூறும்போது, "முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தைப் பார்த்தோமானால் அவுஸ்திரேலியா மெதுவே தங்கள் நிலையை வலுப்படுத்திக் கொள்ள அனுமதித்தோம். நான் கேன் வில்லியம்சனின் பெரிய விசிறி, இப்போதும் கூட விசிறிதான், ஆனால் சில வேளைகளில் அவர் ஆர்வமற்ற முறையில் களத்தில் செயற்படுகிறார்.

அதாவது கப்டன்சி பொறுப்பை அவர் மகிழ்ச்சியுடன் செய்வது போல் எனக்குத் தெரியவில்லை. அவுஸ்திரேலியாவை அவுஸ்திரேலியாவில் எதிர்கொள்வது சாதாரணமல்ல ஆனாலும் ஆர்வமற்ற கப்டன்சியினால் தவறுகள் நிகழ்கிறது.

நேற்று காலை நான் கேன் வில்லியம்சனிடம் பேசியது என்னவெனில் 20,000 ரசிகர்கள் நியூஸிலாந்திலிருந்து மெல்போர்னுக்கு வந்திருக்கின்றனர். நியூஸிலாந்து அணி கடும் நெருக்கடியில் இருந்த போதும் அவர்கள் நியூஸிலாந்தின் தேசிய கீதத்தை பாடியபடி இருந்தனர். இந்த அணியை ஒரு பெருமையாக அவர் கள் கருதுவதன் அடையாளம் இது, அவர்கள் நியூஸிலாந்து அணி ஒவ்வொரு போட்டியிலும் வெல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் அல்ல. ஆனால தங்கள் வீரர்கள் முகத்தில் புன்னகையுடன் பாசிட்டிவாக ஆடி எதிரணியினருக்கு அவ்வப் போது அடி கொடுத்து நாங்கள் சுலபமானவர்கள் அல்ல என்று ஆடவேண்டும்என்று எதிர்பார்ப்பவர்கள் என்று தெரிவித்தார்.



# புதிதாக அமைக்கப்பட்ட குளக்கட்டால் பெரும்பத்தை பகுதி விவசாயிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடிமனைகளிலிருந்து வரும் மேலதிக மழைநீரை நெல் வயல்களினுள் உட்புகாதவாறு நீண்டகாலமாக பாதுகாத்து வந்த பெரும்பத்தை வாய்க்கால் மற்றும் வேரப்பிட்டி கல்வந்தாழ்வு வாய்க்கால் என்பன அழிக்கப்பட்டன.

மருத்துவ அதிகாரி ஒருவரால் எவ்வித அனுமதியுமின்றி புதிதாக ஒரு குளக்கட்டு அமைக்கப்பட்டது. இதனால் பெரும்பத்தை தடுப்பணைக்கு மேலதிக மழைநீர் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.


இவ்வருடம் பெரும்பத்தை பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இன்னும் சில நாட்களில் நெல் அறுவடைக்குத் தயாராகவுள்ளனர். எனினும் வயலில் தேங்கியிருக்கும் மேலதிக மழைநீரை வெளியேற்றித் தருமாறு பெரும்பாக உத்தியோகத்தரிடமும் பிரதேச செயலரிடமும் விவசாயிகளும் விவசாய சம்மேளனத்தினரும் கடந்த வியாழக்கிழமை வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கமைய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலர், பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் வயல்களைப் பார்வையிட்டு வயலிலுள்ள மேலதிக நீரை அனுமதியின்றி அமைக்கப்பட்ட குளக்கட்டினை வெட்டி தடுப்புப் பலகை ஊடாக வெளியேற்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும் இந்தக் கூட்டத்துக்கு வருகை தந்த சிலர், புதிதாக அமைக்கப்பட்ட குளக்கட்டினை வெட்டிவிட முடியாது எனக் கூறினர். அதனை ஏற்ற அரச அதிகாரிகள், விவசாயிகளுக்கு எந்தவொரு தீர்வினையும் வழங்கவில்லை எனக் குற்றம்சாட்டப்பட்டது.

அத்துடன், இந்த விவகாரத்தை வேண்டுமென்றால் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவித்து தீர்வைப் பெறுமாறும் அதிகாரிகள் விவசாயிகளுக்கு பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்தனர். (இ-9)

# குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறினார் மகேஷ்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான ஜெனரல் மகேஷ் சேனநாயக்க குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியதாக தகவல் வெளியாகினது.

டுபாயிலுள்ள ஒரு அமெரிக்க நிறுவனத்தில் பணியாற்றுவதற்காக அவர் தனது குடும்பத்துடன் அங்கு சென்றதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் இவ்விடயம் தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிவித்தல்கள் எதுவும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)


## உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சி-2020

இது அயர்லாந்து பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தப்படும் 500 மணித்தியாலங்களை உள்ளடக்கிய ஒருவருடப் பயிற்சி நெறியாகும். இக்கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வோருக்கு அப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழோடு தேசிய தொழில்வாண்மைச் சான்றிதழும் (NVQ - Level 6) வழங்கப்படும். சனி,ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் காலை 9 மணியிலிருந்து மதியம் 2 மணிவரை விரிவுரை மற்றும் பயிற்சிகள் இடம்பெறும்.

**தகைமைகள்**

க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி

வயதெல்லை 20-40 வரை

கற்கை ஊடகம் - தமிழ்

சுய விபரக்கோவை, உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவச் சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் மற்றும் ஒரு அண்மைய போட்டோவுடன் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 08-01-2020 அன்று அல்லது அதற்கு முன்னதாக அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

இப்பயிற்சிக்கான விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். க.பொ.த.(உ/த) மாணவர்களின் நலன் கருதி விண்ணப்ப முடிவு திகதி 08-01-2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**மேலதிக விபரத்திற்கு: 077 476 6891, 076 937 8476.**
**அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் இயக்குநர்.**

**அகவொளி: குடும்பவள சேவை நிலையம், சென்.பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.** (1626)



## வேலைவாய்ப்பு

நல்லூரில் அமைந்துள்ள திருமண அழைப்பிதழ் காட்சியறைக்கு பெண் வேலையாள் தேவை.

குறிப்பு: அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புக்கு: 076 826 7703** (1613)



SLIIT ACADEMY



வாய்ப்புகள் நிறைந்த உலகினுள்ளே முன்னேறிச் செல்லுங்கள்

இங்கிலாந்தின் Bedfordshire பல்கலைக்கழகம் லிவர்பூல் ஜோன் மூரேஸ் பல்கலைக்கழகம் என்பன இலங்கை பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்று வழங்கும் பல்வேறு கற்கை நெறிகளை SLIIT அகடமியில் பூர்த்தி செய்து வாய்ப்புகள் நிறைந்த உலகினுள்ளே பிரவேசியுங்கள்.

2020 உள்வாங்கல்கள் ஆரம்பமாகியுள்ளன.

குறைந்தபட்ச தகைமைகள

தகவல் தொழில்நுட்பம்/வணிக நிர்வாகம்: க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒரு பாடத்தில் சித்தி

பொறியியல் விஞ்ஞானம்: கணிதம தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் துறையில் 02 பாடங்களில் சித்தி

| DEGREE PROGRAMMES 3 years | |
|---|---|
| BSc (Hons) Computer Science and Software Engineering | |
| BSc (Hons) Computer Networking | |
| BA (Hons) Business Administration | |
| BSc (Hons) Human Resource Management | UOB |
| BEng (Hons) Electronic and Electrical Engineering | LJMU |

"திறனறியும் பரீட்சை

2020 ஜனவரி 18
மு.ப.10.00 – மு.ப.11.00

13வது மாடி BOC மேர்சர்ண்ட் டவர் 28 புனித. மைக்கேல் வீதி கொழும்பு 03."

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

University of Bedfordshire

மேலதிக விபரங்களுக்கு 0772 66 55 55

www.sliitacademy.lk

sliitacademy@sliit.lk



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### சீனியன் சிவமூர்த்தி

(பிரதேசசபை உத்தியோகத்தர்)



தோற்றம் 15 . 03 . 1962

மறைவு 01 . 01 . 2017

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தது
உம் சிரித்த முகத்தை எம்மால்
மறக்க முடியவில்லையே
எம்மில் எம் நினைவில்
முதலாய் உம் நினைவுகளே
முந்தி நிற்கின்றன...
29.12.2019 இன்று நினைவு கூருகின்றோம்.

பிராமணன் தோட்டம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

077 288 1862

குடும்பத்தினர்

(C-8679)



## கண்ணீர்ப் பூக்கள்





அமரர் திரு கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா

தோற்றம் 14.04.1942 மறைவு 19.11.2011

திதி: 29.12.2019

அமரர் திருமதி ஸ்ரீஸ்கந்தராசா கனகாம்பாள்

தோற்றம் 10.05.1945 மறைவு 08.01.2019

ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் ஆறவில்லை எம் சோகம்
மாறாத் துயரைத் தந்துவிட்டு நீங்கள் மீளாத் துயிலில் சென்றதென்ன?
பார்க்கும் இடமெல்லாம் எங்கள் பார்வையினால் தேடுகின்றோம்
நீக்கமற எம் நெஞ்செல்லாம் நிறைந்தவர்கள் நீங்களன்றோ?
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(1616)

சில்லாலை வடக்கு, சில்லாலை.

உங்கள் பிரிவால் வாடி நிற்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# அனைத்துக் குறைகளையும் நீக்கி நல்வாழ்வளிக்கும்

# ஓம் நமசிவாய லிகித ஜபமும் சிவ ஆராதனையும்

## திருவெம்பாவை பத்துத்தினங்களும் ஓம்நமசிவாய மந்திரத்தினை இயன்றவரை எழுதவும் வீணாகான குருபீட குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

ஓம் நமசிவாய ஆத்ம சுகம் தரும் மஹாமந்திரம். பிறவிப் பிணி போக்கும் மந்திரம். பூவுலகில் அனைத்து சுகங்களையும் தரவல்ல மந்திரம். இம்மந்திரத்தின் ஒலி எம்மனதினுள் மறைந்திருக்கும் சக்திகளையெல்லாம் வெளிக்கொணரும் திவ்ய மந்திரமாகும். எம்மைப் புனிதப்படுத்தும் மந்திரமாகும். மனவேதனைகளையும் கவலைகளையும் போக்கவல்ல மந்திரம். நாம் எண்ணுகின்ற அனைத்தையும் தருகின்ற மகிமைதரும் மந்திரம். மனவலிமையைத்தருகின்றது. தீயபழக்கவழக்கங்களில் இருந்துவிடுபடவும் நல்லொழுக்கம், நற்சிந்தனை செயற்பாடுகளைத் தருகின்ற மந்திரம் என சண்டிலிப்பாய் ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் வீணாகான குருபீட குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

பஞ்சபூதங்களின் மந்திரம். ந-நிலம், ம-நீர், சி-அக்னி, வா-காற்று, ய-ஆகாயம் என பஞ்சபூதங்களின் சேர்க்கை ஓம் நமசிவாய. பஞ்சபூதங்களின் அதிபதி சிவன். பஞ்சபூதங்களின் ஆகர்சன சக்தியை வசப்படுத்தி நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் நல்வாழ்வு பெற்றிட சொல்ல வேண்டிய மந்திரம். சிவனின் மூலமந்திரம். விநாயகர் முதலான தெய்வங்கள், தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள், தவயோகிகள், நாயன்மார்கள், சித்தர்கள் என அனைவராலும் போற்றப்படும் மந்திரம் ஓம் நமசிவாய மந்திரமாகும்.



சிவனின் மஹாமந்திரத்தினை மார்கழி திருவெம்பாவை புனிதமான பத்துத் தினங்களும் ஓதியும் எழுதியும் தியானித்தும் திருவருள் பெறுவோம்.

குழந்தைகள், மாணவர்கள், முதியவர்கள், பெண்கள் என அனைவரும் இம்மந்திரத்தினை 108, 1008, இலட்சம் என இயன்றவரை எழுதவும்.

எழுதிய மந்திரங்களை 18.01.2020 சனிக்கிழமை சண்டிலிப்பாய் ஸ்ரீ ப்ரமவித்யா அம்பாள் சமேத சுவேதாரண்ணேஸ்வரர் பெருமான் சகித ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் நடைபெற இருக்கும் சிவ ஆராதனையின் போது மகாலிங்கப் பெருமானுக்கு உங்கள் கைகளினால் மஞ்சன அபிஷேக ஆராதனைகளை செய்து உங்கள் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறிட சிவன் பாதம் சமர்ப்பித்து விடுங்கள். சிவ ஆராதனையின் போது வேத திருமுறை, வீணா வேணு நாதஸ்வர மிருதங்க வாத்திய நிருத்த உபசாரங்களுடன் ஆராதனை நடைபெறும். எழுதிய மந்திரங்கள் உங்கள் வாழ்விற்கும் குடும்பத்தினரது நல்வாழ்விற்கும் இடப்படும் ஆன்மீக முதலீடாகும். நற்றுணையாவது நமசிவாயவே திருவருள் பெறுவீர்களாக என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நடமாடும் சேவை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி ஆதனவரி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் பெயர் மாற்றப்படிவம் வழங்கல், 2020 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்களை (K From) வழங்கல் ஆகியசெயற்பாடுகள் நாளை 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டாரம் 19, 21 இற்கான நடமாடும் சேவை மஸ்ர உதீன் பலர் பாடசாலையில் இடம்பெறும் என ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ

# குளவிக் கூட்டிற்கு கல்லெறிவதைத் தடுக்கவும்

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி கடிதம்

(யாழ்ப்பாணம்)


தாங்கள் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன்பின் தங்களுக்கு நான் எழுதும் இரண்டாவது கடிதமாகும். பிரச்சினைகளுக்குரிய விடயங்களில் நான் எவ்வாறு செயற்பட்டுவந்துள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காத சிலர் திட்டமிட்டு குழப்பி பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள்.

தேசிய கீதம் ஒவ்வொருவரும் தமது தாய்நாட்டைப் புகழ்ந்து பாடும் பாடலாகும். எவரையேனும் குளவிக்கூட்டிற்கு கல்லெறிய அனுமதிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டினார்.

மனச்சாட்சி உள்ள எவரேனும் இந்தவிடயத்தில் தலையிடமாட்டார்கள். ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த மொழியில் தமது தாய் நாட்டை புகழ்ந்து பாடுவதையே விரும்புவார்கள். அது ஒரு மனிதனின் அடிப்படை உரிமையுமாகும். குறிப்பிட்ட ஒரு மொழியில் பாடவேண்டும் என வற்புறுத்துவது எதிர்காலத்தில் விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு வழிவகுக்கும். தமிழ் பேசும் மாணவர்கள் தமக்கு தெரிந்த மொழியில் மனப்பாடம் செய்து வைத்துள்ளார்கள. தங்களை சங்கடப்படுத்துவதற்காக இதனை எழுதவில்லை. ஒரு முதிய அரசியல்வாதியின் நல்லாலோசனையாக ஏற்றுக்கொள்ளவும் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)



யாழ்.நாவலர் வீதியிலுள்ள சீரடி சாயி பாபா மந்திர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற கலைக்குரிசில் இராசையா ஸ்ரீதரன் எழுதிய "சிறுவர் கதைக்கொத்து" நூல் வெளியீட்டு நிகழ்வின் போது யாழ்.ஆனைப்பந்தி நாவலர் இன்ஸ்ரிரியூட் இயக்குநர் சி.குணாளன் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

# திருவெம்பாவை உற்சவமும் திருவாதவூரடிகள் புராண படிப்பும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களில் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை அதிகாலை 4.15 மணியளவில் கும்ப பூஜையுடன் பூஜைகள் ஆரம்பமாகி திருவெம்பாவை உற்சவம் இடம்பெறவுள்ளது.

திருவெம்பாவை உற்சவம் நிறைவைத் தொடர்ந்து திருவாதவூரடிகள் புராண படிப்பு நிகழ்வு திருவெம்பாவை தினங்களில் தினமும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 10.01.2020 வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் ஆருத்திரா தரிசன அபிஷேகம் இடம்பெற்று சுவாமி உள் வீதி வெளி வீதி வலம் வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளது. (இ






Jaffna Academy of Education உயர் கல்வி நிறுவனம் தொலைக்கல்வி பயின்ற 65 பட்டதாரிகளுக்கு சான்றிதழ் வழங்கிய நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி திருநெல்வேலி சிவகாமி மஹால் மண்டபத்தில் நிறுவனப் பணிப்பாளர் ப.பாலமுகுந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் மா.சின்னத்தம்பி, யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரங்கேற்ற அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் சர்வோதயம், கலாலயம் ஆகியவற்றின் அனுசரணையுடன் குரலோசை - நுண்கலைகளின் தாயகத்தின் ஈழத் தமிழிசை அரங்கேற்ற நிகழ்வின் அறிமுக விழா இன்று 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தொல்புரம் சர்வோதய நிலையத்தில் இடம்பெறும். (இ-5)

## A State of the art Food processing factory to be Commissioned in Iyakachchi – Northern Sri Lanka requires the following Staff

### FACTORY MANAGER

Graduate with Managerial Experience in Manufacturing Industry.

8 to 10 years experience in Food Processing or in related industry with exposure to Lean Management is essential

Ability to lead, motivate and train a good workforce to take the company forward to cater for the global market.

### SENIOR PRODUCTION EXECUTIVE

Senior Production Executive to have a degree in Food Processing or in the related discipline with 8 years' experience in Food Processing or in a relevant industry.

Experience in HACCP, ISO and GMP will be an added advantage

### PRODUCTION EXECUTIVE

Production Executive to have a degree or equivalent in Food Processing / Food Technology or in a related subject.
Candidate to have minimum 4 years' experience in Food Processing or in a related industry.

Experience in HACCP, ISO and GMP will be an added advantage.

### TRAINEE EXECUTIVE

Candidates with degree in Food Processing / Food Technology with good communication skills could apply.

Candidates residing in close to Iyakachchi is preferred.

Attractive remuneration awaits the right candidate.

All applications must reach us within 10 days of this advertisement addressed to -

mdheritagepremierfoods@gmail.com

Managing Director
HERITAGE PREMIER FOODS (PRIVATE) LIMITED
¾, Rockwood Place
Colombo 07.


## வகைதொகையின்றி இடம்பெறும்

# மணல் அகழ்வைத் தடுக்கக்கோரி ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மகஜர்

(சாவகச்சேரி)

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கக் கோரி சமூக ஆர்வலர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் யாழ்.மாவட்ட செயலகம் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று முன் தினம் வெள்ளிக்கி ழமை மகஜர்ஒன்றை அனுப்பி வைத்தார்.

அதில் மண் என்பது உலகின் இயற்கை ஆதாரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வளமாகும். ஓர் அங்குல மண் உருவாகுவதற்கு 300-1000 வருட காலம் தேவைப்படுகிறது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் பரந்து விரிந்து காணப்படும்இயற்கை மணல் வளம் தற்போது வகை தொகையின்றி சட்ட விரோதமாகபல்வேறு தரப்புக்களாலும்அகழ்ந்தெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இதன் காரணமாக தமிழர் தாயகப் பிரதேசங் களில் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பயிர்ச்செய்கை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இயற்கை வளம் அழிக்கப்படுகின்றது. உயிரினாங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே சட்ட விரோதமாக மண் அகழ்வது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும்தரப்பினர் அனுமதியின்றி மண் அகழ்பவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இயற்கை வளங்கள்சூறையாடப்படுவதனைத் தடுப்பதற்கு அரச கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டுபொது மக்கள் இலகுவான முறையில் தமக்கான கனிய வளங்களைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுசெய்யப்பட வேண்டும் எனக் குறித்த மகஜரில் அவர் சுட்டிக் காட்டினார்.

குறித்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக்கோரி நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-30)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

மணமகள் தேவை
பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, HND, விவசாய போதனாசிரியர்
எதிர்பார்ப்பு:அரசதொழில்
தொ.இ: B/10333

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
உயரம்:5'3"
தகைமை/தொழில்A/L, விற்பனை முகாமையாளர்
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/10335

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:சித்திரை 3
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்:O/L, சொந்தகடை
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/10338

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: 47 ¾ சூரிசெவ் 7 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:M.Sc, Engineer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/10339

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 13செவ் 8 இல்
உயரம்:153cm
தகைமை/தொழில்:BA பட்டதாரிஆசிரியர்
எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்
தொ.இ: G/10337

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 31
தகைமை/தொழில்:Pharmacist Assistant, CANADAஎதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: G/10341

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம்3
கி.பா: 53செவ் 7 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:B.Sc, Following Chartered Accountant, உதவிகணக்காளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: G/10343

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 16செவ் 8 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:A/L, ஆசிரியை
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/10344

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## இராசி பலன்

29.12.2019
மார்கழி 13,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
திருதியை பிற்பகல் 12.56 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.25மணிவரை
சுபநேரம் 9.28-10.58 மணிவரை
இராகுகாலம் 4.58-6.28 மணிவரை
கெர்ப்போட்ட ஆரம்பம் (இரவு 10.21 மணிக்கு)
வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பூநர்பூசம்,பூசம்

ராகு | சந் சுக் | சனி, சூரி புத குரு, கேது | செவ்

**மேடம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஒளிமயமான எதிர் காலத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மிதுனம்:** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், பேச்சில் நிதானம் தேவை.

**கடகம்:** உங்களின் கருத்துக்களைப் பலரும் ஏறு நடப்பர், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**சிம்மம்:** நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறலாம், பழைய கடன்களை வசூலாக்க எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பகைவர்கள் விலகுவர், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**துலாம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பேச்சில் கனிவு பிறக்கும், தாய்வழி ஆதரவு பெருகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், சுப நிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், சிந்தனை மிகுதியான நாள், பெரியோர் சந்திப்புண்டு.

**கும்பம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பாராத சில நன்மைகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயம் கிடைக்கலாம்.

**மீனம்:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


# பாராட்டி வாழ்த்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை VTA , கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறியினை கற்று

நடைபெறுகின்ற பரிசளிப்பு வைபவத்தில் சான்றிதழ் மற்றும் விருதுகளை பெ



B.PREMAN J.RATHEESAN S.SRIPARAN S.JASOTHARAN T.PIRATHEEPAN P.PRASHANTHY R.DILAKSHANA S.NILANI R.KAGITHA P.THUSHALINY T.TH



K.RAGITHA R.SIYANTHINY J.PRASANYA R.VITHURSAN V.SARANYA V.LAXSIGA M.KAYANTHARUBY A.KURINCHINILA A.SUKIRTHA K.THAMILMATHY N.THIN



K.ROOPIKA T.VASUKY V.NATHIYA T.DOHINY V.KOKILA S.PRIYATHARSHINI S.PRASALINY R.KOKILADEVI T.JEGEEVAN R.DAYALINY U.SUB



J.RAMZIYA K.THILAKSANA K.VIRUDSIKA M.Fathima Apzan V.DAYANI M.JIVISHNA K.SUJITHA A.PIRIYATHARSINY T.KEERTHTHANA T. YUKENTHINI M.THAL



S.DANIYAL J.THANUSAN A.THUYENTHINY N.THENUYA R.VITHUSAYINI S.KANISTA MARY V.SHOBANA T.DANUJAN K.SATHURSHANA M.SASIKALA S.YOK



A.HAMILSHA B.KIRISANTHAN B.SRIPRIYA G.KAVITHALOJINI K.SARANIKA J.KIYANTHAN P.GAJANIGA K.DILAKSANA K.JAGURSAN K.THILAKSANA K.THUV




V.VIBUSANA S.NIROSHANTH S.ROSHANY T.ANOJA T.ANOJA T.MITHULA T.KAJAN V.MOHANA T.LUXSHIGA T.SAKATHEVAN S.SIVASH



A.NIROSAN V.HARTHTHI K.VALARMATHY S.PIRASANNA K.PRAKASHRAJH P.KAJEEVAN V.VENILAN E.NITHARSAN R.VINITH P.THAJEEPAN V.JEYA



T.KUNARAJ K.DILAKSANA T.RAMMIYA T.DISHANTH R.SANGEETHAN X.VITHUSAN P.SUTHARSAN V.RISHAN S.ANUSAN M.SATHURJAN S.SEEMO



P.PIRAJUN A.SUJANTHAN V.KEERTHTHIYAN P.GANAKUMAR K.MAHINTHAKUMAR U.TAMILINY S.SENNILAVAN RAVINTHIRARASA VARUDSAMERI

### கிளிநொச்சி ம


கிளிநொச்சி மாவட்டம் சகலது
கியிருப்பதுடன் அதன் வளர்ச்சி
பட்டு மிகவும் பின்தங்கிய நிலை
குவித்து சிறந்த சமுகத்தைக் க
தொழிற்பயிற்சி நிலையத்தில் தே
களையும் அவர்களை வழிநடத்தி
மனிதர்களாக மிளிரவேண்டும் எ

# ...ழ்த்துகின்றோம்

...னை கற்று பூர்த்தி செய்த மாணவர்களுக்கான NVQ விருது வழங்கும் நிகழ்வு 29-12-2019 [இன்று] கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் ...துகளை பெறும் தொழிற்பயிற்சி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



NY T.THIPIYA N.RAJITHA I.THINUSIYA S.SINAJINY P.GOWSIKA J.KOWSY K.SIVATHARUKA S.THURKA R.SHALINY R.THIVAKAR



THY N.THINESHA S.SENTHURA J.MATHINILA R.KEERTHTHANA J.VIJITHARAN P.LAJEETH T.REGA T.SAJEENA V.KOKILA L.SARANIKA



Y U.SUBAHINY S.JANANI E.MANGAIYATKARASI B.DILAKSHANA P.SRILOGINI N.NAMOTHARAN M.NITHUSHA P.KAJANI K.THUSHANTHAN K.SHAKITHA



INI M.THADSAJINI P.DISHANTHAN R.LAKSHANA S.HAMSATHVANY R.KALAIMATHI S.UTHAYATHEEPAN V.DIVETHA V.THIVIJA S.THARSANA P.MATHUSHA



A S.YOKAPRIYA U.LAXSHANA R.THULASIKA S.THARSHY K.HABILA T.DINOYA S.KANANIGA A.KOGINY R.JEYANTHIRAN P.SUJEEVA



NA K.THUVANSALY M.AJITHTHA M.DISHANTHINI M.SOBANA R.RASHINTHA P.DIVYA R.RASHINTHA S.DANUSIYA S.GAYATHRY S.MATHUSA



AN S.SIVASRITHARAN B.KALA S.RATHAI Y.KUMUTHINY T.ANULA S.SIVARAJINY S.KIRUSHNA S.THUSJANTHAN J.JEYASEELAN M.VIRITHTHIKA



AN V.JEYATHUYAN K.ISWARYA V.KUVENTHINI S.ANOJAN J.DANUJITHAN J.VINITTAN S.NARTHANA L.SRITHARAN J.JENSON A.KIRUSHANTHINI



N S.SEEMONSHANTH P.PUSHBAKARAN D.JEYANESAN R.SANGEEVAN T.YUVANTHAN A.AJANTHAN T.KOKILATHAS D.H.SARUJAN S.NITHOORAN K.MATHUSHA

### ...கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் மனதில் இருந்து...

...ட்டம் சகலதுறைகளிலும் தேர்ச்சியும் புகழும் கொண்ட மாவட்டமாக பல்துறைசார் விற்பன்னர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக் ...தன் வளர்ச்சிவீதம் உயரியளவில் இருந்து வருகின்றமை வெளிப்படையாக காணக்கூடியதாக உள்ளது. இந்தவகையில் போரால் பாதிக்கப் ...தங்கிய நிலையில் இருந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்கல்வி மூலம் தொழில்நுட்ப கல்வியை வழங்கி சுயதொழில்வாய்ப்புக்களை ஊக் ...சமுகத்தைக் கட்டியெழுப்ப இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை அரும்பெரும் பணியாற்றிவருகின்றது. கிளிநொச்சி மாவட்ட VTA ...லையத்தில் தேசிய தகமைக்கான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து இன்று NVQ சான்றிதழ்கள் மற்றும் விருதுகளைப் பெறும் மாணவர் ...ளை வழிநடத்திய ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு இவர்கள் எமது மாவட்ட முன்னேற்றத்துக்காக தமது பணிகளை செய்து தலைசிறந்த ...ரவேண்டும் என எனது நல்லாசியை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.



திரு.சி.சத்தியசீலன் மேலதிக மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி மாவட்டம்.

### VTA கிளிநொச்சி, மாவட்ட உதவிப்பணிப்பாளர் வழங்கிய வாழ்த்துச் செய்தி...

இன்றைய இனிய நாளிலே தேசிய தொழில் தகைமை (NVQ) விருது பெறும் விருதாளர்கள் வளம் பல பெற்றும் பட்டங்களால் சிறந்து நோய் நொடியின்றி வாழ வாழ்த்துகிறேன்.

"தொழிற்பயிற்சியை உயர்த்துவோம் தொழிற்பயிற்சியால் உயர்வோம்."



- இரா.அகிலன்...


## வாழ்த்துபவர்கள்

VTA சமூகம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நண்பர்கள்

# யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தூங்குகின்றன வழங்கப்பட்ட அதிகாரங்களையாவது பயன்படுத்த வேண்டும்

## முன்னாள் பிரதிச் செயலர் கிஸ்னேந்திரன் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பல வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கூட மக்கள் நலன்களுக்காகப் பயன்படுத்த தெரியாமல் தூங்குவதாக முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதிச் செயலாளர் எஸ்.கிஸ்னேந்திரன் தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூரிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வில் வளவாளராகக் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1980 ஆம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட காலப் பகுதிகளில் பட்டின சபைகள் இல்லாமல் செய்யப்பட்டு பிரதேச சபைகள் தோற்றம் பெற்றன.

மக்கள் பங்குபற்றல் முறையிலான ஜனநாயக ரீதியான பண்பியல்புகளில் ஈடுபடச் செய்வதற்குமாக உள்ளூராட்சி மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அதிகாரங்களும் வழங்கப்பட்டன.

இந்திய அரசியலமைப்பில் பஞ்சாயத்து முறை அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் கிராமப் புறங்கள் துரித வளர்ச்சியடைந்தன.

அதனைச் சார்ந்தே 13 ஆவது திருத்தச்சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், சட்டதிட்டங்கள் என்பன தெளிவாக வரையறுக்கப்பட்ட போதிலும் பிரதேச சபைகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கூட பயன்படுத்தாமல் விடுகின்ற நிலை தமிழ்ப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றது.

மக்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகளுடன் கலந்துரையாடாமல் திட்டங்களை வகுப்பதும் செயற்படுத்துவதும் எதிர்வரும் தேர்தலில் தமது வாக்குகளை பெருக்குவதற்காகவா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

பிரதேச சபைகள் தமக்குரிய அதிகாரத்தைப் பிரதேச செயலகங்களுக்குக் கொடுத்துவிட்ட நிலையில் அதிகாரிகளும் அதற்கேற்ப செயற்படுகின்ற நிலையும் காணப்படுகிறது.

பிரதேச சபைகளின் செயற்பாட்டுக்கு கரையோரப் பாதுகாப்புச் சபை, மின்சாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன இடையூறாக ஊடுருவியுள்ள நிலையை அவதானிக்க முடிகிறது.

ஒரு பிரதேச சபையானது தனது பிரதேசத்திற்குரிய கலை, கலாசார விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதோடு அவற்றின் பாதுகாப்புக்குரிய சட்ட ஏற்பாடுகளும் அபிவிருத்திக்கான சட்ட ஏற்பாடுகளும் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

எனினும்அதிகாரங்கள்போதாது மத்திய அரசுதடையாக அமைகிறது எனப் பேசுவோர் முதலில் தமக்குக் கிடைக்கப்பெற்ற அதிகாரங்களூடாக மக்களுக்குச் சேவையை வழங்கியுள்ளோமா? எனச் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# அரசியல் பழிவாங்கல்களால் அரசு மீது கடும் அதிருப்தி

## பொதுத் தேர்தலில் மக்களின் கண்கள் திறக்கும் ஹிருணிகா நம்பிக்கை



(கொழும்பு)

உண்மையில் தற்போதைய ஆட்சியாளர்கள் அவர்களது திறமையால் ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவில்லை. மாறாக எமது தரப்பினரின் திறமைக்குறைவாலேயே தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் இடம்பெற்றுவரும் சில விடயங்கள் நாட்டைப் பாதிக்கும் விதமாக அமைந்துள்ளன. எதிர்வரும் பொதுத்தேர்தலில் என்றாலும் மக்களின் கண்கள் திறக்கும் என்று நம்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் இடம்பெற்றுவரும் சில விடயங்கள் நாட்டைப் பாதிக்கும் விதமாக அமைந்துள்ளன.

அரசாங்கத்தின் செயற்பாடுகள், நாட்டின் நிலை என்பன குறித்து சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் கருத்து வெளியிட்டு வந்த இருவரில் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.மற்றையவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் கூட, தற்போது அதன் அரசியல் பழிவாங்கல்களால் பெரிதும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள்.

உண்மையில் கடந்த 2004 ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க லக்ஷ்மன் கதிர்காமரையே பிரதமராக .நியமிப்பதற்குத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவர் வேறொரு இனத்தவர் என்பதால் சம்பிக்க ரணவக்க தலைமையிலானோரே மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்குவதற்கு முன்னின்று செயற்பட்டனர். அதேபோன்று "மகிந்த சிந்தனை" என்ற புத்தகமும் சம்பிக்க ரணவக்கவாலேயே எழுதப்பட்டது. மகிந்தவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்த மிகச்சொற்பமான கற்றறிந்தவர்களில்சம்பிக்கவும் ஒருவர்.

எனவே அரசியலைப் பொறுத்தவரை அவர் எதிர்காலத்தில் முக்கியத்துவமிக்க இடமொன்றை அடைவார் என்று தற்போதே ஆளுந்தரப்பு அச்சமடைந்திருக்கிறது.

மேலும் வழமையாக தேர்தல் மேடைகளில் அவர்கள் யுத்தம் தொடர்பிலும், பொருட்களின் விலையதிகரிப்பு குறித்துமே பேசுவார்கள்.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொருட்களின் விலையதிகரிப்பு குறித்துப் பேசுவதற்கு எதுவுமிருக்கவில்லை. எனவே உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் பற்றிப் பேசினார்கள்.

றிஷாத் பதியூதீன் வில்பத்து வனத்தை அழிப்பதாகவும், ரவூப் ஹக்கீம் மற்றும் ஷாபி தொடர்பாகவும் பேசினார்கள். ஆனால் தேர்தல் முடிவடைந்த பின்னர் அவர்களையல்லவா கைது செய்ய வேண்டும்? ஏன் அவ்வாறு செய்யவில்லை? ஏனெனில் அவர்கள் மீது எவ்வித குற்றமும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுவிடும். மாறாக அரசாங்கத்திற்கு எதிராக வலுவான கருத்துக்களை முன்வைக்கும் சம்பிக்கவும், ராஜிதவும் இலக்கு வைக்கப்பட்டார் கள்.


அடுத்ததாக அரசியல் மேடைகளில் வாத, விவாதங்கள் மற்றும் காரசாரமான பேச்சுக்கள் என்பவை மிகவும் சகஜமானவையாகும். கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இலக்குவைத்து பல்வேறு மிகமோசமான கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆனால் அவர் ஜனாதிபதியானதும் அதற்காக பழிவாங்கல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அதேபோன்று தற்போதைய ஆளுந்தரப்பினரால் தேர்தல் பிரசாரங்களின் போது மிலேனியம் சவால்கள் கோப்பரேஷன் உடன்படிக்கை குறித்து பல்வேறு போலிப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஒருவருடைய கருத்துக்களுக்காக நடவடிக்கை எடுப்பது என்றால் இவ்விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும் எமது அரசாங்கம் ஆட்சியிலிருந்த போது அரச வைத்திய அதிகாரிகள், புகையிரத ஊழியர்கள், பேருந்துச் சேவை ஊழியர்கள் என அனைவரும் வேலைநிறுத்தப் போராட்டங்களை மேற்கொண்டனர்.

தற்போதும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் போராட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. இதிலிருந்து இவர்களுடைய போராட்டங்களின் பின்னணியில் யார் இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# 6000 பேருக்கு போலி நியமனம் கடந்த அரசு மீது கருணா புகார்

(கொழும்பு)

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் 6 ஆயிரம் பேருக்கு அரசியல் தேவைக்காக போலியான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் புதிய ஜனாதிபதியின் ஆட்சி 10 வருடத்திற்கு மேல் நீடிக்கவுள்ளது எனவும் முன்னாள்பிரதியமைச்சர்வி.முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்திப் பணிகள், வேலைவாய்ப்புக்கள் என்பன அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்புதான் பாரியளவில் முன்னெடுக்கப்படவுள்ளன. கடந்த அரசாங்கத்தில் ரணிலால் 1300 பேருக்கு இரண்டாம் மொழி ஆசிரியருக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் 6 ஆயிரம் பேருக்கு அரசியல் தேவைக்காக போலியான நியமனங்கள் எந்தவித அமைச்சரவையினதும் மற்றும் நிதியமைச்சின் அனுமதியின்றி வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு நியமனம் பெற்றவர்கள் ஏமாறப்பட்டுள்ளார்கள்.

அவை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதனையும் எமது புதிய அரசாங்கத்தின் பிரதமருக்கே சரி செய்ய வேண்டியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் இனியாவது நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். கடந்த 5 வருட ஆட்சியில் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவேயில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்-2019

## யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி

**கணித, விஞ்ஞானப் பிரிவு**

சி.சிவதர்சன்-ஏபிசி, கெள.யதுசன்-ஏ2சி, கே.கெலிஸ்ரன்-ஏ2சி, யோ.டிலக்சன்-ஏசிஎஸ், பி.தனுசன்-ஏசிஎஸ், இ.சிவாஜன்-2பி.சி, ஜீ.சுவஸ்திகன்-பிசிஎஸ், ர.டிலக்சன்-2பிஎஸ், சி.கயூரன்-பி2எஸ், ம.மதுசன்-2சிஎஸ், ஜெ.கஜீபன்-சி2எஸ்.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு**

சு.சுரேந்திரன்-2பிசி, ர.துதிசன்-பிசிஎஸ், பு.துவாரகா-3சி, ர.சரணிகா-2சிஎஸ், சி.சந்துஜா-2சிஎஸ், செ.அஜித்தா-2சிஎஸ், சி.யோன்பிளேமிங்-2சிஎஸ், யோ.ரிலக்சன்-சி2எஸ்,சு.சோபாசினி-சி2எஸ்,க.குமரன்-சி2எஸ், லோ.டிலாஜினி- சி2எஸ்.

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**

ம.யந்துசன்-ஏ2சி, கு.டனுயன்-2பிசி, கே.கஜந்தினி-2பிசி, வி.கிருஸ்ணஜெயன்-2பிசி, பு.எவ்றிக் ஏனோஜ்-2பிசி, கி.கவிராஜ்-3சி, வி.நேசராஜ்-பிசிஎஸ், ஸ்ரீ.பிரதீபன்-3சி, ஞா.பீஸ்மன்-பி2எஸ், செ.பிரசன்னா-2சிஎஸ், ஜெ.மதனராஸ்-2சிஎஸ்.

**வணிகப் பிரிவு**

செ.கலாகரன்-ஏ2சி, பா.கஜீபன்-2பிசி, இ.தனுசியான்-பி2சி, வி.நிசாந்தன்-பிசிஎஸ், கி.ஜெயபிரணவசர்மா-2சிஎஸ், சி.டினேஸ்குமார்-2சிஎஸ், ஜெ.பிரணவன்-2சிஎஸ், சூ.ஜோர்ஜ்பிரவின்-2சிஎஸ், சி.சுபாஸ்-சி2எஸ்.

**கலைப் பிரிவு**

சு.நிதாபன்-ஏ2பி, சி.டிலக்சன்-ஏபிசி, ஜெ.ஜதீஸ்வரன்-பிசிஎஸ், அ.கமில்ரன்-3சி, ச.கீர்த்திகன்-3சி, ப.கோகுலன்-2சிஎஸ், செ.சிந்துஜன்-2சிஎஸ், ஸ்ரீ.சாதுசன்-2சிஎஸ், ஆ.திலக்சன்-2சிஎஸ், ச.அஜீபன்-2சிஎஸ்.

## யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி

**கணிதப் பிரிவு புதிய பாடத்திட்டம்**

பி.கேதாரணி-3ஏ, ஏ.தனஞ்சயன்-2ஏபி, எஸ்.ஜெகதீசன்-3ஏ, எல்.சிவகாந்-3ஏ, ஆர்.பிரணவன்-ஏபிசி, ஏ.நிதுர்ஷன்-பி2சி, பி.குணாஜினி-பி.2எஸ்.

**விஞ்ஞானப் பிரிவு (ஆங்கில மொழி)**

எஸ்.சசிபன்-2ஏபி.

**விஞ்ஞானப் பிரிவு**

கே.அதனா-ஏபிசி, என்.அனற் அஜித்ரா-2சிஎஸ், ஜெ.நிலாந்தி-3சி, யு.உசாஜினி-சி2எஸ்.

**ஏனைய பிரிவு**

பி.துவாரகன்-பி2சி, பி.பிரதாப்-3சி.

**வர்த்தகப் பிரிவு**

எஸ்.விஜீவன்-3ஏ, எஸ்.சிந்துசன்-2பிசி, எம்.அபிதன்-ஏ2பி, எம்.அஜந்தன்-ஏபிசி, பி.சுபாங்கி-பி2சி, பி.பவித்திரா-2பிசி, ஜி.ஹஜீவன்-பி2சி, என்.லக்சிகா-பிசிஎஸ்.

**கலைப்பிரிவு**

என்.வாகினி-ஏபிசி, பி.தர்ஷிகா-ஏ2சி, எஸ்.தயாரதன்-3சி, ரி.சஞ்சீவன்-ஏ2சி.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (B.Tec)**

எஸ்.நிதுர்ஷன்-பி2சி.

**பொறியியல் தொழில்நுட்பம் (E.Tec)**

எஸ்.சாருகன்-பி2சி, யு.ஆர்த்திகன்-3சி, கே.கரிகாலன்-3சி.

**பழைய பாடத்திட்டம் கணிதப் பிரிவு**

எஸ்.ரம்யா-2ஏபி, எஸ்.சுபா-3பி, பி.லக்சன்-3பி, வை.ரகீசன்-ஏ2சி, ஐ.சோபிகா-ஏசிஎஸ், கே.இலக்கனன்-பி2சி, பி.வனிதன்-3சி.

**விஞ்ஞானப்பிரிவு**

என்.சிந்துஜன்-2ஏபி, பி.கஜந்தன்-பிசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

கே.நிலவன்-2ஏசி, ஆர்.விதுசன்-ஏபிசி, ரி.தர்சாந்தி-பி2சி, ரி.நிகாசன்-3சி.

**கலைப்பிரிவு**

எஸ்.அனித்-ஏபிஎஸ், கே.பிரசாந்தன்-ஏசிஎஸ்.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (B.Tec)**

பி.அர்சனா-பி2சி, எல்.நிமானன்-பி2சி, ஆர்.பூர்விகா-3சி, பி.கீர்த்திகா-பி2சி, ரி.தர்சிகா-3சி.

**பொறியியல் தொழில்நுட்பம் (E.Tec)**

எஸ்.சிவபிரியன்-பி2சி, எஸ்.ஆத்மன்-2சிஎஸ், ஐ.திவாகரன்-3எஸ்.

## யாழ்.வட்டு இந்துக் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**

ர.சஞ்சிகன்-3பி, இ.எழில்வதனா-பி2சி, தி.சரணியா-பி2சி, யோ.மாதங்கினி-பி2சி, வி.துசாந்தி-பி2சி.

**கணித்ப்பிரிவு**

ப.புவித்திரா-ஏபிசி, க.நிலுசியா-ஏபிசி, ம.பிரகாஸ்குமார்-ஏபிசி, கு.வினோஜன்-பி2சி, வ.சதிகா-பிசிஎஸ்.

**வணிகப்பிரிவு**

க.ஸ்வர்ணா-3ஏ, அ.தாருஜா-3ஏ, கு.தினுசன்-2ஏபி, ம.சுவர்ணா-ஏ2பி, ப.சுரணியா-ஏபிசி.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்**

அ.சங்கீதா-ஏ2சி, வி.கீர்த்தனா-3சி, சி.ரக்ஷனா-3சி, ஸ்.அஞ்சலிக்கா-3சி, இ.சைந்தினி-3சி.

**இரண்டாம் தடவை தோற்றிய மாணவர்கள்**

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**

ஜெ.வினோதினி-2ஏபி, ச.சோபிதா-ஏபிசி.

**கணிதப்பிரிவு**

க.வித்தியா-2ஏபி, அ.அனுசன்-ஏ2பி, செ.தினேஸ்-2ஏசி, தி.தாரணி-ஏ2பி, இ.வனஜா-ஏபிசி, தே.தஜீவன்-2பிசி, சி.பார்கவி-பிசிஎஸ்.

**வணிகப்பிரிவு**

த.சுஜீவன்-ஏ2பி.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்**

ச.சதுசா-3சி.

**கலைப்பிரிவு**

ச.விதுசா-ஏ2பி, வ.கோகிலதாஸ்-பி2சி, ம.கீர்த்தனா-பி2சி.

**பொறியியல் தொழில்நுட்பம்**

வி.ராகவன்-2ஏபி, ந.அஜித்-2பிசி, சி.சசிகரன்-3பி, க.தர்மராஜ்-2பிசி.

**கலைப்பிரிவு**

எ.லோ.நி.அனுஸ்ரா-3ஏ, க.மயூரன்-2ஏபி, த.திசியா-ஏ2பி, ஜீ.விதுசியா-3பி, யோ.நிலாவினி-ஏ2சி.

**பொறியியல் தொழில்நுட்பம்**

சி.சிந்துசன்-3ஏ, சி.தனுசன்-2பிசி, அ.அன்ரனிரெக்ஸ்-பி2சி, ஆ.பிரதிபன்-பி.2சி.

## யாழ்.மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

**கணிதப் பிரிவு**

ச.லிங்கேஸ்வரன்-3ஏ, தி.மணிமோகன்- 3ஏ, சி.சர்மிலன்-3ஏ, கி.வினோஜன்-ஏபிசி, ஸ்.நிசாந்தினி-ஏபிசி, சி.ஜெயதரன்-ஏ2சி, ப.கேதுஷா-பி2சி, ஜெ.சாகித்தியன்-பி2சி.

**உயிரியல் பிரிவு**

த.ரேணுஜன்-2ஏபி, ம.துஷாரா-3பி, சு.திலக்சனா- 2பிசி, வி.ஷேசகி-பிசிஎஸ்,

**வணிகப் பிரிவு**

ஜெ.றொக்சனா-3ஏ, லோ.துளசிகா-3ஏ, த.கர்சிகா-3ஏ, ப.கீர்த்திகா-3ஏ, க.மதுரா-2ஏபி, அ.யசிந்தா- ஏ2பி, கை.லோகிதாஸ்-3பி, பி.பிரியங்கன்-2ஏசி, கி.பங்கயன்-ஏபிசி, செ.நிருபா-ஏபிசி, த.சகானா-ஏபிசி.

**கலைப் பிரிவு**

த.ரேணுஜா-3ஏ, ஜெ.சஞ்சீவன்-3ஏ, ச.கபில்ராஜ்-3ஏ, சு.திலக்ஸன்-3ஏ, சு.சஞ்சிகா-2ஏபி, ச.அபிசரண்-2ஏபி, க.கஜகரன்-2ஏபி, மோ.திவிசனா-2ஏபி, பா.சாணு-2ஏஎஸ், தி.ஜனனி-ஏ2பி, ச.சஞ்ஜிகரன்-ஏ2பி, ச.மோகன்கீதன்-2ஏஎஸ், கி.டர்வின்-ஏபிசி, ம.மரியலிஷா-ஏபிசி, சூ.சிந்துஜா-ஏபிசி, சு.கோபிகா-ஏபிசி.

## யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி

**கணிதப் பிரிவு (புதிய பாடத்திட்டம்)**

ரி.யுபீரதன்-3ஏ, எஸ்.சிவசுதன்-3ஏ, ஜெ.சப்தனா-3ஏ, ஜி.பவித்ரா-2ஏபி, எம்.ஹர்னன்-3ஏ, வி.றதுஜன்-2ஏபி, எஸ்.விதுஸ்-ஏ2பி, ஏ.அபிநாஸ்-3பி, எஸ்.தர்சன்-2ஏசி, வி.தேனுஜன்-ஏபிசி, கே.எஸ்.சகாஜராஜ்-பி2சி, ரி.சானுகன்-ஏ2சி, ஏ.விஜிதா-ஏசிஎஸ், எல்.கஜசாந்த்-ஏசிஎஸ், ரி.ருசாந்தன்-2பிஎஸ், ரி.இந்திஜனா-பி2சி, அபராஜிதன்-3சி, ரி.தபீசன்-பிசிஎஸ்.

**கணிதப் பிரிவு (பழைய பாடத்திட்டம்)**

இ.மதிலஜனன்-3ஏ, வி.பிரணவன்-2ஏபி, ஆர்.சன்றொன்-2ஏபி, ஜெ.லதுர்சனன்-2ஏபி, ஐ.தர்சன்-ஏ2பி, வி.சசிதரன்-ஏ2பி, ஆர்.எஸ்.மரீன்ராஜ்-ஏ2பி, வி.கௌசிகன்-ஏபிசி, எம்.கீதபிரியா-2ஏசி, வி.பிரின்தன்-ஏபிசி, கே.கோகுலன்-2ஏசி, ஆர்.டிருசன்-ஏபிசி, எம்.நிதர்சன்-ஏபிசி, எல்.மதுமிலா-பி2சி, பி.சாரங்கன்-பி2சி, ஆர்.வித்ஜபிரகாஸ்-பி2சி, கே.தனுராஜ்-பி2சி, எஸ்.தட்சா-பி2சி, பி.நிரஞ்சன்-பி2சி.

**விஞ்ஞானப்பிரிவு புதிய பாடத்திட்டம்**

ஆர்.சோவினி-2ஏபி, எம்.சங்கீதன்-2ஏபி, ஆர்.றதிசியா-2பிசி, எம்.தனுஜன்-ஏ2சி, எஸ்.துசித்திரன்-2பிசி, எம்.கீர்த்தனா-ஏ2சி, கே.சுலக்சனா- 2பிசி, ரி.யதுசாயினி-2பிசி, என்.நிலோயி-2பிஎஸ், எஸ்.ருரிகா-3சி.

**விஞ்ஞானப்பிரிவு பழைய பாடத்திட்டம்**

என்.சங்கீர்த்தனன்-3ஏ, ஜே.நிதர்சன்-2ஏபி, பி.பார்த்தீபா-ஏ2பி, ஏ.மதுசன்-2ஏசி, எஸ்.பிரகாஸ்-2ஏசி, கே.கீர்த்தனா-2பிசி, ரி.றதீபன்-2பிசி, எஸ்.துவாரகன்-பி2சி, ஆர்.துளசிகா-ஏ2சி, கே.விதுசன்-பி2சி, ஐ.எவ்.அனிஸ்-பி2சி.

**வர்த்தகப்பிரிவு புதிய பாடத்திட்டம்**

எஸ்.சோபனா-3ஏ, பி. அனித்தா-3ஏ, எம்.லக்சாயினி-3ஏ, பி.கீர்த்தனா-3ஏ, ரி.ரீபிகா-2ஏபி, ரி.பிரியங்கன்-2ஏபி, ஜே.எஸ்.லெபாயாஸ்-2ஏபி, என்.தபிசன்-2ஏசி

**வர்த்தகப்பிரிவு பழைய பாடத்திட்டம்**

ரி.நர்மதன்- 2ஏபி, வை.செரிஸ்டன்-2ஏசி, எஸ்.சோபனா-2ஏபி.ஏ.மதியங்கா-2ஏபி, ஜே.அமல்ராஜ்-ஏ2பி, எம்.லிவேயினி- 2பிசி, கே.லக்ஷியா-பி2சி, ஜி.வினோதா-பி2சி, பி.யதுசன்-பி2சி, எஸ்.பாலகணேசன்-பி2சி

**கலைப்பிரிவு புதிய பாடத்திட்டம்**

எஸ்.சபீனா-3ஏ, எல்.அதீசன்-2ஏபி, எஸ்.ஜதீஷிகா-2ஏபி, ரி.பிரவீனா-2ஏபி, எஸ்.வானதி-2ஏபி, ஆர்.வைஷ்ணவி-2ஏபி, சி.ஏ.டிசானுகா-ஏபிசி,எஸ்.திஷான்-2ஏசி, எஸ்.பிரேமலக்சன்- ஏபிசி, வி.நிஷாளினி- 2ஏசி, எஸ்.என்சிகா-ஏ2பி, பி.தட்சனா-2ஏசி, பி.பானு-ஏ2பி

**கலைப்பிரிவு பழைய பாடத்திட்டம்**

கே.நிலக்ஷன்-2ஏபி, கே.பிரஜீத்-ஏ2பி, ஆர்.துஷாந்த்-3பி, பி.வரப்பிரகாஷ்-3பி, எம்.லவீகா-2பிசி, என்.றெம்சிகா-ஏபிசி, என்.ஸ்ரீவிஷ்ணுகா-பி2சி

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு புதிய பாடத்திட்டம்**

ரி.கஜரூபன்-ஏ2பி, எஸ்.சஞ்ஜீவன்-ஏசிஎஸ், ரி.சயந்தன்-பிசிஎஸ்.ஷ

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு பழைய பாடத்திட்டம்**

எம்.திலக்ஷன்-2சிஎஸ்

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு புதிய பாடத்திட்டம்**

எஸ்.லாவன்யா-ஏ2பி, ஆர்.பவதாரணி-பிசிஎஸ்.

## யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**கணிதப் பிரிவு**

எஸ்.கம்சாயினி-3ஏ, என்.லக்ஷிகா-2ஏபி, ரி.தேவாம்பிகை-2ஏபி, வி. ஜதீஸ்வர்யா-2ஏசி, ஆர்.சங்கவி-2பிசி, ஜே.தர்மசுகி-2பிசி, எஸ்.கஸ்தூரி-பி2சி, கே.வினிதா-3சி, எஸ்.அகலினி-3எஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

பி.ஜதுஹிரி-ஏ2பி, எஸ்.சைந்தவி-2பிசி, ஆர்.ரஜிந்தா-2பிசி, ஆர்.ஜனந்தினி-2பிசி, ஆர்.தனுஷா- பி2சி, என்.துவாரகா-பிசிஎஸ், பி.சிந்துஜா- பி2எஸ், எஸ்.லக்ஷனா-2சிஎஸ், எஸ்.விதுர்ஜினி-2சிஎஸ், எஸ்.டனுசியா-சி2எஸ், எஸ்.கஸ்தூரி-சி2எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

கே.சர்மினி-3ஏ, ஏ.அஜந்தினி-2ஏபி, ஆர்.கலைராணி-2ஏபி, ரி.குமுதினி-2ஏபி, எஸ்.சந்தியா-ஏ2பி, கே.ரக்ஷாயினி-ஏ2பி, என்.மிதுனா-ஏபிசி, கே.சாமந்தி-2பிசி, வி.நந்தினி-பி2சி, எஸ்.ஜெமிலா-பி2சி, கே.நிஷாலினி-பி2சி, எம்.மயூரி-3சி, எஸ்.கீர்த்திகா-3சி, ஏ.றோகினி-3சி, எஸ்.துர்க்கா-3சி, கே.டினோஷிகா-3சி, கே.லிக்ஷனா-2சிஎஸ், எஸ்.நிரோஜா-2சிஎஸ், வி.பவித்திரா-சி2எஸ், ரி.பிரமிளா-சி2எஸ்.

**கலைப் பிரிவு**

எம். மயூரி - 3 ஏ, ரி. நிறோசிகா-2ஏபி, கே. கனோசிகா- 2ஏபி, வி.அஜித்தா-2ஏபி, எஸ்.நிதுஷா- 2ஏபி, எல். சர்மிளா-2ஏபி, கே. நிறோஜா- 2ஏபி, கே.மிதுளா-ஏ2பி, எஸ். கிருவாசினி- ஏபிசி, எ.கிருஷிகா- ஏபிசி, ரி.தேவராஜி-ஏபிசி, எஸ்.கிருசியா-ஏபிசி, கே.சேந்தினி-ஏபிஎஸ், கே. நிலக்ஷா- ஏபிஎஸ், ஆர்.சன்சிகா- ஏ2சி, எஸ்.கௌசி-ஏ2சி, கே.ஜோதிகா-ஏ2சி, ரி.பாமதி-ஏ2சி, எஸ்.செந்தியா-ஏ2சி, எம்.நிறஞ்சனா-ஏ2சி, ரி.கீர்த்திகா-ஏசிஎஸ், ஜே.கென்சிகா-ஏசிஎஸ், எம்.மதுசா-ஏசிஎஸ், ஆர். றெஜித்திரா- ஏ2எஸ், ரி.டொலிற்றா - 3பி, எஸ்.அபிநயா-3பி, ஆர்.ஜனுசா- 2பிசி, எஸ்.கஜிந்தினி- 2பிசி, ஆர். துஷாரகா- 2பிசி, கே.மாதுமை-2பிஎஸ், எஸ். சானுகா-பி2சி, எஸ்.தர்சிகா- பி2சி, பி.சர்மிளா- பி2சி, வி.டென்சிகா- பி2சி, எஸ்.விதுர்சனா- பி2சி, கே.துலக்ஷனா- பி2சி, எஸ்.பவித்திரா-பிசிஎஸ். வி.வைஸ்ணவி- பிசிஎஸ், கே.ஆதனா- பிசிஎஸ், எஸ்.சோபியா-பிசிஎஸ், ஆர். கீர்த்தனா- பிசிஎஸ், ஆர்.வின்சனா- பிசிஎஸ், எஸ்.ரூபிகா-பிசிஎஸ், ரி.மனோ ராணி- பிசிஎஸ், ஆர்.கிருஷாளினி-பி2எஸ், பி.சாளினி-பி2எஸ், பி.தர்சிகா-பி2எஸ், எஸ்.சர்மிளா-பி2எஸ். (இ-7-60)

# கணிதப் பிரிவில் முதலிடம் வவுனியா மாணவன் சாதனை



(நெளுக்குளம்)

வறுமையை காரணமாக வைத்து கல்வியை விடாது கற்றுக்கொள்ளுங்கள் என தெரிவித்துள்ள வவுனியாவில் கணிதப் பிரிவில் 3ஏ சித்தியுடன் முதலிடம் பெற்ற மாணவன் இராமகிருஸ்ணன் துலக்சன் என்ற மாணவன் பொறியியலாளராகி தனது கிராமத்திற்கும் பாடசாலைக்கும் உதவுவதே தனது இலட்சியம் எனத் தெரிவித்துள்ளார்.

இ.துலக்சன் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலத்தில் கல்வி கற்றுள்ளார். இம் மாணவன் வவுனியாவில் பின்தங்கிய கிராமமான சாம்பல் தோட்டம் கிராமத்தில் இருந்து சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளான்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த அவர்கள் கொழும்பு மற்றும் கண்டி போன்ற பிரதேசங்களில் வாழ்ந்து மீண்டும் வவுனியாவிற்குத் திரும்பி தனது கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

விவசாயம் மற்றும் கூலித் தொழிலை செய்து வரும் தந்தை வீட்டுப்பணிய்யாளரான தாய் என வறுமையின் மத்தியிலும் இம் மாணவன் பெற்றுக்கொண்ட பெறுபேறு வவுனியா மாவட்டத்திற்கு கிடைத்த சிறப்பு என கல்விச்சமூகம் தெரிவித்துள்ளது.

இப் பெறுபேறு தொடர்பாக மாணவன் இ.துலக்சன் கருத்து தெரிவிக்கையில்,

முதலில் இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்கும் நான் எனது கல்வி நடவடிக்கையின் போது எவ்வித கஷ்டத்தினையும் வெளிப்படுத்தாது எனது கல்விக்கு உறுதுணையாக இருந்த பெற்றோருக்கும் எனது பாடசாலை அதிபர் க.சிவநாதன் மற்றும் ஆசிரியர்களான திருமதி கனி அன்டனிகா, கணேசதாஸ், மகேந்திரன், ரூபதாசன், சிவாகரன் திருமதி தர்சிகா, கமலசிங்கம் உட்பட பரந்தாமன், இந்திரலிங்கம் ஆகியோருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன் எனத் தெரிவித்தார். (ஜ-299)

# நூலக வாசிப்புமாத நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

இயக்கச்சி முள்ளிப்பற்று நூலக வாசிப்பு மாத நிகழ்வுகள் இடம் பெற்றன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் இயக்கச்சி முள்ளிப் பற்று உப அலுவலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சபையினுடைய தவிசாளர் சுப்பிரமணியம் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் குறித்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் உடைய பிரதிநிதிகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஜ)

# வருடாந்த ஒன்றுகூடல்

(கிளிநொச்சி)

உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடல் இன்று கிளிநொச்சி கனகபுரம் பாதிரியார் இல்லத்தில் செயலாளர் க.ராகுலன் தலைமையில் இடம்பெறும். (ஜ-9)

# வணிகத்துறையில் மாணவி முதலிடம்



(பனிக்கன்குளம்)

இறுதி யுத்தத்தில் தந்தையை தொலைத்துவிட்டு சிறு வயதிலிருந்து ஒரு கையை இழந்த தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வணிகத்துறையில் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மாணவி இரவிச்சந்திரன் யாழினி சாதனை படைத்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் அ பகுதியை சேர்ந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி இரவிச்சந்திரன் யாழினி வணிகத்துறையில் மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தனது தந்தையை தொலைத்து காணாமல் போனவர்கள் பட்டியலில் தந்தையை தேடிக்கொண்டிருக்கும் குறித்த மாணவி ஒரு கையை இழந்த தன்னுடைய தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் நிலையில் வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் வணிகத்துறையில் மாவட்ட ரீதியில் முதலாமிடம் பெற்று சாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-281)

# இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 70ம் ஆண்டு நிறைவு விழா கிளிநொச்சியில்









(முறிகண்டி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இலங்கைத் தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராஜா கலந்து கொண்டதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, மதத் தலைவர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-100-312)

# இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதிகளை காட்டிக் கொடுத்த நாய் பரிதாபமாக மரணம்





(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் மேற்கொண்ட தீவிரவாதிகளை காட்டிக்கொடுத்த சாசா எனும் பொலிஸ் நாய் பரிதாபமாக மரணமடைந்தது.

சாசா எனும் பொலிஸ் நாய் உயிரிழந்த சம்பவம் பொலிஸ் அதிகாரிகளிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு நாளில் தேவாலயங்கள், ஹோட்டல்கள் மீது தற்கொலைப் படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலின் பின் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளை மீட்க குறித்த நாய் முக்கிய பங்காற்றியமை குறிப் பிடத்தக்கது. இதனால் மேலும் நடக்கவிருந்த அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டன.

மேலும் தாக்குதல் நடத்திய இஸ்லாமிய தீவிரவாதிகளை குறித்த நாய் காட்டிக்கொடுத்தது.

இதேவேளை பல்வேறு சம்பவங்களில் பொலிஸ் அதிகாரிகளுக்கு உதவி புரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எதிர்காலத்தில் பேராசிரியராக வரவேண்டும்

# உயிர் முறைமைகள் தொழில்நுட்பப்பிரிவில் மாவட்ட ரீதியில் முதல் இடம்பெற்ற மாணவி



(வவுனியா)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவியான கணேசலிங்கம் குகநந்தினி வவுனியா மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதோடு அகில இலங்கை ரீதியில் 284 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் தனது பெறுபேற்றுக்கு உதவிய பாடசாலைச் சமூகத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துள்ள போதும் தான் எதிர்காலத்தில் பேராசிரியராக வருவதே தனது கனவு எனத் தெரிவித்தார். (ஜ-10)

விதையில் மரம் இருப்பதைப் போல்
உங்களில் பிரபஞ்சம் இருப்பதை அறிய வேண்டும்.
– ஓசோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உயர்தரப் பரீட்சையுடன் கல்வியை நிறைவுபடுத்தாதீர்கள்

2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைப்பது உறுதி என்ற மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பது தான் இங்கு முக்கியமான விடயம்.

பொதுவில் க.பொ.த உயர்தரத்தில் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுவதில்லை. இவ்வாறு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் தங்களின் கல்வி நடவடிக்கை முற்றுப்பெற்று விட்டதாக மனம் சோரக்கூடாது.

சம காலத்தில் இருக்கக்கூடிய கல்வி முறைமையானது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு என்பதைக் கடந்து பட்டப்படிப்புக்களையும் தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

எனவே க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெறாத மாணவர்கள் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முயற்சியில் ஈடுபடலாம்.

அல்லது கல்விப்புலத்தில் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பொருத்தமான துறைகளில் தங்களை இணைத்துக் கொண்டு பட்டப்படிப்பையும் தொழிற்கல்வியையும் மேற்கொள்ள வேண்டும்.இங்கு தான் மாணவர்களை வழிப்படுத்தல் என்ற விடயம் தேவையாகிறது.

அதாவது க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றவுடன் இனி எல்லாம் முடிந்து விட்டது என்று மனம் தளராமல் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் பெற்றோர்கள் சிந்தித்துத் தங்கள் பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும்.

இதற்கு மேலாக பாடசாலைகளும் தத்தம் பள்ளிகளில் கற்று வெளியேறிய மாணவர்கள் அடுத்த கட்டமாக தொடரக்கூடிய கல்வி வாய்ப்புப் பற்றி குறித்த மாணவர்களுக்கு விளக்கப்படுத்தி அவர்களை திசைமுகப்படுத்தும் பணியைச் செய்தாக வேண்டும்.

தமக்குக் கற்பித்த ஆசிரியர்கள் கூறுகின்ற ஆலோசனைகளைச் செவிமடுத்து அதனை அமுலாக்க வேண்டும் என்ற மனநிலை ஒவ்வொரு மாணவரிடத்தும் இருப்பதால் தங்களிடம் கற்ற மாணவர்களுக்கான நல்ல ஆலோசகர்களாக ஆசிரியர்கள் இருக்கும் போது எந்த மாணவனும் வழி தவற மாட்டான் என்பது சர்வ நிச்சயம்.

எனவே இது விடயத்தில் பாடசாலைச் சமூகம் தனது பொறுப்பை உணர்ந்து பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு என்றும் நல்ல வழிகாட்டல்களை வழங்குகின்ற பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

இதற்கு மேலாக பல்கலைக்கழக சமூகமும் எங்கள் மாணவர்களுக்கு பொருத்தமான வழிகாட்டலை வழங்குவது காலத்தின் தேவையாகும்.

ஊடகங்கள் வாயிலாகவும் கருத்தரங்குகள் மூலமாகவும் மேற்படிப்பை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை எடுத்துக் கூறுவதன் ஊடாக எங்கள் மாணவர்களை வழிப்படுத்தலாம்.

இதேபோன்று எங்கள் அண்டை நாடான இந்தியாவில் கற்கக்கூடிய வாய்ப்புக்களை யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்திய துணைத் தூதரகம் ஏற்படுத்தித் தந்தால் அது எங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

எனவே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய எங்கள் மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர ஒட்டுமொத்த சமூகமும் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

## பொதுத்தேர்தலில் வெற்றிபெறுவதே இடைக்கால அரசின் இலக்கு-காமினி

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் கூடிய அரசாங்கத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடனே இடைக்கால அரசாங்கம் தற்போது செயற்படுவதாக கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்காமினி லொகுகே தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் குறித்து கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். "பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பலமான அரசாங்கம் தோற்றுவிக்கப்படும்.

அத்துடன் இடைக்கால அரசாங்கம் தற்போது முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளின் பெறுபேறு அதற்கு வழியமைக்கும்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அனைத்து இன மக்களின் ஆதரவினையும் கோரியது. ஆனால் தமிழ்- முஸ்லிம் மக்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்கப் பெறவில்லை.

அதற்குப் பல்வேறு அரசியல் ரீதியான காரணிகளே காரணம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலவச சீருடை வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களின் 2020 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடை வவுச்சர்கள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை பாடசாலையில் வழங்கப்படவுள்ளது.

எனவே 2019 இல் வகுப்பு தரம் 1 தொடக்கம் தரம் 10 வரை கற்ற மாணவர்கள் தங்களுடைய பெற்றோருடன் உரிய நேரத்துக்கு வருகைதந்து பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஞா)

## ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் தமிழீழமா?

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தால் அச்சிடப்பட்ட 5 ஆம் ஆண்டு ஆங்கில மொழி பாடப்புத்தகத்தில் உள்ள இலங்கைப்படத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரே வர்ணத்தில் வரையப்பட்டிருப்பதாக தேசிய பாரம்பரிய பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ஜனக போடிநந்த குணதிலக குற்றம் சாட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒரே நிறத்தில் அறிமுகப்படுத்துவது எதிர்காலத்தில் நாட்டை அழிக்கும் விளைவை ஏற்படுத்தும் என்று அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், பாடநூலில் வட மத்திய மாகாணத்தில் ஒரு குழந்தையின் ஓவியம் உள்ளது. இது நாட்டில் பெருமை சேர்க்காது.

வட மத்திய மாகாணத்தின் அறிமுகத்தில் இப்பகுதியில் உள்ள ஒரு வரலாற்று ஆலயத்தின் புகைப்படம் சேர்க்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

தேசிய விழாக்களை அறிமுகப்படுத்துவதில் சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு சேர்க்கப்படவில்லை என்றும் அது பெரும் தவறு என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

அரசாங்கத்தால் அச்சிடப்பட்ட ஐந்தாம் ஆண்டுக்கான ஆங்கில மொழி பாடப் புத்தகத்தைப் படிக்குமாறு தற்போதைய அரசாங்கத்திடம் தமது அமைப்பு கோருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 10 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு

(மன்னார்)

மன்னார் - கொன்னையன் குடியிருப்புப் பகுதியில் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் 10 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## பாடசாலை மாணவர்களுக்கான சீருடை, பாதணிகளுக்கு வவுச்சர்

(கொழும்பு)

ஜனவரி மாதம் சீருடை மற்றும் பாதணிகளுக் கான வவுச்சர் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வவுச்சர்கள் தயாரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அவை எதிர்வரும் 29,30,31 ஆம் திகதிகளில் பாடசாலை அதிபர்களுக்கு கையளிக்கப்படுவதுடன் விரைவில் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சீருடைக்கு ஒரு வவுச்சர், பாதணிக்கு ஒரு வவுச்சர் என இரண்டு வவுச்சர்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் 44 இலட்சம் வரையிலான மாணவர்கள் உள்ளனர். அனைத்து மாணவர்களுக்கும் இம்முறை இலவச சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகள் ஜனவரி மாதம் தொடங்கவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனாதிபதியின் ஆலோசகர் எனக்கூறி அதிபரை அச்சுறுத்தியவர் கைதானார்

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஆலோசகர் எனக்கூறி மொரட்டுவையிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் அதிபரை அச்சுறுத்திய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபரைக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

போலியான முறையில் அச்சுறுத்தல் விடுத்துத் தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் அவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர் எனத் தெரிய வந்தது.

இந்நிலையில் குறித்த சந்தேக நபரை மொரட்டுவை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தவறுகளை ஒப்புக்கொள்வது என்பது எதிரிகளையும் நண்பர்களாக்கித் தரும் வரம். எதிர்த்து வீழ்த்த முடியாத பலமும் அதுவே.

-சத்குரு ஜக்கி வாசுதேவ்

## டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு

டெங்கு அபாயம்- சுற்றாடலிலும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களை இனங் கண்டு இல்லாது செய்யுங்கள். இவற்றுள் முக்கியமானவை கொள்கலன்கள், கூரைப் பீலிகள், தண்ணீர்த் தொட்டிகள், தண்ணீர்த் தாங்கிகள், வீட்டின் மொட்டை மாடிகள், மரப்பொந்துகள் என்பவையாகும்.

சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்


## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நம்பிக்கை இல்லாத தீய உள்ளம் கடவுளை விட்டு விலகும் தன்மை கொண்டது. எனவே, தீய உள்ளம் எவருக்கும் ஏற்படாதபடி இறையுணர்வுடன் நடக்க வேண்டும்.
- கடவுளுக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து, கடவுளின் பணியை இன்னும் அதிகமாக செய்யுங்கள்.
- முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.
- "எப்போதும் நாம் கடவுளோடு இருப்போம்". இவ்வார்த்தைகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள்.
- நன்மை செய்வதில் ஞானம் உடையவர்களாகவும், தீமை என்றால் என்ன என்றே தெரியாதவர்களாகவும் சமுதாயத்தில் இருக்க வேண்டும்.
- அழிந்து போகும் உணவுக்காக உழைக்காமல், நிலைத்த வாழ்வு தரும் பக்தி என்ற அழியாத உணவுக்காகவே உழைக்க வேண்டும்.
- மனவலிமை கொண்ட நாம் வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

# 2020ஆம் ஆண்டு புத்தாண்டு பலன்கள்

## 01.01.2020 - 31.12.2020



நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த புத்தாண்டு வந்துவிட்டது. எண்ணங்கள் ஈடேற வேண்டுமானால் குருவின் அருட்பார்வை வேண்டும். அந்த அமைப்பு ஆண்டின் தொடக்கத்தில் உங்களுக்கு இருக்கிறது.

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும் 9 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். வெற்றிகள் ஸ்தானாதிபதி புதன், சூரியனோடு இணைந்து புத - ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். வருடத் தொடக்கத்திலேயே 9 ஆம் இடத்தில் 5 கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்கின்றன. சூரியன், புதன்,

யோக வாய்ப்புகள் வந்து சேரவும் அனுகூலம் தரும் ஸ்தலங்களுக்குச் சென்று சர்ப்ப சாந்தி பரிகாரங்களைச் செய்யுங்கள்.

**மகர குருவின் சஞ்சாரம்**

8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசிக்குள் குரு வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். அவரோடு இணைந்து சஞ்சரிக்கும் சனியும் வக்கிரம் பெற்றிருக்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவும் 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியும் வக்கிரம் பெறும் இந்த காலகட்டத்தில், தொழிலில் கூடுதல் கவனம் தேவை. சேமிப்புகள் கொஞ்சம் கரையும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். படிப்புக்கேற்ற வேலை கிடைக்காது. எதிரிகளின் பலம் கூடும். ஏமாற்றம் அதிகரிக்கும்.

15.11.2020 இல் மகர இராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அது குருவிற்கு நீச்ச வீடாகும். இருப்பினும் சுய ஜாதகத்தில் குரு நீச்சம் பெற்றிருப்பவர்களுக்கும் குரு மறைவு ஸ்தானத்தில் இருப்பவர்களுக்கும் இது ஒரு பொற்காலமாகும். மகர குருவின் சஞ்சார காலத்தில், குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களில்

கவனம் தேவை. ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது, அலைச்சலைக் குறைத்துக்கொள்வது, உடல்நலனைக் காக்க உதவும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் சுய ஜாதகத்தில் ராகு- கேதுக்களின் பாதசார பலமறிந்து வழிபாடுகளை மேற்கொண்டால், வளர்ச்சிப் பாதையில் ஏற்படும் தளர்ச்சியை அகற்றலாம்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் சனிபகவான், 29.04.2020 முதல் 14.9.2020 வரை வக்கிரம் அடைகிறார். இந்த வக்கிர காலத்தில் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும். உங்கள் இராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். உங்களின் தொழில் வளர்ச்சியும் இலாபமும் அவர் கையில்தான் இருக்கிறது. சனி பகவான் வக்கிர காலத்தில் இருக்கும் பொழுது, தொழில் போட்டி அதிகரிக்கும். நீங்கள் தைரியமும் தன்னம்பிக்கையும் மிக்கவர் என்றாலும் உங்களால் துணிந்து எந்த முடிவையும் எடுக்க இயலாது.

13.2.2020 முதல் 22.3.2020

உத்தியோகத்தில் உள்ளவர்கள் சுயதொழில் செய்ய முன்வருவர். வீடுகட்டும் வாய்ப்பு அல்லது வாங்கும் வாய்ப்பும் கைகூடும். வரும் காலத்தை வசந்த காலமாக மாற்றிக்கொள்ள கிரக நிலைகள் சாதகமாக உலாவரும் நேரம் இது.

**செல்வ வளம் தரும் வழிபாடு**

சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபட்டு வருவதோடு யோகபலம் பெற்ற நாளில் படைவீட்டில் ஒன்றான பழனியில் ராஜ அலங்கார முருகனையும் போகமா முனிவரையும் வழிபட்டு வந்தால் பலன்கள் பலமடங்கு கிடைக்கும். வளர்ச்சியும் வசதி வாய்ப்புகளும் அதிகரிக்கும்.

**குருவின் வக்கிர காலமும் பரிவர்த்தனை யோகமும்**

27.3.2020 இல் குரு வக்கிர இயக்கத்தில் மகர இராசிக்குச் செல்கிறார். அங்கு 7.7.2020 வரை வக்கிர இயக்கத்திலேயே இருக்கிறார். வலிமையிழந்த குரு நன்மை செய்ய, வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபடுங்கள்.

# எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

வியாழன், சனி, கேது ஆகியவற்றின் சேர்க்கையால் நல்ல மாற்றங்களும் ஏற்றங்களும் வரப்போகிறது. பாக்கியாதிபதி சூரியன், ஜீவன ஸ்தானாதிபதி புதன், தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி ஆகியவற்றுடன், ஞானகாரகன் கேதுவும் இணைந்து குருவிற்கு சொந்த வீடான தனுசு இராசியில் சஞ்சரிப்பதால், பூர்வ புண்ணியத்தின் பலனால் உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து நற்பலன்களும் இப்பொழுது கிடைக்கப் போகிறது.

**ஆண்டின் தொடக்கத்தில் குருபலம்**

வருடம் தொடங்கும் பொழுதே குரு உங்கள் இராசியையும் 3 மற்றும் 5 ஆகிய இடங்களையும் பார்க்கிறார். 'ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன்தரும்' என்பது விதி. அந்த அடிப்படையில் இனித் தொழிலில் அதிக அளவில் இலாபம் கிடைக்கும். ஒரு சிலர் கிளைத் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பும் உருவாகும். பலவித உபாதைகளால் அவதிப்பட்டவர்கள், அதிலிருந்து நிவாரணம் பெறுவர். மறைமுக எதிர்ப்புகள் மறையும். வியாபார முன்னேற்றம் கருதிப் புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். குரு பார்வையால், மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வாய்ப்பு உருவாகும். மழலைப் பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு அதற்கான சூழல் உருவாகும்.

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். தன, சப்தமாதிபதியான சுக்கிரன், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுகாதிபதி சந்திரன் லாபஸ்தானத்தில் உலாவுகிறார். இவற்றைப் பார்க்கும் பொழுது செவ்வாய் நீங்கலாக மற்ற அனைத்து கிரகங்களும் ராகு- கேது ஆதிக்கத்தில் இருக்கின்றன. எனவே கேதுவால் கெடுபலன்கள் நடைபெறாமல் இருக்கவும் ராகுவால்

பதிகிறது. இதன் விளைவாக தாய்வழி ஆதரவும் வாகன யோகமும் உண்டு. பயணங்களால் ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் சில சிக்கல்கள் தீரும். வெளிநாட்டு முயற்சி அனுகூலம் தரும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு, நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும். அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்குச் செவிசாய்ப்பர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கலாம்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் மூன்றாம் இடத்தில் ராகுவும் 9 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். பின்னோக்கிச் செல்லும் இந்தக் கிரகங்கள் தான், உங்கள் வாழ்க்கைப் பாதையில் முன்னோக்கிச் செல்ல வழிவகுத்துக் கொடுப்பவை. இந்த கிரகங்கள் 1.9.2020 இல் இடம்பெயர்கின்றன. அச்சமயம் 2 ஆம் இடத்தில் ராகுவும் 8 இம் இடத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். 2 ஆம் இடமான குடும்ப ஸ்தானத்திற்கு வரும் ராகுவால், திரண்ட செல்வம் கிடைக்கும். பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைய வழிபிறக்கும். குடும்ப பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். விரயங்களை சுபவிரயமாக மாற்றிக்கொள்ளுங்கள்.

அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சொந்த பந்தங்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. மனக்குழப்பங்கள் அகல அருளாளர்களின் ஆலோசனைகள் கைகொடுக்கும். பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். அதைத் தொழிலுக்கு மூலதனமாக மாற்றுவீர்கள். போட்டிகள் இருந்தாலும் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். அதேநேரத்தில் உடல்நலனில்

வரை தனுசு இராசிக்குள் செவ்வாய் - சனி சேர்க்கை ஏற்படுகிறது. 3.5.2020 முதல் 17.6.2020 வரை தனுசு இராசியில் உள்ள சனி பகவான் கும்பத்தில் உள்ள செவ்வாயைப் பார்க்கிறார். உங்கள் இராசிநாதனாக செவ்வாய் விளங்குவதால், அவரோடு சம்பந்தப்பட்ட சனியின் ஆதிக்க காலமான இந்த காலகட்டத்தில், பிறருக்கு பொறுப்பு ஏற்பதை தவிர்ப்பது நல்லது. கடன் சுமை அதிகரிக்கலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பதவி உயர்வும் வெளிநாட்டுப் பயணமும் தாமதப்பட்டுக் கொண்டே வரும். பெற்றோர்களின் ஆதரவு குறையும். இக்காலத்தில் அங்காரகனையும் சனி பகவானையும் தொடர்ந்து வழிபட்டு வாருங்கள்.

26.12.2020 உத்திராடம் 2 ஆம் பாதத்தில் மகர இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகி செல்கிறார். 10 ஆம் இடத்




திற்கு வரும் சனி பகவான், முத்தான பலன்களை உங்களுக்கு வாரி வழங்குவார். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். முக்கிய புள்ளிகளின் வரிசையில் நீங்களும் இடம்பெறுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பணி நிரந்தரம் பற்றிய தகவல் வரலாம். தொழில் புரிவோருக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள் வர்.

அதேநேரத்தில் மகரத்தில் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கும் குருவும் தனுசு இராசியில் வக்கிரமாக இருக்கும் சனியும் தங்களின் வீடுகளை மாற்றிக் கொண்டுள்ளன. இதை 'பரிவர்த்தனை யோகம்' என்பர். யோகங்களில் முதல் தரமான யோகம் இது. இந்த காலகட்டத்தில் தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பங்காளிப் பகை மாறும். வெளிநாட்டு யோகம் கைகூடும். துன்பங்கள் விலகும். ஆலயத் திருப்பணிகளை முறையாகச் செய்ய முன்வருவீர்கள். வாகனப் பழுதுகளால் கவலைப்பட்ட நீங்கள், இப்பொழுது புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் மங்கல நிகழ்ச்சிகள் பல மனையில் நடைபெறப் போகிறது. தடைகள் விலகும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். கணவன்-மனைவிக்குள் கனிவும் பாசமும் கூடும். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தாய் வழி ஆதரவு உண்டு. ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஒருசிலருக்கு வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் உருவாகலாம். உத்தியோகத்தில் பதவி உயர்வும் எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். குரு 10 இல் வரும்போது பதவி உயர்வும் உத்தியோகத்தில் முன்னேற்றமும் வந்துசேரும். சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். ராகு - கேதுக்களின் ஆதிக்கத்தால் நன்மை கிடைக்க, சர்ப்ப சாந்திப்பரிகாரங்களைச் செய்து கொள்வதோடு, செவ்வாய்க்கிழமை விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுங்கள்.

(தொடரும்)

## உருளைக்கிழங்...

வரியை 25 ரூபாயால் அரசாங்கம் குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டமையை அடுத்தே இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலையை 50 ரூபாயால் குறைக்க அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## இலங்கை அரசு...

கூடாது எனத் தெரிவித்துள்ளமையானது கவலை அளிக்கின்றது. இவ்விடயத்தில் பலரும் கவலை அடைந்துள்ளனர். இதற்காக தமிழ் மக்களும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மலையக மக்களும் ஒன்றாக அணிதிரள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்த விடயமானது புதிதல்ல. தனி சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டபோது நாம் எதிர்த்திருந்தோம். அவ்வாறான நிலையே இன்று தோற்றுவிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த அரசின் காலத்தில் அமைச்சு பொறுப்பேற்கும் ஆசையில் அரசுக்கு ஆதரவு வழங்கவில்லை. பல கோடி நிதியில் அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளோம். இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்தியா இலங்கை ஜனாதிபதியை அழைத்து பேசியது. அவர்களின் பிரதான நோக்கம் சீனாவை இலங்கையில் ஆதிக்கம் செலுத்த கூடாது என்பதே ஆகும். அது தவிர்ந்து இலங்கையில் காணப்படும் இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தினர்.

ஆனால் இந்தியாவில் வைத்தே ஜனாதிபதி இனப்பிரச்சினை விடயம் தொடர்பில் மாறுபாடான கருத்தினை தெரிவித்து வந்தார். அதனைத் தொடர்ந்து தற்போது ஏற்பட்டுள்ள தேசிய கீதம் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவும், சர்வதேச நாடுகளும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

பண்டா - செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது பல சிங்கள அரச தலைவர்களும் ஐக்கிய தேசிய கட்சியினரும் கடுமையாக எதிர்த்தனர். தமிழர்களிற்கு தனி அலகை கொடுத்து நாட்டை இரண்டாக பிரித்தனர் என்றனர். அதேபோன்று செல்வநாயகம் தமிழ் மக்களிற்கு துரோகம் செய்து விட்டார் என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் அப்போது விமர்சித்தது எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் நாம் இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். இந்தியாவே இவ்விடயம் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். தமது நாட்டுக்கு அழைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இந்தியா இலங்கை அரசுக்கு கடும் அழுத்தத்தினை கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களையே பேச்சுக்காக அனுப்பி வைத்தோம். இன்று அவர்கள் இருந்தால் நன்றாக இருக்கும். நாம் அவர்கள் இல்லாது அரசுடனும், சர்வதேசத்துடனும் பேசச் செல்லவில்லை எனவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார். (ஞா-100)

## இலங்கைக்கு...

மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்த அந்தோணி குருஸ், முஜிபுர் ரஹ்மான் ஆகிய இருவரும் வேறொரு முகாமில் தங்கியிருந்த இரண்டு பேருடன் இராமேஸ்வரத்திலிருந்து நாட்டுப் படகில் இலங்கைக்கு அனுமதியின்றி வந்திருப்பதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணம்-நெடுந்தீவு கடற்கரைக்கு, இந்த நாட்டுப்படகிலிருந்து இலங்கையைச் சேர்ந்த மூன்று ஆண் அகதிகளும் ஒரு பெண் அகதியும் நேற்று சனிக்கிழமை அதிகாலை கரை இறங்கியுள்ளனர். இவர்களை நெடுந்தீவு பொலிஸார் கைது செய்து பின்னர் ஆவணங்களை சரி பார்த்த பின்னர் விடுவித்துள்ளனர். (ஞா-100)

## கொதிநீர் உடம்...

மேசையில் வைத்திருந்த கொதிநீர் குவளையை தட்டி வீழ்த்தியுள்ளது.

இதிலிருந்த கொதிநீர் உடம்பில் பட்டதில் நெஞ்சு, வயிற்றுப்பகுதிகளில் புண்காயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அன்றைய தினமே மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## வைத்தியரால்...

டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ராஜித, லங்கா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஜெயசிறி தென்னக்கோனின் உத்தரவின்படி, வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியர் பரிசோதனை மேற்கொண்டார்.

ராஜித சேனாரத்னவை சிறைச்சாலை வைத்தியசாலை அல்லது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயுமாறு சிறைச்சாலை ஆணையாளர் கொழும்பு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார். இதன்படி ராஜித சேனாரத்னவின் உடல்நிலை குறித்து நேற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஞா)

## கிளிநொச்சியில்...

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் முன்னெடுக்கப்படும் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் வடக்கில் ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்கள் கலந்து கொள்வதற்காக பேருந்து ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் அந்தந்த மாவட்டங்களில் இருந்து 30ஆம் திகதி காலை 7 மணி முதல் பேருந்து சேவை ஆரம்பமாகவுள்ளது.

போராட்டத்தில் கலந்துகொள்பவர்கள் அந்தந்த பேருந்து சேவைக்குரிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில் கல்மடு இராமநாதபுரம் ஊடாக புதுக்காடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி - 0778671344 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்,

நாச்சிக்குடா, ஜெயபுரம், வன்னேரி ஊடாக ஆனைவிழுந்தான் அம்பலப்பெருமாள் சந்தி, கந்தபுரம் ஊடாக கோணாவில், ஊற்றுப்புலம் ஊடாக சேவையர் கடைச்சந்தி, டிப்போ சந்தி ஊடாக கந்தசுவாமி கோவில் கிளிநொச்சி - 0779461328 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்,

விசுவமடு, சுண்டிக்குளம், நெத்தலியாறு, தர்மபுரம், புளியம்பொக்கணை கோவிலடி, முரசமோட்டை, பரந்தன், கிளிநொச்சி - 0770242104 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்

துணுக்காய், ஒட்டங்குளம், பாண்டியன்குளம், பாலியாறு, ஒட்டறுத்தகுளம், வன்னிவிளாங்குளம் ஊடாக மாங்குளம், கிளிநொச்சி - 0770201854 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்,

கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் ஊடாக முள்ளியவளை, தண்ணீரூற்று, சிலாவத்தை, முல்லைத்தீவு ஊடாக செல்வபுரம், வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, கைவேலி, வள்ளிபுனம், சுதந்திரபுரம், விசுவமடு, பரந்தன், கிளிநொச்சி - 0770287062 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - (77) 866 8602 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு பேருந்து சேவையை பெற்றுக்கொள்ள முடியும். (ஞா-9)

## பிரிவினைவாதம்...

கரனுக்கு நந்திக்கடலில் ஏற்பட்ட நிலைமைதான் சுமந்திரனுக்கும் ஏற்படுமென தெரிவித்துள்ளார் சிஹல ராவய அமைப்பின் மாகல்கந்தே சுதந்த தேரர்.

தேசிய கீதம் தமிழில் பாடப்படக் கூடாதென்றும் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடக்கூடாதென்ற கருத்து தென்னிலங்கையில் வலுத்து வருகிறது. எனினும், தமிழில் தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

இனங்களிற்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதும், இனங்களிற்கிடையிலான நல்லிணக்கத்தை அதிகரிப்பதுமே உண்மையான நல்லிணக்கமாக இருக்கும். இந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்த, பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களின் கலாசாரத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமே செய்ய முடியும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஜனாதிபதி கோட்டாபயவிற்கும் அவசரமாக ஒரு கோரிக்கையை முன்வைக்கிறோம். தமிழ் பிரிவினைவாதத்தை வளர்க்கும் தமிழ் அரசியல்வாதிகளிற்கு உடனடியாக புனர்வாழ்வளிக்க வேண்டும். இல்லாவிட்டால், அப்பாவி தமிழ் மக்களின் ஊடாக புரட்சியொன்றை செய்ய வாய்ப்பிருக்கிறது. அப்படி நடந்தால், பிரபாகரன் நந்திக்கடலில் இறுதி மூச்சை விட்டதைப் போலவே சுமந்திரனிற்கும் தேவையெனில் எமது இராணுவத்தினர் தயார் நிலையில் இருக்கின்றனர்.

புரட்சியொன்றை ஆரம்பித்தால், நந்திக் கடல் பகுதியில் அதற்கு முற்றுப்புள்ளி வைத்ததை போல, அதற்கும் முற்றுப்புள்ளி வைக்க தயார் என்பதை தெரிவிக்கிறோம் என்றார். (ஞா)

## யாழ்.போதனா...

ஜீவாதரன் (வயது - 46) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சனிக்கிழமை குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ஞா-9)

## ஏகாதிபத்திய...

சுமந்திரன்.

கொற்றாவத்தை கலைவாணி முன்பள்ளி விளையாட்டு முற்றத் திறப்பு விழாவும் கலைவிழாவும் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்பவே துரித கிராம அபிவிருத்தி திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் சென்ற மாதம் நடுப்பகுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக் குப் பிறகு நாட்டினுடைய அரசியல் சூழ்நிலை மாறி இருக்கிறது. நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டிருந்த இத்திட்டங்கள் கூட சில அரைகுறையிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றன. மக்கள் புதுவிதமான ஒரு ஆணையை கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் நிறைவேற்றுவோம் என்று சொல்லி புதிய ஜனாதிபதியும் அவருக்கு கீழான ஆட்சியாளர்களும் ஒரு திசையில் நாட்டை கொண்டு செல்ல முயற்சி செய்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

செவண
திகதி 2019/12/28
சீட்டிழுப்பு இலக்கம் 248
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 31 46 52
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2019/12/28
சீட்டிழுப்பு இலக்கம் 1490
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 16 39 46 61
முதல் போனஸ் இல 54
இரண்டாவது போனஸ் இல 59
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 28-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2344
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 18 26 30 49
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28.12.2019
சீட்டிழுப்பு இலக்கம் 1004
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 6 3 8 4 3 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1099
சீட்டிழுப்பு திகதி 28.12.2019
B 04 37 45 64
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 88,257,080
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28/12/2019
வெற்றி வாரம் 2721
வர்ணம் இளநீலம்
கடகம்
வெற்றி இலக்கங்கள் 11 28 44 59
கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,663,136
2019/12/29 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 835
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.28
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,107,700/-
வெற்றி இலக்கங்கள் 08 20 51 64
ஆங்கில எழுத்து U
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3280
திகதி: 2019.12.28
பச்சை சனிக்கிழமை
சுப்பிரி தஹஸ்
விசேட இலக்கம் 7810
வெற்றி இலக்கங்கள் 15 23 48 52
ஆங்கில எழுத்து M
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
34,477,585/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# ACI

(கொக்குவில் சந்தி அருகாமை)

ஆரம்பம் (2020/01/08)

கணக்கீடு

**வி.தமிழ்ஈசன்**

Day Class
கணக்கீட்டு சமன்பாடு
(திங்கள், புதன், வெள்ளி)
10.00 am

2020 Batch
கம்பனி, LKAS
(திங்கள், புதன்) 5.00 pm

2021 Batch
கட்டுப்பாட்டுக்கணக்கு
(திங்கள், புதன்) 4.00 pm

2022 Batch
Basic (திங்கள், புதன்)
3.00 pm

T.P : 076 806 6960

(1635)



## 2020 ஆம் ஆண்டு புதுவருடத்தை முன்னிட்டு 'வீனஸ் விசேட வைத்தியசாலை' இன் மக்களுக்கான விசேட சலுகைகள்

01. 01.01.2020 இல் இருந்து எமது மக்களுக்கான விசேட சலுகையாக அனைத்து வைத்திய நிபுணத்துவ சேவைகளுக்கும் யாழ். நகரிலேயே மிகக் குறைந்த கட்டணமாக **1100/=** மட்டுமே அறவிடப்படும்.

02. தற்போது எம்மால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த (International Standard) மொடியுலர் சத்திர சிகிச்சைக் கூடத்தில் (Modular Oparation Theatre) அனைத்து சத்திர சிகிச்சைகளுக்கும் **விசேட சலுகைக் கட்டணம்** (Discount) வழங்கப்படும்.

03. வார்ட் அனுமதிகள் (Word), சத்திர சிகிச்சைகள் அனைத்திற்கும் (Admission Fees **இலவசம்**

04. வார்ட் (Word) அனுமதிக்கான அறை வாடகைகள் (Room Charges) AC,Non AC , Luxury Room என்பவற்றுக்கு **விசேட கழிவுகள்** வழங்கப்படும்.

மேற்குறித்த சலுகைகள் 2020 புதுவருட சலுகைகளாக குறிப்பிட்ட காலத்திற்கு எமது நிர்வாகத்தால் வழங்கப்படும் என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

வீனஸ் விசேட வைத்தியசாலை
Venus Speciality Hospital (pvt) Ltd
136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 4172, 021 222 8470

(C-8688)



## வீடு வாடகைக்கு

- யாழ்.நகரில் நவீன வசதி கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
- 7 Rooms, 3 வாகன தரிப்பிடம்
- அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (1619)

தொடர்பு:- 077 162 9385



## Genius Physics Class

A/L - 2022

ஆசிரியர் :- Mr.S.ஜீவகநாதன் (B.Sc)
ஆரம்பம் : 30.12.2019 (திங்கட்கிழமை)

TECHNO World Jaffna. 3.00 PM
New Everest Inuvil. 4.30 PM

Phone : 076 658 5489

(C-8690)



## CHEMISTRY & PHYSICS

Personal & Group Classes

தொடர்புகளுக்கு :
076 168 4391

(1623)



## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

**2022 A/L தொழில்நுட்பபிரிவு**

| | |
|---|---|
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - சக்தி, ராகவன், முருகநிரோஜன், லவன் |
| பொறியியல் தொழில்நுட்பம் | - அருண்குமார், சிவஜன், டினோசன், கேதீஸ், திவாகர் |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் | - திருக்குமரன், ஜெயந்தன், சிவகுமார், நிரோஜன், ராகவன் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - லவன், உமாகாந்தன் |
| புவியியல் | - S.P.கரன் |
| விவசாய விஞ்ஞானம் | - நிரோஜன், ஜெயந்தன், சாரங்கன் |
| ஊடக கல்வி | - K.V.நவநீதன் |
| கணிதம் | - தயாளன் |
| சித்திரம் | - ஜெயந்தன் |

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ். 0770175346, 0771703549

புதிய பிரிவு ஆரம்பம் 04.01.2020 சனிக்கிழமை காலை 09.00 மணி

(C-8690)


# தமிழ் மக்களின் ஒற்றுமையை குழப்பவே பல கட்சிகள் உருவாக்கப்படுகின்றன

## சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(முறிகண்டி)

ஒரு கட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் மத்தியில் இன்று பல கட்சிகள் உருவாகியுள்ளமை தமிழ் மக்களின் ஒற்றுமையை திட்டமிட்டு குழப்புவதற்கான செயலென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தமிழரசு கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஆரம்ப கால கட்டத்தில் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் ஒரு கட்சியின் கீழ் வாழ்ந்தார்கள்.

இன்று எம்மத்தியில் பல கட்சிகள் புதிதாக தோற்றம் பெற்றுள்ளன. இது தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு சில தரப்பினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகவே உள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தி பல வீனப்படுத்தும் செயற்பாடாகவே இதனை அனைவரும் பார்க்க வேண்டும்.

அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் இல்லாது ஆட்சியமைப்பதற்காக வாக்களியுங்கள் என சிங்கள மக்கள் மத்தியில பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கு ஆணை கொடுக்கும் வகையில் சிங்கள மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாக்களித்து கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவானார் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-100)


## வேலைவாய்ப்பு

சானு மிக்சர் மற்றும் யூஸ் தொழிலகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (தங்குமிட வசதியுண்டு)
தொடர்புகளுக்கு : 077 546 0028 (1556)



# CHEMISTRY

Day Class
Inorganic ஆரம்பம்
01.01.2020

2021 A/L
Inorganic ஆரம்பம்
04.01.2020

2020 A/L
Inorganic ஆரம்பம்
04.01.2020

2022 A/L
General ஆரம்பம்
30.12.2019

**என்னிடம் கல்வி கற்று மாவட்டத்தில் கணிதப்பிரிவில் (Old) முதலிடம் பெற்ற மாணவிக்கும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள ஏனைய மாணவச்செல்வங்களுக்கும் வாழ்த்துக்கள்.**

கணிதப்பிரிவு Old Syllabus
மாவட்டம் முதல் நிலை - சங்கவி கணேசலிங்கம் (J/V.G.H.S) 3A

**K.SUBEESAN**

The Science Corner
Clock Tower Lane, Jaffna. 077 430 7829



## FLC FRENCH LANGUAGE CENTRE



Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan(Trained in France) DELF A1,A2,B1,B2

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் :20.01.20 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(C-8555)



## இறுதிச்சந்தர்ப்பம்

**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**

புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 31 Dec . புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2019 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். (C-8691)



## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(C-8614)



## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-8637)



## 2020ஆம் ஆண்டிற்கான புதியதோர் வேலைத்திட்டம்

வணிகத்துறையில் முன்னணியில் திகழும் எமது நிறுவனமானது 2020ம் ஆண்டில் கால் பதித்துள்ளதுடன் தனது புதிய கிளை நிறுவனங்களுக்காக 06 விதமான பதவி வெற்றிடங்களுக்கு 35 விண்ணப்பதாரிகளை எம்முடன் இணைக்கவுள்ளோம்.

- சம்பள அளவுத்திட்டமாக 18,000 – 45,000 வரை பெற்றுக் கொள்ள முடியும். (ஆண்/பெண்) இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்
- க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கும் சிறியதோர் வாய்ப்பு
- வெளிமாவட்டத்தினருக்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு :- 0762678131/ 0767118479

(1633)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 248

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 29.12.2019 தொலைபேசி : 021 222 3378




# மண்ணுக்கான போராட்டம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# பிராந்திய அபிவிருத்தியும் வடக்கு மாகாண சபையும்

மாணிக்கம் லோகசிங்கம்




பெரும்பாலான உலக நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்குக் காரணம் பொருளாதார ரீதியான ஏற்றத் தாழ்வுகளே. இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் ஈற்றில் பிரிவினைக் கோரிக்கைக்கு வித்திடுகின்றன. இவ்வாறானதொரு நிலைமைதான் இலங்கை நாட்டிலும் ஏற்பட்டது. இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைகள் எல்லா மாகாணங்களுக்கும் சென்றடையவில்லை.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலைமை பரிதாபத்திற்குரியதாகும். எவ்வாறாயினும் 1970களின் பிற்பகுதியில் பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமநிலையான அபிவிருத்தி என்பவற்றை இலங்கை அரசாங்கம் கவனத்திலெடுத்தது.

மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம், ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டம் மற்றும் வீடமைப்புத் திட்டம் போன்றவற்றை அரசாங்கம் தொடக்கி வைத்தது. எனினும் 1983 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்ததால் அதன் நன்மைகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்றடைவது தடுக்கப்பட்டது.

இலங்கையில் யுத்தம் உச்சக் கட்டத்தைத் தொட்டபொழுது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை அரசியல் யாப்புக்கான 13 ஆவது திருத்தம் வெளியிலிருந்து திணிக்கப்பட்டது. இத்திருத்தத்தின்மூலம் பிரசவிக்கப்பட்ட மாகாண சபை முறை தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கான ஆரம்பப் புள்ளியாகக் கருதப்பட்டாலும் கூட அவற்றின் இறுதி நோக்கம் சமமான பிராந்திய பொருளாதார அபிவிருத்தியே.

இந்த வகையில் தமிழர்களின் அரசியல் நிறுவனக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு வழி ஏற்பட்டாலும் அதன் வழி மாகாணங்கள் தமது பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவி பேரின்ப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைப்பாக இது பரிணமிக்கவில்லை.

தமிழ்த் தரப்பினர் இதுவரையில் அரசியல் அதிகாரங்களைப் பெறுவதற்கு அரசின் வடிவம் ஒற்றையாட்சியா? அல்லது சமஷ்டி ஆட்சியா? என்றும் நிர்வாக அதிகாரங்கள் பகிரப்படுவது மாகாண சபைக்கா? அல்லது மாவட்ட சபைக்கா அல்லது உள்ளூராட்சி சபைக்கா? என்றும் அதற்கும் ஒருபடி மேலாகச் சென்று காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்றும் கலந்துரையாடி முழக்கமிட்டனரே தவிர மாகாண சபைகள் தாமே வருமானத்தைத் திரட்டி தமது தேவைப் படி செலவீனங்களை மேற்கொள்வதற்கான "இறை அதிகாரப் பகிர்வு" பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லை என்றே குறிப்பிடலாம்.

மாறாக மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு அற்பசொற்ப நிதியை வழங்கிவிட்டு அவற்றில் பெரும்பாலா னவை எத்தகைய செலவீனத்திற்காகப் பயன்படுத்தப்படல் வேண்டுமென்ற விளக்கத்தையும் வழங்குகிறது.

இறை அதிகாரம் என்பது மாகாண சபைகள் தமது அபிவிருத்தித் திட்டங்களை தாமே முன்மொழிந்து அதன் வழி செலவீனங்களை மேற்கொள்ளவும் அவற்றுக்குரிய வருமானத்தைத் திரட்டவும் உள்ள உரிமையை மத்திய அரசாங்கத்திடமிருந்து மாற்றுதல் ஆகும்.

இவ் அதிகாரத்தின் மூலமே மாகாண சபை தனது பேரினப் பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவிப் பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தி பொருளாதாரத்தில் தன்னிறைவை அனுபவிக்க முடியும். குறிப்பாக வடக்கும் கிழக்கும் தம்மில் தாமே தங்கியிருக்கும் சுயசார்புடைய பொருளாதாரமாக மாற்றமடைய முடியும்.

இல்லையேல் தெற்கிலிருந்து வரும் பொருட்கள் சேவைகளுக்காக வடக்கு காத்திருக்கும் தங்கியிருக்கும் தன்மை கொண்ட பொருளாதாரமாக மாற்றமடைவது மாத்திரமல்லாமல் மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் எதிர்பார்த்தளவு கட்டமைப்பு மாற்றங்களைக் காணமுடியாது. அதன் வழி வடக்கில் உற்பத்திப் பெருக்கம் ஏற்படாத பொழுது ஒட்டுமொத்த இலங்கையின் அபிவிருத்திக்கும் வடக்கு தனது பங்களிப்பை வழங்க முடியாது போகவே இலங்கை நாட்டின் அபிவிருத்தியும் நலிவடைந்ததாகவே காணப்படும்.

ஆகவே நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதில் இரண்டு தரப்பாரும் உண்மையான உழைப்பை மேற்கொள்ள வேண்டுமென்பதில் எதுவித தயக்கமும் இருக்கக்கூடாது.

யுத்தம் முடிவுற்ற பின்னரான வீடற்றோர் விவகாரம், இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்த்தல் விவகாரம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்ப விவகாரம், தடைப்பட்ட கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றிற்குப் பரிகாரம் தேடுவது மாத்திரமல்லாமல் நீடித்த பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளான தெருக்கள், புகையிரதப் பாதை, துறைமுக வசதிகளை வழங்கவும் "இறை அதிகாரம்" பகிரப்படுதல் அவசியமானதாகும்.

இவ்வாறாக நிகழும் பொழுது பொருளாதார அபிவிருத்திக்கான கட்டமைப்பு மாற்றங்களும் நிகழும். மக்களின் மனப்பாங்கிலும் முன்னேற்றம் உண்டாகும். இந்நிலையில் சமஷ்டி ஆட்சிக்கான தேவை தானாகவே உருவாகும். ஆனாலும் மக்கள் பிரிந்து செல்ல முன்வரமாட்டார்கள். பிரிக்க முடியாத, பிளவுபடாத அபிவிருத்தியடைந்த நாட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறானதொரு இறை அதிகாரப் பகிர்வு மற்றும் மக்கள் மனோநிலையில் ஏற்படும் மாற்றம் போன்றன வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தாம் வாழ்கின்ற புவியியல் பிரதேசத்திற்குள் இயற்கையாக வழங்கப்பட்டுள்ள வளக்கொடைகளைப் பயன்படுத்தி முதலில் சுயசார்புடைய பொருளாதாரமாக மாறுதல் வேண்டும்.,

வெளிமாகாணங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற இறக்குமதிப் பொருட்களைத் தடைப்படுத்துவதற்கு மறைமுகமான நடவடிக்கை களை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும்.


நமது பிரதேசத்திற்கேயுரித்தான நெல் மற்றும் விவசாயப் பயிர்களினூடாக உணவில் தன்னிறைவு அடையவேண்டும். பனை மற்றும் தென்னை முக்கியப்படுத்தப்படல் வேண்டும். அவற்றிலிருந்தான உணவு பதப்படுத்தும் வகையில் முதல் நிலை உற்பத்திகளும் கைத்தொழிற்சாலைகளும் உருவாக்கப்படுவதும் உணவுப் பழக்கவழக்கங்களுக்கு மாறிச் செல்வதும் ஆரோக்கியமான வாழ்வைத் தரும்.

மா, பலா, வாழை போன்ற முக்கனிகள் உற்பத்தி உள்நாட்டுத் தேவைகளுக்காக மாத்திரமல்ல ஏற்றுமதிக்காகவும் அதிகரிக்கப்படல் வேண்டும். விவசாயம், அதுசார்ந்த கைத்தொழில் வளர்ச்சி என்பவை ஒருபுறமிருக்க இலங்கையின் கடற்பரப்பில் 2/3 பகுதியைக் கொண்டுள்ள வடக்குக் கிழக்கின் மீன்பிடி உற்பத்தி பல்வேறு வகையில் விருத்தி செய்யப்பட்டால் அதுசார்ந்த கைத்தொழில் பெருக்கமடையும். மிருகவளர்ப்பு, பாலுற்பத்திகள், பாதணித் தொழில், ஆடைக் கைத்தொழில், கடதாசிக் கைத்தொழில் எனப் பொருளாதார அபிவிருத்தியைத் திட்டமிடல் வேண்டும்.

தமிழர்கள் தமக்கேயுரித்தான கல்வியைத் தரமான முறையில் வளப்படுத்துவதுடன் மக்கள் சிந்தனையில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர் அரசியலில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படல் வேண்டும்.

# “ஈழத்தமிழர்களை பலிக்கடா ஆக்கிவிட்டார்கள்!”

## பழ.நெடுமாறன் ஆவேசம்





குடியுரிமைச் சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிரான போராட்டங்கள் நாடு முழுவதும் வலுத்து வருகின்றன. மசோதாவில் ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டது தொடர்பாகவும் தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இந்த மசோதாவை ஆதரித்துள்ள அ.தி.மு.க, 'இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை தர வேண்டும்' என்று மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது. இதே கருத்தைத்தான் தமிழர் தேசிய முன்னணியின் தலைவரான பழ.நெடுமாறனும் வலியுறுத்துகிறார். தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் ஆவேசமாய் பதிலளித்த பழ.நெடுமாறன்.

**“ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டிருப்பது பற்றி?”**

"ஈழத்தமிழர்களும் இந்துக்கள்தான். ஆனால், மத்திய அரசு அவர்களை அப்படிப் பார்க்கவில்லை. சிங்கள அரசை திருப்திப் படுத்துவதற்காக ஈழத்தமிழர்களை பலிக்கடா ஆக்கிவிட்டது பா.ஜ.க அரசு. ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசும் இதைத்தான் செய்தது.

முள்ளிவாய்க்காலில் ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழர்களை இலங்கை இராணுவம் படுகொலை செய்தபோது, அப்போதைய காங்கிரஸ் அரசு அனைத்து உதவிகளையும் செய்தது. அதே கொள்கையைத்தான் மோடி அரசும் இப்போது பின்பற்றுகிறது. 'சிங்கள அரசை திருப்திப்படுத்தி, சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை மீட்டு விடலாம். அதற்கு ஈழத்தமிழர்களை பலி கொடுக்கலாம்' என்பதே மத்திய அரசின் கணக்கு.

> “என்னுடைய கருத்து, ஈழத்தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை மட்டுமே அளிக்கக் கூடாது. அப்படி அளித்தால், அவர்கள் ஒருபோதும் இலங்கைக்குச் சென்று குடிமக்களாக வாழ முடியாது. இது ஆட்சியாளர்களுக்கு மேலும் வசதியாகிவிடும். ஈழத்தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும்.”

ஆனால், அது ஒருபோதும் நடக்காது. 'சீனாவின் ஆதரவு இலங்கைக்கு இருந்தால்தான், இந்தியா நம்மை மிரட்டாமல் இருக்கும்' என்பதை இலங்கை ஆட்சியாளர்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்தில் குடியுரிமை மறுக்கப்பட்டது மட்டுமல்ல, ஐ.நா. அகதிகள் ஆணையம் வழங்கும் உதவிகளையும் அனுமதிக்க மறுக்கிறது மத்திய அரசு."

**“ஈழத்தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை சாத்தியமா?”**

"என்னுடைய கருத்து, ஈழத்தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை மட்டுமே அளிக்கக்கூடாது. அப்படி அளித்தால், அவர்கள் ஒருபோதும் இலங்கைக்குச் சென்று குடிமக்களாக வாழமுடியாது. இது ஆட்சியாளர்களுக்கு மேலும் வசதியாகிவிடும். ஈழத்தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும். அவர்கள் இலங்கை குடியுரிமை வைத்திருக்கிறார்கள். அதனுடன் இந்திய குடியுரிமையையும் கொடுத்தால் இங்கேயுள்ள சலுகைகளையும் உரிமைகளையும் அவர்கள் அனுபவிக்கலாம். அவர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்றால், இலங்கை குடியுரிமை இருப்பதால் போய்க்கொள்ளலாம்."

**“இந்தியாவில் உண்மையிலேயே ஈழத்தமிழ் அகதிகள் எவ்வளவு பேர் வசிக்கிறார்கள்?”**

“தமிழகத்தில் இருக்கும் அரசு அகதிகள் முகாம்களில் 90,000 பேருக்குமேல் இருக்கிறார்கள். வெளியே தங்கள் சொந்தப் பொறுப்பில் வாடகைக்கு வீடு எடுத்து ஒரு இலட்சம் பேர் வரை வசிக்கிறார்கள். ஆக மொத்தம், சுமார் இரண்டு இலட்சம் பேர் இருக்கிறார்கள்."

**“இரட்டைக் குடியுரிமையை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளுமா?”**

“இலங்கையின் அரசியல் சட்டப்படி இரட்டைக் குடியுரிமை உண்டு. இப்போது ஜனாதிபதியாக இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கக் குடிமகன். அவர் எப்படி இலங்கையில் ஜனாதிபதி ஆனார்? 2009ஆம் ஆண்டு இலங்கை அரசின் பாதுகாப்புத் துறையின் செயலாளராக இருந்தார். அவர்தான் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளை முன்னின்று நடத்தினார். மனித உரிமை ஆணையம் அவர்மீது குற்றம் சாட்டியவுடன் அமெரிக்காவுக்கு ஓடிப் போய் விட்டார். அங்கு வசிக்கும் தமிழர்கள் அவர் போர்க்குற்றவாளி எனப் போராடியதால் அங்கும் அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பிறகு, மீண்டும் இலங்கைக்குத் திரும்பி விட்டார். இரட்டை குடியுரிம்ம இருந்த காரணத்தால்தான் தற்போது ஜனாதிபதியாகவும் அவர் பதவிவகிக்க முடிகிறது. அதனால் இரட்டை குடியுரிமையை அந்த அரசு ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை."

**“தற்காலிகக் குடியுரிமை, கடவுச்சீட்டு வேண்டும்!”**

**காசி ஆனந்தன் வேண்டுகோள்**

“ஈழத்தமிழ் மக்கள் தற்போது இலங்கைக்குச் செல்லும் சூழல் இருக்கிறதா?" என்று தமிழகத்தில் வசித்து வரும் ஈழக்கவிஞர் காசி ஆனந்தன் கூறுகிறார்.

“ஈழத்தமிழர்கள் இலங்கையில் வாழ முடியாமல் தற்போதும் புலம்பெயர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இங்கே முகாம்களிலிருந்து 400 குடும்பங்கள் ஈழத்துக்குச் சென்று, அங்கு வாழ முடியாமல் திரும்பி வந்திருக்கின்றன. போர்க்காலத்தைவிட தற்போது நிலை மோசமாக இருக்கிறது. இப்போதைய சூழ்நிலை அங்கு அச்சுறுத்தல் பலமடங்கு அதிகரித்திருக்கிறது.

இதனால், தற்போது இங்கு இருக்கும் முகாம்களில் வாழும் யாருக்கும் ஈழத்துக்குப் போக விருப்பமில்லை. வெளிநாடுகளில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வசித்தாலே குடியுரிமை கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், இங்கு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்தும் குடியுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு நிரந்தர குடியுரிமைகூட தேவையில்லை. இரட்டை குடியுரிமை வழங்கலாம்.

அதற்கு இலங்கை அரசின் ஒப்புதல் வேண்டும். மேற்கு நாடுகளில் வழங்குவதுபோல் அகதிகளுக்குரிய தற்காலிகக் குடியுரிமை, வெளிநாடுகளுக்குச் சென்று வருவதற்கான கடவுச்சீட்டு உரிமைகளையாவது வழங்க வேண்டும்."

**ஜூனியர் விகடன்**




# தாஜ்மஹால் பற்றி அறியாத உண்மைகள்




உலகில் தாஜ்மஹாலை விரும்பாதவர்கள் என்று ஒருவர் கூட இருக்க மாட்டோம். சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் விரும்பப்படும் ஒரு வரலாற்றுச் சின்னம் மற்றும் காதலின் சுவாசம் பேசும் காதலர்களின் கோவில் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வாறான தாஜ்மஹாலை விரும்பும் நமக்கெல்லாம் தாஜ் மஹால் சாஜஹானால் கட்டப்பட்டது என்றுதான் தெரியும். மாறாக அதனை கட்டிய சாஜஹானின் பின்னணி உங்களுக்குத் தெரியுமா? அந்த வகையில் தாஜ்மஹால் பற்றிய சில சுவாரஷ்யமான தகவல்கள்.

இந்தியாவின் ஆக்ரா இராச்சியத்தின் மிகப்பெரிய சக்கரவர்த்தி அக்பரின் வழியில் வந்த மாபெரும் சக்கரவர்த்தி சாஜஹான். கி.பி. 1628 தொடக்கம் 1658 ஆம் ஆண்டு வரை ஆக்ரா இராட்சியத்தின் மாபெரும் மன்னனாக ஆட்சி செய்த சாஜஹான் தனது வாழ்க் கையில் பெரும்பாலான காலத்தை கட்டடக்கலைக்கே செலவிட்டார். மிகுந்த திறமைசாலியாக காணப்பட்ட சாஜஹானின் முதல் மனைவி மும்தாஜ் அல்ல சாஜஹானின் மூன்றாவது மனைவிதான் மும்தாஜ்.

அதேபோன்று மும்தாஜின் நான்காவது கணவன்தான் சாஜஹான். தனது அரண்மனையில் பணிப் பெண்ணாக பணிபுரிந்த மும்தாஜை விரும்பி திருமணம் செய்துகொண்டார் சாஜஹான். மும்தாஜ்



இறந்தது அவளது 16 ஆவது பிரசவத்தின் போதே ஆகும்.

தான் மும்தாஜ் மீது கொண்ட அன்பு அளப்பரியது அவளுக்காகவே மிகப்பெரும் மாளிகையை உருவாக்குவேன் என சாஜஹான் கொண்ட சபதம் தான் பின்னாளில் உருவான தாஜ்மஹால்.


இருப்பினும் மும்தாஜின் மரணத்தின் பின்பு அவளின் தங்கை யையும் திருமணம் செய்து கொண்டாராம் சாஜஹான். மும்தாஜ் மஹாலை உருவாக்க வேண்டும் என்பதற்காக உலகெங்கும் தேடி பல்லாயிரக்கணக்கான பளிங்கு கற்களையும் பல்லாயிரக்கணக்கான வேலையாட்களையும் தேடி பணியில் அமர்த்தினார். மொத்தம் 20,000 வேலையாட்களைக் கொண்டு 21 வருடங்கள் கட்டப்பட்டது தாஜ்மஹாலாகும்.

தாஜ்மஹாலின் பணிகள் நிறைவடைந்ததும் அதனை கட் டியவரை அழைத்த சாஜஹான் பெருந்தொகையான பரிசில்களை வழங்கி அவரின் கையையே துண்டித்து விட்டாராம். நாட்கள் செல்ல செல்ல தாஜ்மஹால் மீது மிகுந்த மோகம் கொண்டவராகவே மாறிய சாஜஹானை தனக்கு ஆட்சி கிடைக்கவில்லை என்ற கோபத்தில் சிறை வைத்தார் அவரது மகன் ஔரங்க சீப்.

ஒரு நாளைக்கு இரண்டு வேளை மட்டும் உணவு வழங்கப்படும் இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டாராம் ஆக்ரா பேரரசன். தனியறையில் பூட்டப்பட்டு தாஜ்மஹால் மட்டுமே தெரியக்கூடிய வகை யில் துவாரமிட்டு இருட்டறையில் சிறை வைக்கப்பட்ட சாஜஹானை பார்ப்பதற்கு அவளது மகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டாள்.

தான் இறந்த பின்பு தாஜ்மஹாலுக்கு அருகிலேயே தனக்கும் அதேபோன்றொரு பளிங்கு மாளிகை கட்டவேண்டும் என தன் மகனிடம் கோரிக்கை விடுத்தார் சாஜஹான்.

ஆனால் தன்னால் அவ்வாறு மாபெரும் மாளிகை கட்டி மேலும் 20 வருடத்தை வீணடிக்க முடியாது எனக் கூறிய ஔரங்கசீப் வேண்டுமென்றால் தாஜ்மஹாலின் ஏதேனும் சிறிய இடத்திலேயே தங்களை நல்லடக்கம் செய்வதாகக் கூறி மறுத்து விட்டாராம். கட்டடக்கலையிலே தன் கவனத்தை செலுத்தி தாஜ்மஹாலே உயிரென்று வாழ்ந்து இறுதியில் தாஜ்மஹாலை பார்த்த வண்ணமே உயிர் விட்டாராம் மொகலாய பேரரசன் சாஜஹான்.



ஜெ.பிரவீஸ்,
தரம் 2, பருத்தித்துறை சித்தி சிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை.

## புதுவருடம்

வருகுது வருகுது புத்தம் புது வருடம்
பட்டாசு வெடி கொளுத்தி வரவேற்றிடுவோம்
பலவகை பலகாரம் செய்து புதுவருடம்
தனை வரவேற்றிடுவோம்.

புத்தாடை அணிந்து புன்னகை முகத்துடன்
வரவேற்றிடுவோம் உற்றாரும் உறவினரும்
சேர்ந்து புதுவருடத்தினை வரவேற்றிடுவோம்.

பள்ளி செல்லும் பாலகர் நாம்
பாடி மகிழ்ந்து வரவேற்போம் இந்த
புத்தம் புது வருடத்தினை

உ.அனந்திகன்,
தரம் 3, SOS சிறுவர் கிராமம், அனுசம் வீடு.

## விடுகதைகளும் விடைகளும்

- தலை இல்லாதவன் தலையை சுமப்பவன். அவன் யார்?

  **தலையணை**

- கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்?

  **காலிங்பெல்**

- வாலால் நீர் குடிக்கும். வயால் பூச்சொரியும் அது என்ன?


  **விளக்கு**

- அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?

  **மிருதங்கம்**

## பழமொழிகள்

- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
- அடியாத மாடு படியாது.
- அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்.
- அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
- அகத்தினழகு முகத்தில் தெரியும்.
- அகல இருந்தால் நிகள உறவு, கிட்டவந்தால் முட்டப் பகை.
- அகல உழுகிறதை விட ஆழ உழு.
- அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.
- அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
- அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
- அடக்கம் உடையார் அறிஞர். அடங்காதவர் கல்லார்.



வோ.கனிஷா,
தரம் 9 ஏ, யா/கனகரட்ணம் ம.ம.வி., சதயம் வீடு, SOS சிறுவர் கிராமம்.








**சினிமாவில் நன்றாக நடனமாடக் கூடிய நடிகை யார்?**

**கூட்டமைப்பு வடக்கு- கிழக்கை விட மற்றும் பல இடங்களில் தேர்தலில் போட்டி இடப் போகிறதாமே உண்மையா?**

**தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன வியாசரே?**

நிதர்ஷன் — யாழ்ப்பாணம்

**தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன வியாசரே?**

தற்போதைய பெண்களின் சமூகச் சீர்கேட்டிற்கு இந்த நாசமறுந்த தொடரே முக்கிய காரணம்.

யார் என்றே தெரியாத ஒருவனுடன் ஒரு பெண் தொலைபேசியில் அறிமுகமாகி வீடு வரை வந்து அந்தப் பெண்ணை தான் நினைத்த இடமெல்லாம் கூட்டித்திரிகிறான்.

வெளிநாடு என்றதும் எமது கலாசாரத்தை மறந்து சீரியலில் தனக்குப் பிடித்த அந்த நடிகையின் நடத்தையைப் பின்பற்றி சீரழிந்து போக வந்தவனும் வெளிநாடு பறந்து போக, எல்லாம் இடிந்துவிட, வாழ்க்கை இழந்து நிர்க்கதியாய் நிற்கிறாள் அவள்.

அன்பு — வடமராட்சி

**புலியைக் குறைகூறிக் கொண்டிருப்கிறதே கூட்டமைப்பு?**

தமிழர்களின் நாடி அறிந்து செயற்பட வேண்டியவர்கள் தென்பகுதியைச் சாந்தப்படுத்த தலைப்பட்டு விட்டார்கள்.

அதனால் தான் இப்படி செயற்படுகிறார்கள். தேர்தல் வந்தால் முழு சந்திரமுகியாக மாறி, தேசியம், சுயநிர்ணயம், தனிநாடு, தமிழீழம் என்று அல்லோலகல்லோலப்படுவார்கள்.

தேர்தல் முடிய அந்தக் கதை மறந்து மீண்டும் பழைய புராணத்துக்குச் சென்று யாருக்காவது முட்டுக் கொடுத்துக் கொண்டு நிற்பார்கள்.

இதே இவ்விடயத்தில் பேசிப் பேசி வாய் உளைந்து விட்டது.

நேதாஜி — வதிரி

**ராஜித மீது எம்மவர் சிலருக்கு எம்மில் இல்லாத கருணை தோன்றியிருக்கிறதே?**

எல்லாம் விஸ்வாசம். தமிழர்களாகிய நீங்கள் எனக்கு என்னத்தைத் தந்து கிழித்தீர்கள்.

ஆனால் அங்கு எல்லாம் கிடைத்தது. எதற்கும் இல்லை என்ற பதில் வரவில்லை உரிமைகளைத் தவிர்

அதனால் கிடைத்ததற்கு கொஞ்சம் அதிகமாகக் கூவலாமே என்று சிந்தித்திருப்பினம் போல. எல்லாம் எம் தலைவிதி என்று அழுவதை விட வேறென்ன இருக்கப் போகிறது.

நீலாம்பரி — விஸ்வமடு

**சினிமாவில் நன்றாக நடனமாடக் கூடிய நடிகை யார்?**

நாட்டியப்பேரொளி பத்மினி அம்மா மட்டுமே அந்த பட்டத்திற்கு மிகப் பொருத்தமானவர். தில்லானா மோகனாம்பாள் படத்தில் மறைந்திருந்து பார்க்கும் மர்மமென்ன என்ற பாட லில் நவரசத்தையும் இரு நொடிகளில் காட்டி யிருப்பார். அந்தத் திறமை வேறு எவருக்கும் இல்லை என்றே கூறவேண்டும்.

முன்னைய காலத்தில் நடிகர், நடிகைகள் நடனமாடினார்கள். அதை கமராவில் பதிவு செய்தார்கள். இப்போது நடிகர், நடிகைகள் சும்மா அசைய கமரா ஆடுகிறது. அவ்வளவு தான். நாட்டியப் பேரொளி பத்மினியை மிஞ்ச யாராலும் முடியாது.

கலை — மிருசுவில்

**யாரிலாவது உங்களுக்குக் கோபம் வந்தால் என்ன செய்வீர்கள் தலைவா?**

கோபம் வராத மனிதன் கிடையாது. ஆனாலும் அந்தக் கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவர்தான் மனிதன். கோபத்தைக் கட்டுப்படுத்துவதனாலோ என்னவோ என்னை எல்லோரும் ரொம்ப நல்லவன் என்று சொல்கிறார்கள்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

நிலா — சுழிபுரம்

**வியாசரே உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?**

நீங்கள் எங்கோ அவசரமாகச் சென்று கொண்டிருக்கீறீர்கள். அப்போது ஒரு கை உங்களை நோக்கி நீள்கிறது.

ஐயா சாப்பிட ஏதும் தாங்கோ என. அப்போது உங்களிடம் இருக்கும் ஏதாவதை அந்த கையில் திணித்துப் பாருங்கள். அந்தக் கண்கள் உங்களுக்கு ஆயிரம் நன்றி சொல்லும்.

அந்தப் பார்வையில் தான், அந்தத் திருப்தியில் தான் கடவுள் இருக்கிறான்.

தரன் — சுன்னாகம்

**மக்கள் மத்தியில் பொதுநலம் கொஞ்சமும் இல்லாது போய்விட்டதே வியாசரே?**

இதற்கு நல்ல உதாரணம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இருந்து 100 மீற்றர் தொலைவில் 8 ஆம் கட்டை ஒழுங்கைக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்தில் ஒரு முதியவர் சுமார் 10 மாதங்களுக்கு மேலாக இரவு பகல் தங்கி இருக்கிறார்.

அதற்குள் பாய், தலையணை, தனது தட்டு முட்டுச்சாமான்கள் என்பவற்றை எல்லாம் வைத்திருப்பதுடன் இரவில் விளக்கு கொளுத்தி வைத்து விட்டு தூங்குகிறார்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் உள்ள சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் கண்களுக்கு இந்த முதியவர் தெரியாது போனது ஏன் என்பதே எமது கேள்வி.

மழை காலம் மக்களுக்கு இடையூறாய் ஒரு முதியவர் இருக்கிறார். அவரைஉரிய இடத்தில் சேர்க்க எம்மவர் யாருக்கும் மனது இல்லை என்றால்எப்படிஎமக்கு பொது நலசிந்தனை வரும்.

நிது — நெல்லியடி

**வியாசரே உங்களுக்கு ஹீரோவாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் ஹீரோயினாகத் யாரைத் தேர்ந்தெடுப்பீர்கள்?**

அதில் எனக்கு மூன்று வேடம். தாத்தா, மகன், பேரன். தாத்தாவிற்கு மீனா, மகனுக்கு நயன் தாரா, பேரனுக்கு கீர்த்தி சுரேஸ் ஜோடியாக இருக்க வேண்டும்.

படம் பாகம் 1,2,3 என்று சென்றுகொண்டே இருக்கும். ஹீரோயின்கள் மாறிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் ஹீரோ வியாசர் மட்டுமே. இது எப்படியிருக்கு.

சயன் — யாழ்ப்பாணம்

**கூட்டமைப்பு வடக்கு- கிழக்கை விட மற்றும் பல இடங்களில் தேர்தலில் போட்டி இடப் போகிறதாமே உண்மையா?**

ஓ... அப்படியா. வெறிகுட், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற நாமத்துடன் சிங்களப் பகுதியில் போட்டியிட்டால் சிங்களவர்கள் சும்மா வாக்கை வாரி இறைப்பார்கள் பாருங்கள்.

ஏன் அந்த சந்தர்ப்பத்தை தவறவிடுவான். வடக்குக் கிழக்கு என்று முடங்கிக் கிடக்காது தேசிய ரீதியில் போனால்தானே தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகலாம். பேஸ்... பேஸ்...

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# உலகிற்கோர் செய்தி

த.சோபிதா, அச்சுவேலி தெற்கு



பெண்மையைச் சிதைத்து
வன்முறை வளர்த்தால்- அவளின்
சிவந்த கண்களில் நிறைந்த
வலிகளோடு வழியும்
கண்ணீர்த்துளிகள்
விழிகளகன்று வெளியே
சிந்தும் போது
சினம் கொண்டு
பெண் எழுந்து
சீற்றம் கொண்டால்
விடம் ஏறி வளர்ந்த
பெருவிருட்சமாய் மாறி
வீசும் வாளுக்கு
இரையாய் உன்னை
வெட்டியும் எறிவாள்
மனிதா...!
எண்ணிடாதே
பெண்ணை
மென்மையென்று
வானகன்று விண்ணில்
உதித்த சுடரொளி அவள்
சாதுமிரண்டால் மட்டுமல்ல
மாது மிரண்டாலும் சூது கவ்வும்
பெண்ணை அடிமையாய் எண்ணும்
உன் அடிமனதை மாற்றிவிடு...!
உலகில் சுதந்திரப் பெண்கள்
வாழட்டும் என்றும்
பெண்மையை பெருமையாய்
உலகம் பேசட்டும்

## இளமையுடன் வாழ்க



சுந்தரத் தமிழ்பேசி
சுற்றங்களுடன்
கைகோர்த்து
வளமாய் வரமாய்
வனப்பாய் வலம் வந்து
அலசி உரசும் "ஆலடி மாநாடு"
சொற்குவியலால்
"கவிதைக்கலசம்"
மௌனித்து மிளிரும்
"மௌனத்தின் தேடல்"
சிந்தைக்கு விருந்தாகும்
"இன்று ஒரு தகவல்"
சிறிக்க சிந்திக்க "வியாசர் பதில்கள்"
கட்டுரை, சிறுகதையென
பக்கங்களில் பலசுமந்து
யாழ்ப்பாண வரலாறு தந்து
நித்திய சுகம் நோக்கி
நித்தமும் நம் சேயாகி
ஈழவர் மண்ணிலே
ஈர்பத்தாம் அகவை தனிலே
அடிவைத்து அழகாய்
ஒளிவீசும் ஊடகமே
சங்குநாதம் ஒலிக்க
சந்தம் பாடி மகிழ்ந்து
வாழ்த்துகின்றேன் உளமார
வாழ்க என்றும் இளமையுடன்
வளர்க வலம்புரியே!

உடுவிலூர் கலா

## சிரிப்போம் சிந்திப்போம்

கவிதைக் கலசம்

| | |
|---|---|
| கட்டும் வீட்டுக்குப் போட வேண்டும் | கூரை |
| கடலில் உள்ள மீனில் ஒன்று | சூரை |
| அரசர்கள் ஆளுவது | பாரை |
| அதிக தாகம் வந்தால் குடி | மோரை |
| காட்டில் வளரும் முள்ளுச் செடி | காரை |
| வட்டம் போட நமக்கு வேண்டும் | ஆரை |
| வைரமுள்ள காட்டுமரம் | வீரை |
| வாரவேண்டும் கிணற்றில் அழுக்குத் | தூரை |
| பகிடிக்கும் ஏமாற்றாதே | ஊரை |
| பார்க்காதே பிற பெண்கள் | மாரை |
| வல்லாரை சிறந்ததொரு | கீரை |
| வெட்டாதே ஆலமரத்து | வேரை |
| வனப்பான பறவை செங்கால் | நாரை |
| வாலியின் பொண்டாட்டி | தாரை |
| சத்து அதிகம் கொண்ட மீன் | பாரை |
| தவளைகளில் ஒரு சாதி | தேரை |
| வயலில் வளரும் புல்லு | கோரை |
| வரிந்து கட்டு இடுப்பு | வாரை |
| சாதுவான ஒரு பாம்பு | சாரை |
| சனம் விரும்பாது கொடும் | போரை |

கந்தபேரின்பம், காவலூர் கவிஞன்

## வலிந்து முயல்வோம்

பூமி பிறப்பெடுத்து பூபாளம் பாடுதிங்கே
சாமியர் பாவிகள் சாபமிடர் பலருமிங்கே
ஓடி ஓடி உழைப்பெடுத்து ஓடாய்ப் போனவனை
தேடி அலைகின்றேன்- யாருமிலை கண்டிலரோ
களிமண் பிளிந்தெடுத்து கனவேலை செய்பவனும்
பனையிலே நடையயின்று பதநீர் பறிப்பவனும்
நீலக்கடலோடி நெடுமுத்து குவிப்பவனும்
உச்சிவெயில் பரப்பினிலே கச்சையுடன் திரிபவனும்
தேடி அலைகின்றேன்- யாருமிலை கண்டிலரோ
ஓடுகின்ற ஊருடனே சேர்ந்து ஓடுவதற்கு
மானிடனே நீ மந்தையல்ல- மாற்றுபவன்
ஓடி உழைப்பவனும் உடல் பிழிந்து வாழ்பவனும்
வாழும் இடம்தேடி வாசலிலே சென்றவனை
வானிலே பறக்கவிடு- வசந்தகாலம் நீ அறிவாய்

கல்முனைநகர் கோரி

## வாழ்க்கை வாழ்வதற்கே

01

வார்த்தைகளை மென்மையாய்
அவிழ்த்து விடுங்கள்
எரிந்து வீழ்ந்து இந்த உலகில்
நீங்கள் எதையும்
சாதித்துவிடப் போவதில்லை

நீங்கள் எவ்வளவு
உயரத்தில் இருந்தாலும்
உங்கள் எண்ணங்களும்
செயல்களும் எப்போதும்
சிறுமையாயும் எளிமையாயும் இருக்கட்டும்

உங்கள் கைகளில் பணம் இருந்துவிட்டால்
அதே மற்றவரிடமும் அது இருக்கும் என்ற
குறுகிய எண்ணத்தை தூக்கி எறியுங்கள்

கோபத்தைக் கட்டுப்படுத்த முயலுங்கள்
முயற்சி திருவினையாக்கும் என்பார்கள்
கோபத்தைக் கட்டுப்படுத்துகிறேன் எனும்
எண்ணம் தோன்றிவிட்டாலே
உங்களில் மாற்றத்தை உணர்வீர்கள்

உணவகத்தில் கொட்டிச் சிந்தி உண்டு
ரிப்ஸ் கொடுத்து நிமிர்ந்து நிற்பதிலும்
ஏழைக்கு ஒருபிடி உணவு கொடுப்பதில்
திருப்தியும் தென்பும் இருக்கிறது
ஒருமுறை முயற்சி செய்யுங்கள்

பொறுமை உங்களிடம்
இருக்கிறது எனின்
நீங்கள் மிகவும்
அழகாகத் தெரிவீர்கள்

உங்கள் அலுவலகத்தில்
வேலைத்தளத்தில்
கத்தி உச்ச சுதியில் பேசி
ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை
அது உங்கள் உடல் நலத்துக்கே
தீங்கைத் தரும்

(வாழ்க்கை மலரும்)

மாவை.நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 478



## அணைத்திடுவாள் அன்னை இனி

இயற்கையா உமை
ஏற்றி வந்து புவியில்
எப்படித்தான் அதன்
மடியில் தாங்கிற்றோ
இறைப்பேராற்றலாலே
இதுதான் நிகழுமாமோ?
நிறைகிறது மனம்
நிம்மதியும் கிட்டட்டும்
அறம் இன்னும் அழியவில்லை
அணைத்திடுவாள்
அன்னை இனி

சிவனடியான் சரவணை

## மௌனத்தின் தேடல் -479



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை / ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சிந்தனைக்கு

நான்கு கண்களை
நுணுகி நீர் பார்ப்பீரேல்
ஏன் இந்த மானுடமோ
இயற்கைக்கு முரணாகி
எடுத்த பல செயலாலே
பயனற்ற விளைவுகள்
பாரிலெழும் இனும் நீ
சிந்தனைக்கு எடுப்பீரா?

தணிகைவாசன்
தாவடி

## அடைக்கலம்

கொடிய போரால் இன்று
சிறுவர்கள் நாம் யாருமற்ற
அநாதைகளாகத் தனித்து
விடப்பட்டுள்ளோம்- உலகில்
பிற சிறுவர்களைப் போல்
நாமும் சுகமாய் வாழ
யார் தருவார் எமக்கு அடைக்கலம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## எதிர்காலம் வளமாகும்

உடன் பிறப்பை
அணைத்தபடி உயிர் துறந்த
உறவுகளை- பெற்றோரை
தேடுகின்றாயா?
கடலோரக் கற்கள் உன்
கண்ணீரைத் துடைக்குமா?
இயற்கை அனர்த்தம்
உங்களை ஏதிலியாக்கி
விட்டதா?-உன் போன்ற
பல சிறுவர்களுடன்
சேர்ந்துகொள்
அநாதைகளாக அல்ல
எதிர்காலத்தை
வளப்படுத்துவதற்காக!

அபிகுலமாலிகா
சங்கானை

## கண்ணும் கருத்தும்

உலகமுய்ய
உள்ளம் விரும்ப
பொதுமக்களுக்கு முடிசூட்டி
அழகுபார்க்கும்
சனநாயகத்தில்
பெரும்பான்மையும்
சிறுபான்மையும்
இரு கண்களாகும்
பெரு விருப்புடன்
ஒன்றை மட்டும்
இன்றியமையாதது
என்றெண்ணினால்
என்றும் இப்படித்தான்

க.நாகராசா
நுணாவில்

## மனிதநேயம் காக்குமோ?

இயற்கையின் பெரும் சீற்றத்தினாலேயோ
அல்லது கொடிய வன்போரினாலேயோ
தாய் தந்தையை இழந்து தவிக்கும்
சோதனை இந்தப் பிஞ்சுகளுக்கு
வந்ததோ? இது போன்ற குழந்தைகளை,
மனிதநேயம் காக்குமோ?

ச.பிரநிதன், மட்டுவில்

## பச்சிளம் பிஞ்சுகள்

பசுமை தென்படாப்
பாறாங் கற்களுள்
பச்சிளம் பிஞ்சுகள்
பரிதவிக்கும் தனிமை
இயற்கை நீ எப்படி
ஏற்றனை அன்னையே
தயக்கமின்றி தளிரினை
தாங்கிடவாரீர் மானுடமே

சிவமணி
சுருவில்

## விடிவு வரும்

உடல் மறைக்க
உரிய முழு துணியுமில
திடமான மனமுமிலாப்
பிஞ்சுகளின் இதயத்
தீரமிதா உலகிற்கு
அடம்பிடித்து அவலமதை
ஆர்ப்பரித்த போரினாலே
விடமாகிப் போகிறதே
வித்தாக விருட்சமாகட்டும்
விடிவுவரும் காத்திருப்பீர்

கார்வண்ணன்
ஊர்காவற்றுறை

## வறுமையின் கொடுமை

பசியும் பட்டினியும் திணறவைக்கும்
கொடுமையிது- தாய் தந்தை இழப்பின்
மத்தியில் உணவுக்கான ஏக்கமிது
வாரீர் உதவிக்கரம் நீட்ட
இன்றைய சிறுவர்கள்
நாளைய தலைவர்கள்

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை.ம.வி.

சிறுகதை

# அப்பாவும் ஆய்வு அறிக்கையும்

ஐயா தபால் எனக்கூறி 2-3 கடிதங்களைத் தபாற்காரர் தந்துவிட்டுச் செல்கிறார். அழகிய மணி மணியான கையெழுத்துக்களிலிருக்கும் கடிதம் வெண்ணிலாவினது. மற்றது ஆய்வுகூட அறிக்கை போல் தெரிகிறது. இன்னொன்று வாசகர் கடிதம். அண்மையில் எனது சிறுகதைத் தொகுப்பு பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான பாராட்டுக் கடிதம். வெண்ணிலா குண்டுகுண்டாக அழகிய கையெழுத்தினால் என்ன எழுதியிருக்கிறாள் என ஆர்வத்துடன் திறந்து பார்த்தேன். நகரத்து உயர்கலைக் கல்விக்கூட மொன்றில் விடுதியில் தங்கிப் படிக்கிறாள். கடிதத்தை வாசிக்க வாசிக்க அதிர்ச்சியும் வேதனையும் மனதுள் எழுகின்றது.

அப்பா இந்த வாரமளவில் அம்மா எதிர்பார்த் திருக்கும் வைத்திய பரிசோதனை அறிக்கை வரலாம். அதன்பின் நீங்கள் என் அப்பா அல்ல என்றாகிவிடலாம். ஆதலால் ஆசைதீரப் பாசம் பொங்க மீண்டும் மீண்டும் உங்களை அப்பா அப்பா என அழைத்து மகிழ்வதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை. நீடித்த சந்தோசம் எப்போதும் நிலைத்திருப்பதில்லை என்று அறிவுக்குத் தெரிந்தாலும கூட மனசு ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

அப்பா இவ்வளவு காலமும் என்னை உயர்த்தி வைக்கப் புரிந்த தியாகங்கள் வீணாகவில்லை. இறுதித் தேர்வுகூட நான் நன்றாகவே எழுதியுள் ளேன். முதல்தர மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்படு வேன் என்று திடமாக நம்புகிறேன். வீட்டில் உள்ள குழப்பங்களுக்குள் எனது கல்வி குழம்பிவிடும் என என் அருகாமையையும் அரவணைப்பையும் குறும்புகளையும் நேசிக்கும் நீங்களே என்னைப் பிரிந்து விடுதியில் வைத்துப் படிப்பித்துக்கொண்டு மன உளைச்சல்களுடன் வாழ்வதை நான் மானசீகமாகப் புரிகின்றேன் அப்பா. என்ன செய்வது ஒன்றின் இழப்பில் தான் புதிதொன்று உருவாகும்.

இந்தப் பொதுவிதியை யாராலும் மாற்ற முடியாது என்பது அம்மாவிற்கு ஏன் புரியுதில்லை என்றுதான் எனக்கு விளங்கவில்லை. எப்படியிருந்தாலும் யாரென்ன சொன்னபோதும் ஆய்வறிக்கை வந்தாலும் நீங்கதான் என் அப்பா. இது மாறாது. வருகின்ற சனிக்கிழமை அங்கு வரவுள்ளேன். அப்போது மிகுதி அனைத்தும் நேரில் பேசுவோம். அன்பைப் பகிர்ந்து கொள்வோம். ஆறுதலடையுங்கள் என எழுதியிருந்தாள்.

மனம் அமைதியிழந்து தவிக்கின்றது. நான் இவளது உண்மையான அப்பா அல்ல எனத் தெரிந்தி ருந்தும் மனம் வைத்திய அறிக்கை கண்டு ஏன் பயப்படுகின்றது? ஏனைய கடிதங்களைப் படித்தபோதும் வாசகர்களின் புகழ்தலையும் பாராட்டுக்களுக்கிடையி லேயும் அம்மா எதிர்பார்த்தவாறு நீங்கள் என் அப்பா அல்ல என்பதற்கு ஒரு ஆதாரமாக வைத்திய அறிக்கை வந்துவிடுமோ என்ற வரிகள் என்னை சல்லடையாகி அரித்தெடுத்தன.

எனது குடும்பம் பிள்ளைகளையும் மனைவி யையும் விஷக்குண்டு வீழ்ந்து வெடித்து எரிந்து விட்ட நிலையில் நான் தனியாக நின்ற வேளையில் தனது குடும்பத் தலைவரையும் இழந்து என்னிடம் தஞ்சம் வந்தவள்தான் கமலம். இளமையாகவும் அழகாகவும் இருந்தாள். அவள் சமூகத்தில் தனித்து வாழமுடியாது சமூகம் விடாது என்றெண்ணி சேர்த்துக்கொண்டேன். பிள்ளை வெண்ணிலா மீது பார்த்தவுடனேயே ஒருவகை ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. ஆரம்ப நாட்களில் எல்லாம் இயல்பாகவே போய்க்கொண்டிருந்தது. நல்ல குடும்பப் பெண்ணாகவே வாழ்ந்து வந்தாள். அப்பா என்று கற்றுத் தந்தவளும் இவள்தான். பிள்ளை மனதில் நான்தான் அப்பா என நன்றாகப் பதிந்து விட்டது.

பிள்ளை வளர வளர அப்பா அப்பா என்று என் னைச் சுற்றி வளைய வளைய வரத்தான் இவள் வெறுப்படையத் தொடங்கினாள். பிள்ளை ஒன்றும் புரியாமல் அழும். என்னுடன் சண்டையிடுவாள். நான் பிள்ளையில் அன்பு காட்டுவதால் தன்னிடம் சேர மறுக்கிறது என்பாள். அன்பு காட்டினால் தான் அன்பைப்பெறலாம் என்று இவளுக்கு பல தடவைகள் கூறியும் அவள் மனதளவிலே பாதிப்புற்றிருப்பதாகவே நான் உணர்ந்து கொண்டேன்.

இவளது அழகும் இளமையும் வீணாகுகின்றதே என்ற ஏக்கமுமாயிருக்குமோ என சில வேளை நான் யோசிப்பதுமுண்டு. ஆதலால் எனது நண்பரொரு வரின் உதவியுடன் வெண்ணிலாவைக் காப்பகத்தில் விட்டு படிப்பித்து வருகின்றேன். மேசையிலிருக்கும் வைத்திய அறிக்கை கொண்ட கடிதம் என்னைப் பைத்தியக்காரன் ஆக்குகிறது. இருப்புக்கொள்ள வில்லை. பார்க்கப் பார்க்க நான் படும் அவஸ்தையை யெல்லாம் என்னுட னேயே இன்னும் வசித்துவரும் கமலம் கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு போகிறாள்.

எல்லோருடனும் சேர்ந்து நாங்களும் இடம்பெயர்ந்து யுத்த பூமிக்குள் சிக்கிக் கொண்ட நான் ஏற்பட்டிருந்த உணவுத் தட்டுப்பாட்டுக்கை உணவு தேடிச்சென்று உணவுடன் வந்தபோது நான் பார்த்ததெல்லாம் நிர்மூலமாகிவிட்ட எனது குடும்பமும் சிதைந்து போன நான் வசித்து வந்த வீடும் தான். சிதைவுக்காலும் சாம்பல்களுக்காலும் எனது பிள்ளைகளும் மனைவி, உறவினர்கள் பீனிக்ஸ் பறவைகளாக முகிழ்ந்து எழமாட்டார்களா? என அரற்றிக்கொண்டும் ஆவேசமடைந்தும் நின்ற போது எனக்கு ஆறுதலாக இருக்கட்டும் என வந்தவள் கமலம்.

கைகளில் புன்சிரிப்புடன் கூடிய அழகிய குழந்தை வெண்ணிலாவுடன் அவளது உறவுகளும் குண்டுவீச்சில் அழிந்து போயிருந் தனர். மிகவும் அன்பாகவும் அந்நியோன் யமாகவும் ஆதரவாகவும்தான் ஆரம்ப நாட்களில் இருந்தாள். மாதிரிக் குடும்பம் என அயலவர்கள் கொண்டாடினார்கள். கொண்டாட்டம், கோவில் திருவிழா என்றெங்கெல்லாம் கூட்டிச் சென்றேன். எங்கள் இருவருக்குமிடையே ஒரு இடைவெளி இருப்பதாக அவளும் காட்டிக் கொடுக்காமல் வாழ்ந்து வந்தோம்.

என்ன ஒரு குழந்தை போதுமென எண்ணிக் கொண்டீர் களா? என் உறவுகள் கேட்கிறார்கள் என்றிவள் கேட்டபோது இவளது எண்ணங்களையும் விருப்பையும் புரிந்து கொண்டு யாழினி இருந்த இடத்தில் ஒருவருக்கும் இடமில்லை. வெண்ணிலாவுக்கு நல்ல அப்பாவாக மட்டுமே என்னால் வாழமுடிகிறது என்றுகூறி அவள் மனதைக் காயப்படுத்தி இருக்கக் கூடாதோ. அப்போது நிகழ்ந்ததுதான் அடிபட்டுக் காயப்பட்டு புலியாக எழுந்தவள் எனக்குக் கணவனாக வாழமுடியா தென்றால் வெண்ணிலாவுக்கு எப்படி அப்பாவாக முடியும் என்று சிலிர்த்து நின்றாள்.

ஒருகணம் நிலைகுலைந்து போனேன். பெண்மையின் ஆவேசம் கண்டு பயந்தும் விட்டேன். சுதாகரித்துக் கொண்டு யாழினியுடன் வாழ்ந்த வாழ்வு அப்படி. நீங்களும் நல்ல பெண்தான். ஆனால் வெண்ணிலாவுக்கு அம்மாவாக மட்டுமே வாழ்ந்து விடுங்கள் என்றேன். நீங்கள் வெண்ணிலாவுக்கு நல்ல அப்பாவாக இருப்பது போல நாமும் ஊர் கதைப்பது போல நல்ல தம்பதிகளாக வாழ்வோம். பிரம்மைகளுடன் வாழ வேண்டாம். இளமையும் வயசும் இருக்குமட்டும் இல் லறத்தை வாழ்ந்து கழிப் போம் என்றாள்.

இங்கே பார், கமலம் இப்போது எங்களைப் பார்த்து உல கம் முன்மாதிரிக் குடும்பம் என்று தானே கதைக்கிது. உணர்வுகளையும் பருவத்தையும் அர்ப்பணித்துவிட்டு எத்தனை ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் இந்த மண்ணுடன் சங்கமித்திருக்கிறார்கள். எத்தனை பேர் கடலுடன் சங்கமித்துப் போனார்கள். அவர்கள் இலட்சிய வெறியுடனும் வேட்கையுடனும் மரணித்தவர்கள். அவர்களுடைய கனவுகள் ஒருநாள் நிறைவேறும். நாம் சாதாரணமானவர்கள். நாம் கிடைத்த இளமையையும் வயசையும் வாழ்ந்துவிட்டுப் போவோம். நல்லது கூறினாய். நாமும் வெண்ணிலாவைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வருவோம் என இலட்சியம் வகுத்துக் கொண்டு அதற்காக உழைப்போமே. அவள் கெட்டிக்காரி. அவள் படிப்பாள். அது ஒருவகை சந்தோசம் என்றால் நாமும் இணைந்து வாழ்வது இன்னொரு சந்தோசம். வெண்ணிலாவும் தனக்கென ஓரிரு சகோதரங்களை விரும்பக்கூடும்.

அதற்கெல்லாம் வாய்ப்பேயில்லை. மீண்டும் சொல்கிறேன். யாழினி இருந்த மனதில் வேறொரு பெண்ணுக்கு இடமில்லை. நான் என்ன சுகத்திற்கு அலைபவள் என்று நினைத்து விட்டீர்களா? நீங்கள் உங்கள் மனைவியின் நினைவில் வாழமுடியுமென்றால் என்னாலும் என் அன்பரின் நினைவுகளுடன் வாழ முடியும். வாழ்ந்து காட்டுகிறேன் பாருங்கள்.

அன்று ஆரம்பித்த மனமுறிவு நீதிகேட்டு நீதிமன்று வரை சென்றுள்ளது. வெண்ணிலாவை இவர் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். அவள் இவரது பிள்ளை இல்லை. எனது குழந்தை என்று அழுது ஆர்ப்பாட்டம் பண்ணியதும் நீதிபதி முந்தைய வழக்குகளின் தீர்ப் புப்படி மரபணுச் சோதனைக்கு உத்தரவிட்டார். சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்பு வழங்க வேண்டிய அதிகாரி முன்பு நடந்தவையைப் பின்பற்றி தீர்த்து விட்டார்.

அதிகாரம், இடம், பொருள், ஏவல் அறிந்து களத்தில் நின்று முடிவெடுத்து நடைமுறைப்படுத்து வதற்குப் பதிலாக முன்னைய நடந்தவற்றையும் இயந்திர அறிக்கையையும் மேற்கோள் காட்டும் இயந்திரத் தனமாக வாழ்வுக்கும் மனிதன் மாறிவிட்டார்.மரபணுச் சோதனைக்காக நானும் வெண்ணிலா வும் அனுப்பப்பட்டு இயந்திரம் சான்றாதார அறிக்கை சமர்ப் பித்திருக்கிறது. அது மேசையில் போட்டபடி இருக்கிறது. அருவருப்பாயுமிருக்கிறது.

அப்பா வணக்கம் என கலகலவெனச் சிரித்தபடி என் கால்களைத் தொட்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு விரைந்து என்னைக் கட்டிக் கொண்டாள். துணிப் புத்தகப் பைகள் மூலைக்கொன்றாய் போய் விழுந்தன. நலமாயிருக்கிறீர்களா? என்றாள். முகம் மிக வாட்டமாயிருக்கே என்றாள். ஒன்றுமில்லை. ஒன்றுக்கும் கவலைப்படாதீ கள்.


நான்தான் உங்கள் மகள். நீங்கள்தான் என் அப்பா. இவர்தான் என் அம்மா என்றாள். பதில் கூறமுடியவில்லை. கண்கள் ஆனந்தத்தில் குளமாகின.

அம்மா இங்கே வாங்கோ என்றவாறு ஆனந்தத்துடன் கட்டியணைக்கப் போன மகளை நீ போ எல்லாவற்றையும் உன் அப்பாவோடு வைத்துக் கொள். நீ வளர்ந்திருக்கிறாய், படித்திருக்கிறாயே தவிர புத்தியில்லை. இன்னும் சில நாட்களில் விட்டுப் போக இருப்பவரை அப்பா, அப்பா எனக் கூறிக் கொண்டாடு கின்றாயே என உதறித் தள்ளினாள். இப்பவும் சொல்லுறன் இவர் உன் அப்பா இல்லை.

அம்மா தயவுசெய்து இனிமேல் இந்தப் பேச்சை எடுக்கவேண்டாம். அவர் எனக்கு அப்பாவா அல் லவா என்பதற்காகத் தானே மரபணுப் பரிசோதனை எடுக்க வைத்தீர்கள். அவரது மனதை எவ்வளவுக்கு சாக டித்தீர்கள். அவர் என் அப்பா அல்ல என்பதனை நான் 7-8 வயதுப் பராயத்திலேயே அறிந்து கொண் டேன். பின் நீங்கள் முரண்பட்டு நீதிமன்று சென்று என்னால் நம்ப முடியவில்லை.

அம்மா நீங்கள் என்னை எவ்வளவு பிரியத்துடன் வளர்த்தீர்கள். இவர்கள் உன் அப்பா என எனக்குக் கற்றுத் தந்தீர்கள். எந்தப் பிள்ளைக்கும் தன் அப்பா விடயத்தில் வரக்கூடாத சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டீர்கள். முதலில் அவர்தான் உன் அப்பா என்று கற்றுத் தருகிறீர்கள். அவரது உழைப்பில் நானும் நீங்களும் வளர்ந்த பின்னர் இவர் உன் அப்பா இல்லை என்கிறீர்கள். மரபணு அறிக்கை கோருகிறீர்கள். ஏன் அம்மா? உங்களுக்குள்தான் முரண்பாடுகள் காணப் படுகின்றன.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் மரபணு அறிக்கை உங்களுக்குச் சாதகமாக்கித் தருவார்கள். ஏனென்றால் இவர் என்னைப் பெற்ற அப்பா இல்லை. ஆனால் என்னையும் உங்களையும் சமூகத்தில் அந்தஸ்துடன் வாழ வைத்த தெய்வம் இவர். நீதிமன்று இவர் உன் அப்பா இல்லை என்று தீர்ப்புக் கூறட்டும். எனக்கு கவலையே இல்லை. ஆனால் இன்று மட்டுமல்ல என்றுமே என் ஏழேழு பிறவிக்கும் இவர்தான் என் அப்பா எனக் கத்தி அழுதுவிட்டு என்னருகில் வந்திருந்தாள். என் கைகளைப் பிடித்துக் கொண்டாள். இறுக்கிக் கொண் டாள். மரபணு அறிக்கை வந்த கடிதம் மேசையிலிருந்து சலசலத்துக் கொண்டிருந்தது. என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை, பேசாமலிருந்தேன்.




மயூரதன், யாழ்ப்பாணம்

# கடந்து சென்ற 2019 இல் நினைவில்

***2019 ஆம் ஆண்டு உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய 21 முக்கிய நிகழ்வுகளை இங்கு தொகுத்து வழங்குகின்றோம்.***

### 01. நிலவின் தென் துருவப் பகுதியில் இறங்கிய சீனாவின் சாங்'ங-4



சீனாவின் சாங்'ங-4 என்ற விண்கலம் நிலவின் தென் துருவப் பகுதியிலுள்ள ஐட்கென் படுகையில் பீஜிங் நேரப்படி ஜனவரி 3 ஆம் திகதி காலை 10.26 மணிக்கு தரையிறங்கியது என்று சீன அரசு ஊடகம் செய்தி வெளியிட்டது.

### 02. வெனிசுவேலா அரசியல் சாசன நெருக்கடி




ஜனவரி 10, 2019 - வெனிசுவேலா தேசிய பேரவை குவான் குவைடோவை இடைக்கால தலைவராக அறிவித்ததோடு, ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகளை தொடங்கியது.

குவைடோவை வெனிசுவேலாவின் இடைக்கால தலைவராக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏற்றுக்கொண்டிருந்தன.

இதையடுத்து வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவுடன் தூதரக உறவுகளைத் துண்டித்துக்கொண்டார். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வெனிசுவேலாவில் அதிகாரத்தை அபகரிக்கப்பார்ப்பதாக ரஷ்யா கண்டித்தது.

### 3. அமெரிக்கா, கனடா, சீனா இடையே சர்ச்சை ஏற்படுத்திய ஹுவாவெய்




ஜனவரி 28 - ஹுவாவெய் நிறுவன தலைமை அதிகாரி மெங் வான்ட்சொ-ஐ அமெரிக்கா கேட்டு கொண்டதன் பேரில் கனடா கைது செய்தது. இந்த சம்பவம் கனடா, சீனா, அமெரிக்கா இடையே ராஜ்ஜீய சர்ச்சையாக உருவாகியது. ஹுவாவெய் நிறுவனத்தை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்தது.

இரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை ஹுவாவெய் நிறுவனமும் அதன் தலைமை நிதி அதிகாரி மெங் வான்ட்சொ-வும் மீறினார்கள் என்பதுதான் அவர்கள் மீதான குற்றச் சாட்டு. ஆனால், இந்த குற்றச்சாட்டை ஹுவாவெய் மறுக்கிறது.

மெங் வான்ட்சொ-ஐ கைது செய்து மனித உரிமை மீறல் என்று தெரிவித்த சீனா, இரண்டு கனடா நாட்டவரை கைது செய்து, அவர்கள் உளவு பார்த்ததாக குற்றம்சாட்டியது.


### 04. அரேபிய தீபகற்பத்திற்கு சென்ற முதல் போப்



பெப்ரவரி 3 - ஐக்கிய அமீரகம் சென்ற போப் பிரான்சிஸ் அரேபிய தீபகற்பத்திற்கு செல்லும் முதல் போப் என்ற பெருமை பெற்றார். அபுதாபி வந்த அவரை முடியரசர் ஷேக் முகம்மது பின் சையத் அல் நஹ்யான் வரவேற்றார்.

போப் பிரான்சிஸ் பங்கேற்ற மத நல்லிணக்க கூட்டத்தில் சுமார் 120,000 பேர் கலந்து கொண்டனர். சவுதி அரேபியா பங்கேற்றுள்ள நிலையில், அரேபியா செல்லும் முன் ஏமன் போர் குறித்து போப் கவலை தெரிவித்திருந்தார்.

### 05. தோல்வியில் முடிந்த ட்ரம்ப்- கிம் ஜாங்-உன் இரண்டாவது சந்திப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கிம் ஜாங்-உன் இரண்டாவது சந்திப்பு பெப்ரவரி 27 ஆம் திகதி இரவு விருந்துடன் தொடங்கி வியட்நாம் தலைநகர் ஹனோயில் இரண்டு நாட்கள் நடைபெறுவதாக இருந்தது.

ஆனால், இரண்டாம் நாள் கூட்டத்தின்போது, வடகொரியாவின் கோரிக்கைகள் முழுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி ட்ரம்ப் வெளிநடப்பு செய்தார்.

### 06. கிரைஸ்ட்சர்ச் மசூதி தாக்குதல்



மார்ச் 15: கிரைஸ்ட்சர்ச்சில் உள்ள மிகப் பெரிய மசூதியில் நடத்தப்பட்ட துப்பாக்கி தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதல் உலகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

நியூசிலாந்தில் பயங்கரவாத குற்றச்சாட்டு வைக்கப்பட்டது இதுவே முதல்முறை.

### 07.பாரிஸ் பழைமையான நோட்ர-டாம் தேவாலய தீ விபத்து



ஏப்ரல் 15: பாரிஸ் நகரில், தீ விபத்தால் ஏறக்குறைய 850 ஆண்டுகள் பழைமையான நோட்ர-டாம் தேவாலயம் சேதமடைந்தது.

தேவாலயத்தின் மேற்கூரை மற்றும் பக்கவாட்டுச் சுவர்கள் ஆகியன கடுமையாகச் சேதமடைந்து இடிந்து விழுந்தன.

இரண்டு மிகப்பெரிய மணிக்கூண்டுகளைக் கொண்ட கோபுரங்கள் உள்ளிட்ட தேவாலயத்தின் முக்கியப் பகுதிகள் தீ விபத்தில் இருந்து தப்பின.

400 தீயணைப்பு வீரர்கள் இணைந்து சுமார் 15 மணிநேரம் போராடி இந்தத் தீயை முழுமையாக கட்டுக்கு கொண்டு வந்தனர்.

### 08. இலங்கை ஈஸ்டர் தாக்குதல்



ஏப்ரல் 21. இலங்கையிலுள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று நட்சத்திரக் ஹோட்டல்கள் மீது கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில் 259 பேர் கொல்லப்பட்ட நிலையில், 500 இற்கும் மேலானோர் காயமடைந்தனர்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்து உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர் நடைபெற்ற மிக பெரிய தீவிரவாத தாக்குதலாக இது பார்க்கப்படுகிறது.

### 09. தாய்லாந்து மன்னராக மணிமுடி சூடினார் வஜ்ரலாங்கோர்ன்



தாய்லாந்து அரசராக மகா வஜ்ரலாங்கோர்ன் மணிமுடி சூட்டப்பட்டார். முடிசூடும் சடங்குகள் மூன்று நாட்கள் நடைபெற்றன.

நீண்டகாலம் ஆட்சி செய்த தந்தை பூமிபோன் அடுன்யடேட் 2016 ஆம் ஆண்டு இறந்த பின்னர், 66 வயதாகும் அரசர் மகா வஜ்ராலங்கோர்ன் அரசமைப்பு சட்ட முடியாட்சியின் மன்னரானார்.

மே மாதம் முதல் நாள், தனது மெய்காப்பாளர் பிரிவின் துணைத் தலைவர் ஜெனரல் சுதிடா வஜ்ராலங்கோர்ன் நா அயூடியா என்பவரை அரச குடும்பத்தில் சேர்த்து திருமணம் செய்து கொண்ட மன்னர் வஜ்ராலங்கோர்ன், தாய்லாந்தின் அரசியாக சுதிடா விளங்குவார் என்று அறிவித்தார்.

### 10. சிரியா உள்நாட்டு போரில் முக்கிய தாக்குதல்



மே மாதம் 6 ஆம் திகதி சிரியா உள்நாட்டு போரில் மிக முக்கிய தாக்குதல் நடத்தியுள்ளதாக குர்து இனத்தவர் தலைமையிலான அமெரிக்க ஆதரவு படை தெரிவித்தது.

### 11. சவுதி அரம்கோ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தாக்குதல்

மே மாதம் 12 ஆம் திகதி அரம்கோ நிறுவனத்தின் இரண்டு எண்ணெய் கப்பல் உட்பட நான்கு கப்பல்கள் சேதமடைந்தன.

இதற்கு ஈரான்தான் காரணம் என அமெரிக்கா குற்றஞ்சாட்டியது.

# வில் நின்ற தடங்கள்



ஜூன் 13 ஆம் திகதி நடைபெற்ற இன்னொரு எண்ணெய் கப்பல்கள் தாக்குதல், வளைகுடா பிராந்தியத்தில் அமெரிக்கா 1000 படைவீரர்களை நிறுத்த காரணமாகியது.

ஜூன் 20 ஆம் திகதி அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியது.

### 12. ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை - இங்கிலாந்து சம்பியன்




ஜூலை 14. இங்கிலாந்தின் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் முதல்முறையாக இங்கிலாந்து அணி வென்றது.

வரலாறு காணாத பரபரப்போடு இந்த போட்டி நடந்து, கடைசி பந்தில் வெற்றி தோல்வியில்லாமல் சமநிலையில் முடிந்தது.

பிறகு வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட சுப்பர் ஓவர் போட்டியும் சமநிலையில் முடிந்தது.

எனவே, ஆட்டத்திலும் சுப்பர் ஓவரிலும் அதிக பவுண்டரிகளை எடுத்த அணி என்ற அடிப்படையில் இங்கிலாந்துக்கு உலகக் கோப்பை வழங்கப்பட்டது.

### 13.பெண்கள் உலகக் கோப்பை கால்பந்து போட்டி - அமெரிக்கா சம்பியன்



ஜூலை 7 ஆம் திகதி பிரான்சில் நடைபெற்ற பெண்கள் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அமெரிக்கா கோப்பையை தட்டிச்சென்றது.

### 14. சந்தேக நபர்களை சீனாவிடம் ஒப்படைக்கும் மசோதாவுக்கு எதிராக போராட்டம்



ஜூன் 9 - சந்தேக நபர்களை பெருநிலப்பகுதி சீனாவிடமும், மக்கௌவிடமும் ஒப்படைக்க வழி செய்யும் மசோதாவுக்கு எதிராக ஹொங்கொங்கில் நடைபெற்ற போராட்டத்தில் 10 இலட்சத்திற்கு மேலானோர் கலந்து கொண்டனர்.

1997 ஆம் ஆண்டு ஹொங்கொங் சீனாவிடம் வழங்கப்பட்ட பின்னர், நடைபெறும் மிகப் பெரிய போராட்டம் இதுவாகும்.

### 15. பிரிட்டனுக்கு புதிய பிரதமர்



பிரெக்ஸிட் ஒப்பந்தத்திற்கு நாடாளுமன்றம் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதால், பிரிட்டனின் முன்னாள் பிரதமர் தெரேசா மே பதவி விலகுவதாக ஜூன் 7 ஆம் திகதி அறிவித்ததோடு, கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்தும் அவர் விலகினார்.

ஜூலை 24 ஆம் திகதி பிரிட்டனின் புதிய பிரதமராக போரிஸ் ஜான்சன் பொறுப்பேற்றார்.

### 16. ரஷ்யாவோடு செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகல்



ரஷ்யா - அமெரிக்கா இடையே பனிப்போர் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட மத்திய தூர அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து முறைப்படி விலகிவிட்டது அமெரிக்கா. மத்திய தூர அணு ஆயுத ஒப்பந்தம் (இன்டர்மீடியேட் ரேஞ்ஜ் நியூக்ளியர் ஃபோர்சஸ் ட்ரீட்டி) 1987 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட்ரீகன் மற்றும் சோவியத் ஒன்றியத் தலைவர் மிகயீல் கோர்பச்சேவ் இடையே கையெழுத்தானது.

500 கி.மீ. முதல் 5,500 கி.மீ. தூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை இரு நாடுகளும் பயன்படுத்துவதை இந்த ஒப்பந்தம் தடை செய்தது.

செப்டெம்பர் 14 ஆம் திகதி சவுதி அரேபியா எண்ணெய் சுத்திகரிப்புநிறுவனங்கள் மீது நடத் தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர், செப்டெம்பர் 21 ஆம் திகதி பல நூற்றுக்கணக்கான துருப்புக்களை வளை குடாவுக்கு அனுப்பவும் ஆயுதங்களை விற்கவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனுமதி வழங்கினார்.


### 17. அமேசானில் வரலாறு காணாத காட்டுத்தீ



ஓகஸ்ட் 21: பூமியின் நுரையீரல் என்று அழைக்கப்படும் அமேசான் காட்டில் தீ பற்றி பெரும் பாதிப்புகளை உண்டாக்கியது.

இந்த காட்டுத்தீ "சர்வதேச நெருக்கடி" என்று விவாதிக்கப்படும் அளவுக்கு பெரிய அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியது. அந்த வார இறுதியில் நடைபெற்ற ஜி 7 நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படும் அளவுக்கு பெரிய பிரச்சினையானது.

### 18. பருவநிலை மாற்றம் தொடர்பான மாணவர்கள் போராட்டம்



செப்டம்பர் 20: பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பருவ நிலை மாற்றத்தைத் தடுக்க அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முன்னெடுத்த போராட்டம் உலகெங்கும் தொடங்கியது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்கொரியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பல மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து செப்டெம்பர் 27 ஆம் திகதி கனடா பிரதமர் ஜெஸ்டின் ட்ரூடோ, செயற்பாட்டாளர் கிரேட்டா துன்பர்க் மோன்றீலில் நடத்திய போராட்டத்தில் சுமார் 5 இலட்சம் பேர் பங்கேற்றனர். அன்று உலகெங்கும் நடைபெற்ற போராட்டங்களில் 40 இலட்சம் பேர் கலந்து கொண்டனர்.

### 19. ட்ரம்புக்கு எதிரான பதவி நீக்க தீர்மானம்



செப்டெம்பர் 24: அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம் தொடர்பான முறையான விசாரணைக்கு அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்ஸி பலோசி அறிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் அவையில் இந்த விசாரணை தொடங்கியது. தனது அரசியல் எதிராளியை வீழ்த்த வெளிநாட்டு நபர் ஒருவரிடம் உதவி கோரியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப்பை பதவி நீக்கம் செய்வது குறித்த முறையான விசாரணை ஒன்றை அந்நாட்டின் ஜனநாயகக் கட்சியினர் துவக்கியுள்ளனர். தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள ஜனாதிபதி ட்ரம்ப், ஜனநாயக கட்சியினரின் முயற்சிகளை "குப்பை" என்று வர்ணித் திருந்தார்.

### 20. ஈராக்கை ஆளும் அரசுக்கு எதிராகப் போராட்டம்



ஈராக் நாட்டு மக்கள் அந்நாட்டு அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தினர்.

மிக அதிகமாக இருக்கும் வேலைவாய்ப்பின்மை, மோசமான பொதுச் சேவைகள் மற்றும் ஊழல். இதுதான் அந்நாட்டு மக்கள் அரசுக்கு எதிராக போராடுவதற்கான முக்கிய காரணங்கள்.

### 21. ஜமால் கஷோக்கி கொலை: 5 பேருக்கு மரண தண்டனை



டிசெம்பர் 23: கடந்த ஆண்டில் சவுதி பத்திரிகையாளர் ஜமால் கஷோக்கி கொலை செய்யப்பட்டது தொடர்பாக 5 பேருக்கு சவுதி அரேபிய நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை வழங்கியது.

துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில் இருக்கும் சவுதி அரேபியாவின் துணை தூதரகத்தில் அவர் கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் சவுதி அரசு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது.

இந்த ஆண்டின் இறுதியில் அவரது கொலையாளிகள் என்று சவுதி அரசு கூறும் நபர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை சவுதி மீது எழுந்துள்ள சர்வதேச கண்டனங்கள் மற்றும் விமர்சனங்களை போக்கும் என்று அந்நாட்டு அரசு நம்புகிறது.

# பதவி நீக்கம் கோரும் தீர்மானம் நெருக்கடிக்குள் டொனால்ட் ட்ரம்ப்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பதவி நீக்கக்கோரும் தீர்மானத்தின் இரண்டு சரத்துக்களுக்கு ஆதரவாக அமெரிக்க காங்கிரஸின் ஜனப்பிரதிநிதிகள் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வாக்களித்ததையடுத்து அமெரிக்காவின் வரலாற்றில் பதவிநீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது ஜனாதிபதியாக அவர் மாறியிருக்கிறார். இரு சரத்துக்களுமே உக்ரேய்ன் ஊழல் விவகாரத்தில் ட்ரம்ப் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததாகவும் காங்கிரஸின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவையாகும்.



## ஜனப்பிரதிநிதிகள் சபை எவ்வாறு வாக்களித்தது?

காங்கிரஸின் 435 ஆசனங்களைக் கொண்ட ஜனப்பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகக் கட்சிக்கு 233 உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஆதலால் ஜனநாயகக் கட்சியினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தச் சபையில் ட்ரம்பிற்கு எதிரான பதவி நீக்கப்பிரேரணை நிறைவேறும் என்று வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னதாகவே நிச்சயமாகத் தெரிந்தது. பிரேரணையின் சரத்துக்கள் மீது சபை கட்சி அடிப்படையிலேயே பெருமளவிற்கு வாக்களித்தது. முதலாவது சரத்திற்கு ஆதரவாக 230 வாக்குகள் கிடைத்தன. இரண்டாவது சரத்து 228-198 வாக்குகள் என்ற அடிப்படையில் நிறைவேறியது.

இரண்டு ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் (2016 ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பை ஆதரித்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்)-நியூஜெர்ஸியின் பிரதிநிதி ஜெவ் வான்ட்ரூவும் மினிசோட்டா மாநிலத்தின் பிரதிநிதி கொலின் பீட்டர்சனும் அந்தச் சரத்துக்களுக்கு எதிராக வாக்களித்தனர். 2016 ஆம் ஆண்டில் ட்ரம்ப் வெற்றி பெற்ற மாவட்டத்தைச் சேர்ந்தவரான ஜெரால்ட் கோல்டன் (மெய்ன் மாநிலம்) முதலாவது சரத்திற்கு ஆதரவாக வாக்களித்த அதேவேளை, இரண்டாவது சரத்தை எதிர்த்தார். ஹவாயைச் சேர்ந்த ஜனநாயகக்கட்சி உறுப்பினரான ருல்ஸி கப்பாட் இரண்டு வாக்கெடுப்புக்களின் போதும் பிரசன்னமாகியிருந்து வாக்களித்தார்.

## ட்ரம்பிற்கு எதிராக ஏன் பதவிநீக்கத் தீர்மானம்?

பதவி நீக்கத் தீர்மானத்தின் இரு சரத்துக்களுமே உக்ரேய்ன் ஊழல் விவகாரம் தொடர்பானவை. 2016 ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையீடு செய்ததாகக் கூறப்படுகின்ற விவகாரம் தொடர்பிலான ரொபேட் முல்லர் அறிக்கையையும் அதை ட்ரம்ப் கையாண்ட முறையையும் பதவி நீக்கத் தீர்மானத்திற்கான பிரச்சினைகளாக ஜனநாயகக் கட்சியினர் கருதவில்லை என்பதை இது வெளிகாட்டுகிறது.

அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தது தொடர்பான முதலாவது சரத்து உக்ரேய்ன் ஊழல் விவகாரத்தில் ட்ரம்பின் நடத்தை பற்றியதாகும். 2020 ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக வரக்கூடியவரும் முன்னாள் உப ஜனாதிபதியுமான ஜோ பிடென் மற்றும் அவரது மகன் ஹன்டர் பிடென் ஆகியோருக்கு எதிராக விசாரணையொன்றைத் தொடங்குமாறு உக்ரேய்னின் ஜனாதிபதி வோலோடைமிர் செலன்ஸ்கி மீது நெருக்குதலைப் பிரயோகித்ததன் மூலம் தனது அதிகாரத்தை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்தார் என்று ஜனநாயகக் கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

உக்ரேய்ன் ஜனாதிபதியுடனான வெள்ளை மாளிகைச் சந்திப்பொன்றையும் உக்ரேய்னுக்கான இராணுவ உதவியையும் ட்ரம்ப் நிறுத்தி வைத்ததாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. பிடென் மீதும், 2016 ஜனாதிபதித் தேர்தலில் உக்ரேய்ன் தலையீடு செய்ததாக நம்ப முடியாத ஒரு விவகாரம் மீதும் விசாரணைகள் நடத்தப்படும் என்று பகிரங்கமாக அறிவிக்குமாறு உக்ரேய்ன் அரசாங்கத்தை ஊழல்தனமாக ட்ரம்ப் கேட்டுக் கொண்டார் என்று அந்த சரத்து கூறுகிறது.

இரண்டாவது சரத்து காங்கிரஸின் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி இடையூறு விளைவித்தமைக்கு எதிரானது. பதவிநீக்கத் தீர்மானம் தொடர்பான காங்கிரஸின் விசாரணைக்கு ஒத்துழைப்புத்தர மறுத்ததன் மூலம் ட்ரம்ப் காங்கிரஸின் செயற்பாடுகளுக்கு இடையூறு விள்ளவித்தார் என்று அந்த சரத்து கூறுகிறது. சகல குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்த ஜனாதிபதி ஜனப்பிரதிநிதிகள் குழுவின் முன்பாக சாட்சியமளிக்க வேண்டாம் என்று பல சாட்சிகளை வலியுறுத்திக் கேட்டார். அத்துடன் காங்கிரஸிடமிருந்து வரக்கூடிய அழைப்பாணைகளை ஏற்றுச் செயற்பட வேண்டாம் என்று வெள்ளை மாளிகையையும் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களையும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ட்ரம்ப் இப்பொழுது பதவியில் இல்லையா?

இந்தக் கேள்விக்கான பதில் "இல்லை" என்பதேயாகும். அதாவது அவர் அமெரிக்க ஜனாதிபதிப் பதவியில் தொடருகிறார். காங்கிரஸின் ஜனப்பிரதிநிதிகள் சபையினால் வரவேற்கப்படும் பதவி நீக்கத் தீர்மானம் அமெரிக்க ஜனாதிபதியொருவரை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கிவிடுவதில்லை. பதவி நீக்கத் தீர்மானத்தின் அர்த்தம் ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் குறித்துரைக்கும் சரத்துக்களை ஜனப்பிரதிநிதிகள் சபை பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரித்து, செனட் சபையில் அவர் மீதான விசாரணைக்குக் களம் அமைத்துக்கொடுப்பது என்பதேயாகும்.

செனட் விசாரணைக்குப் பிறகு செனட்டர்கள் ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மீது வாக்களிப்பார்கள். செனட்டர்களில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கினர் (அமெரிக்க செனட் உறுப்பினர்கள் 100 பேரில் 67 பேர்) ஆதரவுடன் ஜனாதிபதி குற்றவாளியாகக் காணப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட முடியும்.

தற்போதைய செனட் சபையில் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்கே பெரும்பான்மை ஆசனங்கள் (53) இருக்கின்றன. அதேவேளை ஜனநாயகக் கட்சிக்கு இரு சுயேட்சைகள் உட்பட 47 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

இதன் அர்த்தம் ட்ரம்ப் குற்றவாளியாகக் காணப்பட வேண்டுமானால் தங்களது செனட்டர்கள் எவரும் கட்சியின் தீர்மானத்தை மீறாதிருப்பதை ஜனநாயகக் கட்சியினர் உறுதிசெய்ய வேண்டும்.

அத்துடன் ட்ரம்பை குற்றவாளியாகக் காண்பதற்கு குறைந்தபட்சம் 20 குடியரசுக்கட்சி செனட்டர்கள் ஆதரவளிக்க வேண்டும். காங்கிரஸில் இருக்கின்ற பக்கச்சார்பு மனநிலையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இது சாத்தியமற்ற ஒன்றாகும். ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் குடியரசுக்கட்சியினர் இதுவரையில் நிராகரித்திருக்கிறார்கள். அதனால் ட்ரம்ப் செனட்டில் விடுவிக்கப்படுவார் என்பது பெரும்பாலும் நிச்சயமானதாகும்.

அப்படியானால் ஏன் இந்தப் பதவி நீக்கத் தீர்மானம்?ஜனாதிபதியின் செயற்பாடுகள் அரசியலமைப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதால் பதவி நீக்க செயன்முறைகளை ஆரம்பிக்க வேண்டியது.தமது அரசியலமைப்பு ரீதியான கடமை என்று ஜனநாயகக் கட்சியினர் கூறுகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஒருவருடத்திற்கும் குறைவான காலமே இருப்பதால் ஜனப்பிரதிநிதிகள் சபையில் பதவி நீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி ஒருவரை மீண்டும் தெரிவு செய்வதா? என்பத்தை வாக்காளர்கள் தீர்மானிக்கலாம் என்பதே ஜனநாயகக் கட்சியினரின் இந்த வாதத்தின் அடிநாதமாக இருக்கும் செய்தியாகும். இது ட்ரம்பை பொறுத்தவரையிலும் கூட ஒரு தவறான மரபாகவே இருக்கும். அமெரிக்காவில் பதவி நீக்கத் தீர்மாணம் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது ஜனாதிபதி என்று ட்ரம்ப் வரலாற்றில் இடம்பெறுவார்.

முதன்முதலாகப் பதவிநீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி அன்ரூ ஜோன்ஸன் (1868) ஆவார். போர் விவகாரச் செயலாளரை அவர் பதவி நீக்கம் செய்தது தொடர்பில் அவருக்கும் காங்கிரஸுக்கும் இடையிலேற்பட்ட பலப்பரீட்சையை அடுத்தே அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது ஜனாதிபதி பில்கிளிண்டன் ஆவார். 1998 - 1999 இல் மோனிகா லிவின்ஸ்கி என்ற வெள்ளைமாளிகைப் பணியாளருடன் கிளின்டனுக்கு இருந்த பாலியல் தொடர்பு விவகாரத்தையடுத்தே அவருக்கெதிராக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்விரு ஜனாதிபதிகளும் செனட் சபையில் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கப்பட்டனர்.

வாட்டர் கேட் ஊழல் விவகாரத்தில் சிக்கிய முன்னாள் ஜனாதிபதி ரிச்சட் நிக்சன் செனட் சபையில் தனது கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை என்று தெரிந்து கொண்டதும் அந்த சபையில் பதவி நீக்கத் தீர்மானம் விசாரணைக்கு வரமுன்னரே 1974 ஆம் ஆண்டில் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

எனவே தற்போதைய பதவி நீக்கத் தீர்மானம் ஜனாதிபதி ட்ரம்பை ஒரு அரிதான பேர்வழிகளுடன் கூட்டுச்சேர்த்திருக்கிறது. ஆனால் இந்தப் பதவிநீக்கத் தீர்மானம் 2020 ஜனாதிபதித் தேர்தலில் ஏவ்வாறு தாக்கத்தைச் செலுத்தும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வோல்சேட் ஜேர்னல்ஃஎன்.பி.சி.நியூஸ் வெளியிட்ட ஆய்வொன்றில் ட்ரம்பை பதவியிலிருந்து நீக்க வேண்டுமா? என்பது தொடர்பில் அமெரிக்கர்கள் 48-48 சதவீதம் என்ற அடிப்படையில் பிளவுபட்டு நிற்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறது.

குடியரசுக் கட்சியினரில் சுமார் 90 சதவீதமானோர் பதவிநீக்கத் தீர்மானத்தை எதிர்க்கும் அதேவேளை, ஜனநாயகக்கட்சியில் 83 சதவீதமானோர் அதை ஆதரிக்கிறார்கள்.

(த இந்து)

# செயற்கைச் சூரியன் உருவாக்கும் பணியில் சீனா தீவிரம்

**இதிலிருந்து வெளிப்படும் ஆற்றலானது அணுக்கரு பிளவின்போது வெளிப்படும் ஆற்றலைவிட 100 மடங்கு அதிகமாக இருக்கும். இந்த முறையில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அணுக்கதிர் வீச்சு எதுவும் வெளிப்படாது.**

சீனர்கள் என்றாலே வித்தியாசத்துக்குப் பேர் போனவர்கள் தானே. புதிது புதிதாகத் திட்டங்கள், விரைவான செயற்பாடு, மலிவான விலையில் பொருட்கள் என அவர்கள் மேல் ஒரு பிம்பம் உள்ளது. இந்த முறை அவர்கள் கையில் எடுத்திருப்பது "செயற்கை சூரியன்" (Artificial Sun).

கேட்கவே வித்தியாசமாகவும் பிரமிப்பாகவும் இருக்கிறதல்லவா? நீண்ட காலமாகவே இப் படி ஒரு முயற்சியைச் செய்து பார்க்க வேண்டும் என்பது அறிவியலாளர்கள் பலரின் விருப்பமாகவே இருக்கிறது.

அதற்கு இப்போது செயல் வடி வம் கொடுத்திருக்கிறது சீனா. இது எப்படி சாத்தியம், இதனால் நமக்கு என்ன பயன், இப்போது இப்படி ஒன்று தேவையா? எனப் பல கேள்விகள் அனைவரது மனதிலும் எழும். இதற்கான பதிலை ஒரு சிறிய அறிவியல் விளக்கத்தோடு தொடங்கலாம்.

இந்த முறையில் இரு நன்மை கள் உண்டு, ஒன்று இதிலிருந்து வெளிப்படும் ஆற்றலானது அணு. க்கரு பிளவின்போது வெளிப்படும் ஆற்றலைவிட 100 மடங்கு அதி கமாக இருக்கும்.

நாம் இப்போது அணு உலை களில் "அணுக்கரு பிளவு" என் னும் முறையைத்தான் பயன்படுத்தி வருகிறோம்.

இந்த முறையில் யுரேனியம் அல்லது புளூட்டோனியத்தை சிறு சிறு அணுக்களாகப் பிரிப்பார்கள். அப்படிப் பிரிக்கும்போது அதிகளவிலான ஆற்றல் வெளிப்படும். அந்த ஆற்றலைப் பயன்படுத்தித்தான் அணு உலைகளில் மின்சாரம் உருவாக்கப்படுகிறது.

இந்த செயல்முறையின்போது அதிக அளவிலான கதிர் வீச்சும் வெளிப்படும்.

இதற்கு நேர் எதிர் செயல் முறைதான் "அணுக்கரு இணைவு" இதன் செயல்முறை யில் இரு சிறு அணுக்கள் ஒரே அணுவாக இணைக்கப்படும்.

இந்த முறையில் இரு நன்மை கள் உண்டு. ஒன்று இதிலிருந்து வெளிப்படும் ஆற்றலானது அணு க்கரு பிளவின்போது வெளிப்படும் ஆற்றலைவிட 100 மடங்கு அதிகமாக இருக்கும்.

இந்த முறையில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அணுக் கதிர்வீச்சு எதுவும் வெளிப்படாது. சுலபமாகச் சொல்ல வேண்டும் என்றால் நம்முடைய சூரியன் இயங்குவது இந்த முறையில் தான்.

ஒவ்வொரு நொடியும் 620 மில்லியன் மெற்றிக் தொன் அளவு ஐதரசனை இணைத்து 606 மில்லியன் மெற்றிக் தொன் அளவு ஹீலியத்தையும் நமக்குத் தேவையான வெப்பத்தையும் வெளியேற்றிக் கொண்டிருக்கிறது.


அப்புறம் ஏன் இந்தச் செயல்முறையை இன்னும் பயன்படுத்தவில்லை என்ற கேள்வி எழும். இதைப் பயன்படுத்த வேண்டுமென்றால் நாம் உள்ளீடு செய்ய வேண்டிய ஆற்றலின் அளவு மிக மிக அதிகம். அதேநேரத்தில் தொடர்ந்து அந்த அளவு ஆற்றலைக் கொடுக்கக் கூடிய மூலம் நம்மிடம் இல்லை.

**"HL-2M Tokomak"** எனப் பெயரிடப்பட்டுள்ள செயற்கை சூரியனைத் தயாரிக்கும் பணி இந்த ஆண்டு இறுதியில் முடிந்துவிடும்" என அறிவித்திருந்தது சீனாவின் **National Nuclear Corporation.** சமீபத்தில் அந்தக் கருவியை வடிவமைப்பதில் பங்கு பெற்றிருக்கும் விஞ்ஞானி துவான் சுரு அந் நாட்டு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்,

"கருவியில் **Coil system** பொருத்தும் பணி நிறைவு பெற்றிருக்கிறது" எனத் தெரிவித்துள்ளார். அதன்படி சீனாவின் இந்தத் திட்டம் 2020இல் நடைமுறைக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும், அந்தக் கருவியைப் பற்றி அவர் கூறும்போது, "இந்தக் கருவியின் மூலம் 200 மில்லியன் டிகிரி செல்சியஸ் அளவு வெப்பத்துடன் ப்ளாஸ்மாவை உற்பத்தி செய்ய முடியும். அதற்கு 100 மில்லியன் டிகிரி செல்சியஸ் அளவு எரிபொருளை உள்ளீடு செய்ய வேண்டியிருக்கும்" என்றார்.

இன்னும் அந்தச் சாதனத்தைப் பற்றிய தகவல்கள் பெரிதாக வெளிவரவில்லை. சீனாவின் இந்தச் சாதனம் வெற்றி பெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எப்படி இருப் பினும் அறிவியலின் அடுத்த கட்டத்துக்கு இந்தத் திட்டம் ஒரு படியாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.




> ஒரேயொரு சூரியன் தான் உலகிற்கு என்று கேள்விப் பட்டிருக்கிறோம். இந்த உலகில் சூரியன் இல்லாது போனால் நிலை என்ன என ஒரு கணம் சிந்தித்தால் தலை சுற்றுகிறது. அண்மையில் நடைபெற்ற சூரிய கிரகணத்தின் போது சூரியஒளி மங்கலாகத் தென்பட்டதற்கே தலையைப் பிய்த்துக் கொண்டோமல்லவா? ஆனாலும் எந்தத் திட்டத்தையும் செயற்படுத்த முடியும் என முதலாய் நிற்கும் சீனா செயற்கைச் சூரியனை உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடு கின்றது. அதன் திட்டம் 2020 ஆம் ஆண்டு சாத்தியம் என்று கூறியிருக்கிறது.

# புத்தாண்டில் புதுக்குழப்பம்

## 2020ஐ 20 எனக் குறிப்பிட்டால் சிக்கல்




புத்தாண்டில் ஒரு புதிய குழப்பம் இருக்கிறது. முக்கிய ஆவணங்களை எழுதுகிறபோது 2020 என்ற ஆண்டை 20 என சுருக்கமாக எழுதக்கூடாது. அதற்கான காரணம்

புத்தாண்டு 2020- ஐ உலகமே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறது. இந்த புத்தாண்டாவது நமது வாழ்வில் ஒரு புதிய விடியலைத் தந்து விடாதா? என்று பலரும் எதிர் பார்க்கிறார்கள்.

பிறக்கப்போகிற புத்தாண்டு ஒரு அபூர்வ ஆண்டு ஆகும். முதல் இர ண்டு இலக்கங்கள், அடுத்த இரண்டு இலக்கங்களாகவும் அமைந்துள்ளன. இதே போன்று இனி அமைவதற்கு இன்னும் 101 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். அப்போதுதான் 2121 என்ற ஆண்டு வரும்.

இன்றைய அவசரமான உலகத்தில் எல்லாவற்றையும் சுருக்கமாகத்தான் நாம் சொல்ல வேண்டியதிருக்கிறது.

உதாரணமாக 1-1-2020 என்ற புத்தாண்டு நாளை, 1-1-20 என்றுதான் நம்மில் பெரும்பாலானோர் குறிப்பிடுவோம். குறிப்பாக கையெழுத்திட்டு, திகதியை குறிப்பிடுகிறபோது இப்படி சுருக்கமாக குறிப்பிடுவது மரபாகவும் பின்பற்றப்படுகிறது. ஆனால் இந்த புத்தாண்டில் ஒரு புதிய குழப்பம் இருக்கிறது. சொத்து ஆவணங்கள், கடன் பத்திரங்கள் போன்றவற்றையோ, முக்கிய ஆவணங்களையோ எழுதுகிற போது 2020 என்ற ஆண்டை 20 என சுருக்கமாக எழுதக்கூடாது.

ஏனென்றால் 20 இற்குப் பின்னர் வசதிக்கேற்பவோ, தேவைக்கேற்பவோ (முறைகேடாக) 01 முதல் 19 வரை சேர்த்து விட முடியும். இதனால் ஆவண திகதி 20 ஆம்வருடம் என்பதை 2001 ஆம் வருடம் முதல் 2019ஆம் வருடம் வரை மாற்றி விட முடியும். எனவே இந்த ஆண்டு முழுவதும் சிரமம் பாராமல் ஆண்டை 20 என சுருக்கமாக குறிப்பிடாமல் 2020 என முன்ஜாக்கிரதை உணர்வுடன் எழுதி பழகி விடுங்கள். இது பிரச்சினை வருவதற்கு முன்னரே தடு க்க உதவும்.

இதே போன்று எந்தவொரு ஆவணத்தையும் நீங்கள் வாங்கும்போதும் சரி 2020 என முழுமையாக ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளதா? எனப் பார்த்து வாங்குவது நல்லது. ஏனென்றால் நாளை அந்த ஆவணத்தை உங்களுக்கு எழுதித்தந்தவரே கூட 20 என நான் கொடுத்தேன், முறைகேடாக பின்னர் 2 இலக்கங்களை சேர்த்து வருடத்தை திருத்தி விட்டார் என குற்றம் சாட்ட முடியும்.

எனவே ஆவணங்களை எழுதிக் கொடுத்தாலும் சரி, எழுதி வாங்கினாலும் சரி இந்த ஆண்டு முழுவதும் 2020 என முழுமையாக குறிப்பிட்டு பழகுங்கள். கையெழுத்து போட்டு தேதியை குறிப்பிடுகிறபோதும் இதை பின்பற்றுவது கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், சிறந்தது.

# வயதுக்கு வந்த பிள்ளைகளுடன் பெற்றோர் எப்படிப் பேச வேண்டும்


பதின்மபருவப் பிள்ளைகள் பேசும்போது அறிவுரை சொல்வதையும் பேசுவதையும் நிறுத்திவிட்டு அவர்கள் சொல்வதை முழுமையாகக் கவனிக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் போதனை செய்யக்கூடாது. "நான் பேசவில்லை என்றால் என் குழந்தைக்கு விடயங்கள் எப்படிப் புரியும்...யார் கற்றுக் கொடுப்பார்கள்?" எனக் கேட்கலாம்.

ஆனால், தேவையில்லாத இடங்களில் தேவையற்ற விடயங்களைப் பற்றியே தேவையில்லாமல் பேசிக்கொண்டிருந்தால் பிள்ளைகள் உடல் ரீதியாக, உணர்வுரீதியாக...இவ்வளவு ஏன்... உரையாடலில்கூட பெற்றோரிடமிருந்து ஓர் இடைவெளியை அமைத்துக்கொள்வார்கள். இது பெற்றோருக்குக் கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தும். நேற்று வரை அம்மாவிடமும் அப்பாவிடமும் நெருக்கமாக இருந்த குழந்தைகள் திடீரென விலகிச் செல்வதை உணர முடியும். இந்த இடைவெளியைத் தவிர்க்க பெற்றோர் ஓர் இடைவெளி (பர்சனல் ஸ்பேஸ்) கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

➢ குழந்தைகள் இருக்கும் அறைக்குள் செல்வதற்கு முன் கதவைத் தட்டிவிட்டு அவர்கள் அனுமதித்த பிறகே செல்ல வேண்டும்.

➢ பிள்ளைகள் அவர்களின் நண்பர்களுடன் இருக்கும்போது பெற்றோரும் கூடவே இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளின் உரிமைகளில் பெற்றோர் தலையிடுகிறார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடாது.

➢ பிள்ளைகள் பெற்றோரிடம் பேசவில்லை என்றால் கொஞ்சம் அமைதி காக்கலாம் தவறில்லை.



அதைப் பெரிய பிரச்சினையாக்கி "இப்பவெல்லாம் என்னிடம் எதுவுமே சொல்றதில்லை" என்று வளர்க்க வேண்டியதில்லை. அந்த இடைவெளி எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திவிடாது.

➢ இடம், பொருள், ஏவல் அறிந்து அவர்களிடம் பேச வேண்டும். அதாவது ரி.வி.பார்க்கும்போது, குடும்பத்துடன் வெளியே போகும்போது... இப்படியான சில தருணங்களில் பெற்றோர் பிள்ளைகளிடம் மனம் விட்டுப் பேசலாம்.

டீன்ஏஜ் பிள்ளைகளிடம் பேசும்போது சில விடயங்கள் பெற்றோருக்குக் கிடைக்கும். தேவையான தகவல்கள், நெருங்கிய நண்பருடன் இணக்கமான உறவு ஏற்பட்டது போன்ற உணர்வு மற்றும் நெருக்கம் ஆகியவற்றை அறிய முடியும். டீன்ஏஜ் பிள்ளைகளின் விருப்பங்கள், அவர்களின் நோக்கங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

உங்கள் டீன்ஏஜ் பிள்ளைகளிடம் பாலியல் பற்றி பேசும்போது அதை ஒரு வேலையாகச் செய்வதைவிட, வேறு ஏதேனும் வேலைக்கிடையில் பேசுவது சௌகரியமாக இருக்கும். சில நேரங்களில் பேர்சனலான விடயங்களை, சில வார்த்தைகளை அவர்களின் முகம் பார்த்துப் பேசுவதில் பெற்றோருக்குத் தயக்கம் இருக்கும். வேலையினூடே அல்



லது உடற் பயிற்சிகள் செய்யும்போது பேசுவதன் மூலம் அந்தக் கூச்சத்தைத் தவிர்க்கலாம்.

"நான் உன்கிட்ட ஒரு விடயம் பேசணும்" என்று ஆரம்பித்தால் பிள்ளைகளுக்கு பய உணர்வு ஏற்படலாம். அப்படி ஆரம்பிக்காமல் பிள்ளைகளின் நட்பு, ஏதேனும் ஒரு புத்தகம் அல்லது அவர்களின் சமீபகால நடவடிக்கைகள் என எதையாவது லீடாக வைத்துப் பேச்சைத் தொடங்கலாம்.

ஒரே நாளில் எல்லா விடயங்களையும் பேசி முடிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. வாரம் ஒன்றிரண்டு நாட்கள் பேசலாம். இது பிள்ளைகளுடன் ஒருவித நெருக்கத்தை ஏற்படுத்தும். பாலியல் விவாதத்தை ஆரோக்கியமானதாகவும் மாற்றும். அதேபோல பாலியல் குறித்த விடயங்களைப் பேச வேண்டும் என நீங்கள் ஆரம்பிக்கும்போது அதில் ஈடுபட உங்கள் டீன்ஏஜ் பிள்ளைக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். உடனே அந்த உரையாடலை முடிக்க வேண்டியதில்லை. வேறு விடயங்களைப் பேசி, அதை வேடிக்கையாக மாற்றி முடிக்கலாம்.

பாலியல், போதை மருந்துகள், சிகரெட், மது எனப் பல விடயங்களைப் பற்றி பிள்ளைகளிடம் பெற்றோர் பேச முயலும்போது பிள்ளைகள் கேட்காமலோ, கவனிக்காமலோ இருந்தால் என்ன செய்ய வேண்டும்? பேசுவதை நிறுத்திவிட வேண்டும். அவர்கள் கேட்காத ஒரு விடயத்துக்குப் பாடம் எடுப்பதில் பெற்றோரின் இலக்கு நிறைவேறப் போவதில்லை.

முகம் பார்த்துப் பேசத் தயங்கும் பெற்றோர், குறுந்தகவல் அல்லது வாட்ஸ்அப் மூலம்கூட பிள்ளைகளுடன் உரையாடலாம். இது அவ்வளவு முக்கியமான விடயமா என்றால், "ஆமாம்" என்பதே பதில். டீன்ஏஜ் கர்ப்பங்களும் அந்த வயதில் பாலியல் நோய்களுக்கு உள்ளாவதும் இன்று உலக அளவில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இவற்றைத் தடுக்கும் பொறுப்பு பெற்றோருடையது.

டீன்ஏஜ் பிள்ளைகளிடம் பேசும்போது பெற்றோரின் கண்கள், காதுகள் மற்றும் இதயம் எல்லாம் திறந்திருக்கட்டும். அன்றைய தினம் செய்திகளில் நீங்கள் பார்க்கிற, கேள்விப்படுகிற விடயங்களை வைத்து உரையாடலை ஆரம்பிக்கலாம். சில நேரங்களில் உரையாடலுக்கான விடயத்தைச் சேமித்து வைக்கலாம். புதிய படம், புதிய பாடல், புதிய புத்தகம் என எதிலாவது உரையாடலுக்கான விடயம் இருப்பது தெரிந்தால் அதைச் சேமித்து வைக்கலாம். டீன்ஏஜ் பிள்ளைகளிடம் அதை வைத்தே உரையாடலைத் தொடங்கலாம்.

அவர்களுக்கு உறவுகளில், நட்பில் பிரச்சினைகள் வரலாம். நண்பர்கள் மூலம் அவர்களுக்கு மது மற்றும் புகைப்பழக்கம் அறிமுகமாகலாம். இந்த விடயங்களை அவர்களுடன் பேசலாம். ஒருமுறை பேசி அது பலன் தராமல் போனால் கவலைப்பட வேண்டாம். மீண்டும் மீண்டும் முயற்சி செய்யுங்கள். அது பெற்றோரின் கடமை பொறுப்பு.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பணக்காரக் குடும்பம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன், ராமமூர்த்தி
பாடியவர்: பி.சுசீலா



அத்தை மகள் ரத்தினத்தை அத்தான் மறந்தாரா?
அன்ன நடை சின்ன இடை எல்லாம் வெறுத்தாரா?

ஓஹோ ஓஹோ ஓஹோ ஓஹோ
ஹோஹோஹோஹோஹோஹோ
ஓஹோ ஓஹோ ஓஹோ ஓஹோ
அ ஆஆஆஆஆஆஆஆ

அத்தை மகள் ரத்தினத்தை அத்தான் மறந்தாரா?
அன்ன நடை சின்ன இடை எல்லாம் வெறுத்தாரா?

முத்து முத்துப் பேச்சு கத்தி விழி வீச்சு
அத்தனையும் மறந்தாரா?

முத்து முத்துப் பேச்சு கத்தி விழி வீச்சு
அத்தனையும் மறந்தாரா?
முன்னழகு தூங்க பின்னழகு ஏங்க
பெண்ணழகை விடுவாரா? பெண்ணழகை விடுவாரா?
முத்திரையைப் போட்டு சித்திரத்தை வாட்டி
நித்திரையைக் கெடுப்பாரா?
முத்திரையைப் போட்டு சித்திரத்தை வாட்டி
நித்திரையைக் கெடுப்பாரா?
மூவாசை வெறுத்து ஊராரை மறந்து
முனிவரும் ஆவாரா?

அத்தை மகள் ரத்தினத்தை
அத்தான் மறந்தாரா?
அன்ன நடை சின்ன இடை
எல்லாம் வெறுத்தாரா?

கொட்டு முழக்கோடு கட்டழகு மேனி
தொட்டு விட மனமில்லையா?

கொட்டு முழக்கோடு கட்டழகு மேனி
தொட்டு விட மனமில்லையா?
கட்டிலுக்குப் பாதி தொட்டிலுக்குப் பாதி
கருணை வரவில்லையா?
கருணை வரவில்லையா?
விட்டுப் பிரிந்தாலும் எட்டி நடந்தாலும்
கட்டாமல் விடுவேனா?
விட்டுப் பிரிந்தாலும் எட்டி நடந்தாலும்
கட்டாமல் விடுவேனா?
வேளைகளில் நின்று தோழர்களைக் கண்டு
சொல்லாமல் வருவேனா?

ஓஹோ ஓஹோ ஓஹோ ஓஹோ
ஹோஹோஹோஹோஹோஹோ
ஓஹோ ஓஹோ ஓஹோ ஓஹோ
அ ஆஆஆஆஆஆஆஆ

அத்தை மகள் ரத்தினத்தை
அத்தான் மறந்தாரா?
அன்ன நடை சின்ன இடை
எல்லாம் வெறுத்தாரா?




சினிமாவில் பல படைப்பாளர்கள் இருக்கிறார்கள். இதில் சிலரின் படங்கள் மீது பெரும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இருக்கும். அப்படியாக மலையாள சினிமாவின் இயக்குனர் ஜீத்து ஜோசப்பின் இயக்கத்தில் தம்பி படம் வெளியாகியுள்ளது. தம்பியை பார்க்க போகலமா?

ஹீரோ கார்த்தி கோவில் திருடனாக சகல சகவாசங்களோடு வாழ்க்கையை ஜாலியாக கொண்டு போகிறார்.

ஒருநாள் அவரை பொலிஸார் துரத்த பின் வாழ்க்கையே மாறிப்போகிறது.

ஊட்டியில் பெரும் அரசியல் பிரமுகராக இருப்பவர் சத்யராஜ், அவருக்கு மனைவியாக நடிகை சீதா, அம்மாவாக சௌகார் ஜானகி, மகளாக ஜோதிகா என பிரபலங்கள் கூடி இருக்கிறார்கள்.

சத்யராஜின் மகன் சிறு வயதில் காணாமல் போக, 15 வருடங்கள் கழித்து கார்த்தியின் உருவில் மீண்டும் வீடு வந்து சேர ஒரே மகிழ்ச்சி தான். ஆனால் தம்பியை தொலைத்த சோகம் ஒரு பக்கம், மறுபக்கம் வந்துள்ள தம்பியை கொண்டாட முடியாமல் திணறுகிறது அக்காவின் நெஞ்சம்.

இந்நிலையில் மலைவாசி மக்களுக்கு ஒரு பிரச்சனை. வேறென்ன கார்ப்பரேட் நிறுவனத்தினால் மக்கள் வாழ்க்கைக்கு கேள்விக்குறி என்பது தான். அந்த மலை மக்கள் நிலத்தில் என்ன இருக்கிறது ஒரு பக்கம் இருக்க அவர்களுக்காக போராடும் சத்யராஜ்க்கு பெரும் பிரச்சினை வருகிறது. கார்த்தியின் உயிருக்கும் கொலை ஆபத்து வருகிறது.

சத்யராஜின் மகன் காணாமல் போன பின்னணி என்ன? உண்மையில் என்ன நடந்தது? தம்பி கார்த்தியை கொலை செய்ய துணிந்தது யார்? என்பதே இந்த தம்பியின் கதை.

கைதி படத்தால் கார்த்தியின் மீதான நம்பிக்கை மக்களிடத்தில் இன்னும் அதிகரித்துவிட்டது. அதே நம்பிக்கையுடன் தற்போது பலரின் கண்கள் தம்பி மீது திரும்பியுள்ளது. கார்த்திக்கு ஒரு நல்ல வாய்ப்பு என்றே சொல்லலாம். திருடனாகவும் ஒரு மகனாகவும் அவரின் நடிப்பு பார்ப்பவர்களுக்கு இண்ட்ரஸ்டிங். ஆனால் அங்கங்கு அவருக்கான முக்கியத்துவம் குறைகிறதோ என தோன்றும் போது அங்கங்கே சுவாரஸ்யம் கூட்டுகிறார் இயக்குநர்.

ஒரு தைரியமான பெண்ணாக ராட்சசி படத்தில் ஜோதிகாவை பார்த்திருப்போம்.

தற்போது கண்டிப்புடன், பாசமும், ஏக்கமும் நிறைந்த அக்காவாக ரோல் செய்துள்ளார். அவரின் கோபம், பெரும் அமைதியின் பின்னணி கடைசியில் மட்டும் தான் தெரியும் என்ற வகையில் நடித்துள்ளார்.



கார்த்திக்கு ஜோடியாக நிகிலா விமல். தன் காதலனை பல வருடங்கள் கழித்து பார்த்த அதிர்ச்சியில் தொண்டை அடைத்தது போல இருக்கிறார் காதல் ரசம் உருகி வழிய.

சீதா அமைதியான அம்மா, மகன் காணாமல் போன ஏக்கம் ஒரு பக்கம் மகள் ஜோதிகாவை அமைதிப்படுத்த முடியாத தாயாக தடுமாறும் சூழ்நிலை மறு பக்கம் என பொறுமை காட்டுகிறார்.

சத்யராஜ் வழக்கம் போல அனுபவம் வாய்ந்த திறமையாக நடிப்பை கொடுக்க தம்பி நல்ல கதைக்களம். முதல் பாதியில் ஒரு தந்தையாகவும், ஊர் தலைவனாக இவர் சந்திக்கும் சூழ்நிலைகள் நம்மை கொஞ்சம் பரிதாபப்பட வைக்க அடுத்த பாதி இவரா இப்படி என கேள்வி கேட்க வைக்கிறது. எதிர்பார்க்க முடியாத கதை கோணத்தில் ஒரு இடத்தில் சிக்கி விடுகிறார்.

பழம் பெரும் நடிகை சௌகார் ஜானகி இப்படத்தில் கார்த்திக்கு சவாலாக இருக்கிறார். வாய் பேச முடியாமல், தான் சொல்ல வந்ததை புரியவைக்க முடியாமல் அவர் அவஸ்தை படுவது கார்த்திக்கு கூலான செக்மெண்ட்.

காமெடிக்கு டிவி சனல் பிரபலம் அஸ்வந்த். சரளமாக வாய் பேசி வரும் இடங்களில் எல்லாம் ஸ்கோர் செய்கிறார். அன்சல் பால், பாலா, பாலா சிங், இளவரசு, குட்டி ஜோதிகா வாக அம்மு அபிராமி எனப் பலர் இப்படத்தில் கலக்கி யிருக்கிறார்கள்.

திரிஸ்யம் படத்தை தொடர்ந்து தமிழில் பாபநாசம் படமாக ரீமேக் செய்து வெற்றியை பதிவு செய்தவர் இயக்குனர் ஜீத்து ஜோசப். தம்பி படத்தை எளிதில் ரசிகர்களால் கண்டுபிடிக்க முடியாத படி கதைக்களத்தை நகர்த்தியுள்ளார்.



வீட்டில் அக்கா இருந்தால் இன்னொரு அம்மாக்கு சமம் என சொல்லும் வசனம் பளீச்.

ஸ்கீர்ன் பிளே மலையாள படங்களுக்கே உரிய ஸ்டைல் என்று சொல்லலாம். இருப்பினும் முதல் பாதி சற்று மெல்ல செல்வது போல இருந்தாலும் அடுத்தடுத்து ட்விஸ்ட் கொடுத்து சூடுபிடிக்க வைக்கிறார்.

கோவிந்த மேனன் இசையில் பாடல்கள் எளிமையான அலட்டல் இல்லாத ரகம்.

இயக்குநர் முடிச்சுகளாக கதையை தொடுத்தது. சத்யராஜ், ஜோதிகா, கார்த்தி என எதிர்பாராத டிவிஸ்ட்.

ரசிகர்கள் பல்ஸ் பிடித்து சென்ற கிளைமாக்ஸின் நுணுக்கம். முதல் பாதி மெதுவாக செல்வது போல கொஞ்சம் ஏக்கம்.

மொத்தத்தில் தம்பி தளர்வில்லாமல் கதைக்குள் நம்மை கொண்டு செல்கிறான். பார்க்கலாம்.

# ‘வீ லவ் யூ டோனி...’

# ஒரு வெறித்தன ரசிகனின் உலகக்கோப்பை அனுபவம்

“India are chasing 275... Not an easy task” என கமென்ட்ரி கேட்டதும் லேசாக அல்லையைப் பிடித்தது. வீசிய முதல் பந்தில் ஜெர்க்கானார் சேவாக். அதுக்கு அடுத்ததாக மலிங்கா வீசிய கவட்டையடி பந்தில் வெளியேறினார் சேவாக்.

குடும்பமாக அமர்ந்து கிரிக்கெட் பார்த்த காலம். வந்தது 2011 உலகக்கோப்பை. மட்சுக்கு முந்தைய நாள், தெருமுனைப் பிள்ளையாரைப் பார்க்கச் சென்றிருந்தார் அம்மா. “வழக்கம்தானே” என நானும் உடன் சென்றிருந்தேன். “யார் பேருக்கு அர்ச்சனை” எனப் பூசாரி கேட்க, “டோனி பேருக்கு” என்றார் அம்மா. “இது நம்ம லிஸ்ட்லயே இல்லையே” என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு, “டோனியேய்ய்ய்” என தேங்காயை உடைத்தேன். அடுத்த நாள், ஆரம்பித்தது இலங்கையுடனான இறுதி ஆட்டம்.

274 ஓட்டங்களை இலக்காக வைத்தது இலங்கை அணி. 2011 காலகட்டத்தில் 250+ டார்கெட் என்றாலே கொஞ்சம் பீதியாகத்தான் இருக்கும். இருந்தாலும் சச்சின், சேவாக், கம்பீர், யுவராஜ் போன்ற நம்பிக்கை நாயகர்களை நம்பிக்கொண்டு பயத்தை வெளிக்காட்டாமல் மட்ச் பார்க்க ஆரம்பித்தேன். “India are chasing 275... Not an easy task” என கமென்ட்ரி பாக்ஸிலிருந்து வந்த குரல். லேசாக அல்லையைப் பிடித்தது. இன்னிங்ஸின் முதல் பந்திலேயே சற்று ஜெர்க்கானார் சேவாக். இத்தனைக்கும் அந்த உலகக் கோப்பை முழுவதும், முதல் பந்திலேயே ஒரு மேஜிக்கை நிகழ்த்துவார். முதல் பந்தில் மேஜிக் அவுட், இரண்டாம் பந்தில் சேவாக்கே அவுட் மலிங்காவின் சிரிப்பு, இன்னும் பீதியைக் கிளப்பியது!




மறுமுனையில், “கிரிக்கெட்டின் கடவுள்” இருந்தார். இரண்டு பவுண்டரிகளை விளாசிவிட்டு, கண்களில் தேங்கி நின்ற கண்ணீரைக் கொஞ்சம் துடைத்துவிட்டார். மீண்டும், ஏழாவது ஓவரை எக்கி எறிய வந்தார் மலிங்க. அவர் வீசிய புயல் வேகப் பந்தில் அவுட்சைடு எட்ஜாகி அவுட்டானார், “கிரிக்கெட் கடவுள்” சச்சின். இனி நம் தெருமுனையில் இருக்கும் கடவுள்தான் அணியைக் காப்பாற்ற வேண்டுமெனக் கண்ணீர் கன்னாபின்னாவென வழிந்தோடியது. துள்ளிக்குதித்து ஆட்டம் போட்டது இலங்கை அணி. அதிர்ச்சியில் ஆழ்ந்திருந்த மொத்த குடும்பத்தினரும் ஒருவரையொருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டோம். எல்லோர் கண்களிலும் துக்கம் மட்டுமே! துக்கத்தைத் தூக்கியெறிய நினைத்து, அண்ணனுடன் டீக்கடைக்குச் சென்றுவிட்டேன். எங்களைப் போலவே ஏரியாவிலிருக்கும் பலபேர், ஸாம்பீக்களாக உலவிக்கொண்டிருந்தார்கள். தெருவில் மயான அமைதி! “ஒரு டீ” என்றுகூட யாரும் வாய் திறந்து கேட்கவில்லை. வெறும் சைகை மொழிதான்.

துக்கத்தை விரட்டுவதில் டீயும் தோற்றுப்போயிருந்தது. மட்ச் என்ன நிலைமையில இருக்குன்னு பார்ப்போம். கம்பீர், யுவராஜ்லாம் இருக்கான்ல. திடீர்னு இந்த மட்ச் தலைவன் டோனி ஆடிட்டான்னா என எங்களை நாங்களே தேற்றிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம். அதுவரை அந்த உலகக்கோப்பையில் டோனி பெரிய இன்னிங்ஸ் ஏதும் ஆடாமலிருந்தது ரொம்பவே வருத்தமாக இருந்தது. வீடு வந்ததும் 110 ஓட்டங்கள் என்கிற மூன்று இலக்க ஸ்கோரைப் பார்த்ததும்தான் மனம் சற்று ஆறுதல் அடைந்தது. ஹோலியும் காம்பீரும் மெல்ல மெல்ல ஸ்கோரை உயர்த்திக்கொண்டிருந்தார்கள். இழந்த நம்பிக்கை லேசாக எட்டிப்பார்த்தது. “என்னமோ நடக்கப்போகுது. ஆனா, அது என்னன்னுதான் தெரியலை” என்ற ஆர்வத்திலும் பயத்திலும் கண் இமைக்காமல் ரி.வி-யையே பார்த்துக்கொண்டிருந்தேன். தில்ஷன் வீசிய சுழலில் சிக்கினார் ஹோலி. நம்பிக்கை லெவல் மீண்டும் ஜீரோ பக்கம் சென்றது. ஹோலி பெவிலியனை நோக்கி நடக்க, 7 ஆம் நம்பர் ஜெர்ஸி குறுக்கே கிராஸானது. வழக்கமாக யுவராஜ் களமிறங்கும் இடத்தில் டோனி இறங்குகிறார். “இது என்ன புதுக் கூத்து” என இந்தியா மீது எழுந்த மொத்தக் கோபமும் டோனி பக்கம் சென்றது.

என்னைப் போலவே ஆடியன்ஸ் சிலரும் அதிர்ச்சியோடு பார்த்தனர். சில நிமிடங்களிலேய அதிர்ச்சி கலைந்து, ஆரவாரம் கூடியது. அடிக்கவேண்டிய ஸ்கோரின் அளவும் பந்தின் எண்ணிக்கையும் சரிசமமாக வந்தது. டோனியும் காம்பீரும் பந்தை பவுண்டரி லைனுக்கு விரட்டினர். 93 பந்துகளுக்கு 92 ஓட்டங்கள். அதன் பிறகு கம்பீர் அடித்த பவுண்டரியைப் பார்த்த டோனி அருகே வந்து, “இதுதான் நண்பா நான் உன்கிட்ட கேட்டேன்” என்ற பாணியில் ஏதோ முணுமுணுத்தார். 52 பந்துகளுக்கு 52 ஓட்டங்கள் என்ற நிலையில் டோனியுடன் போராடிய படைத்தளபதி கம்பீர், ஃபெராரா வீசிய பந்தில் போல்டாகி பெவிலியன் திரும்பினார்.

அடுத்து களமிறங்கிய யுவராஜ்க்கும் டோனிக்கும் சின்னதாய் முட்டிக்கொண்டது. அதன்பின் இருவரும் ஒன்று சேர்ந்து இந்தியாவை வெற்றியின் பாதையை நோக்கி அழைத்துச் சென்றனர். ரசிகர்களாகிய நாங்களும் ஒட்டிக்கொண்டு உடன் சென்றோம். 23 பந்துகளுக்கு 26 ஓட்டங்கள் என்ற நிலை ஏற்பட்டது. இருப்பினும் அந்தப் பதற்றம் மட்டும் போனபாடில்லை. 21 பந்துகளில் 21 ஓட்டங்கள் என்ற நிலையில் யுவராஜ் தனது ஓட்டத்தில் சுணாங்க, ஓட்டம் அவுட்டிலிருந்து ஜஸ்ட் மிஸ்ஸில் தப்பித்தார் டோனி. அதன்பின், ஆட்டத்தின் வேகம் சூடுபிடித்தது. 15 பந்துகளுக்கு 7 ஓட்டங்கள் என்ற நிலை வந்ததும் வெற்றியைக் கொண்டாடத் தொடங்கினார்கள் ரசிகர்கள். மயான அமைதியில் இருந்த தெரு, திருவிழாக்கோலம் சூடியது.

“Absolutely magnificent...” என்ற மெல்லிய குரலில் ஆரம்பித்த ரவி சாஸ்திரியன் குரல், சற்றும் எதிர்பாராத டோனியின் ஃபினிஷிங் சிக்ஸரைப் பார்த்ததும் “Dhoni... Finishes off him style... India Lift the world cup after 28 years” என உரக்கக் கத்தியது. சந்தோசத்தில் அழுகையே வந்துவிட்டது. அது ஒரு ஜாலியான டென்ஷன். யுவராஜ் அழ, சச்சின் அவரைத் தழுவ, மொத்த ரசிகர்கள் கூட்டமும் கொண்டாட... அந்த நெகிழ்ச்சியை இப்போதும்கூட உணர முடிகிறது. கண்களில் கண்ணீர் எட்டிப்பார்க்கிறது.

கிரிக்கெட் வெறும் விளையாட்டுத்தான். இருந்தாலும் இந்த கிரிக்கெட், ஏதோவொரு வகையில் நம்மோடு பிணைந்து விட்டது. அதுவும் 28 வருடங்கள் கழித்து இந்திய அணி உலகக்கோப்பையை ஏந்தும்போது, பெரியவர்களும் குழந்தைகளாய் மாறி கண்ணீர் வடித்தனர். இந்த மொத்த கொண்டாட்டத்திற்கும் முக்கிய காரணம் டோனி என்கிற “கப்டன் ஆஃப் தி ஷிப்”. எந்தவொரு நிலையிலும் தனது டெம்பரைக் கொஞ்சமும் இழக்காதவர் அவர். மனநிலையை சமநிலையில் வைத்திருப்பதால்தான், அவர் என்றும் “கப்டன் கூல்” அவர் கிரிக்கெட்டுக்கு வந்த புதிதில், அவரை “சடையனா” கத்தான் எங்களுக்குத் தெரியும். ஆமாம், அவரை அப்படித்தான் எங்கள் வீட்டார் அழைப்பார்கள்.

இலங்கையுடனான அந்த இறுதி ஆட்டத்தில்கூட, சைனஸ் பிரச்சினையில் அவதிப்படும் டோனி, மூக்கை உறிஞ்சிக்கொண்டே ஒவ்வொரு ஓட்டங்களையும் அடித்திருப்பார். தோற்றுப்போய் தவறான விமர்சனங்களுக்கு ஆளானாலும் பரவாயில்லை என நினைத்துக்கொண்டு, 3 டவுனில் இறங்கிய டோனியின் தன்னம்பிக்கையே ஏழுக்குப் பின்னாலிருக்கும் தாரக மந்திரம். இதுக்காகவே என்றென்றைக்கும் வீ லவ் யூ டோனி.

டோனியை பெஸ்ட் ஃபினிஷர் என்று சொல்வார்கள். ஆனால், பல்வேறு கோப்பைகளைப் பெற்றுத்தந்த டோனியை, இந்திய அணியின் வெற்றிப்பாதையின் தொடக்கமென்றுதான் சொல்ல வேண்டும். 15 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில்தான், தன்னை இந்திய அணிக்குள் நுழைத்துக்கொண்டார். திரும்பிப் பார்த்தால், டோனி பயணித்திருக்கும் பாதை ஒரு வெற்றி நாயகனின் பாதை. தலைவன் இருக்கிறான்... எப்போதுமே இருப்பான்!

# விட்டுக் கொடுத்து வாழுங்கள்



வேலை முடிச்ச களைப்புடன் இரவு 7.30 வீடு திரும்பிய அருண் கதவை கோபத்துடன் டக் டக் என தட்டுகிறான். ஆனால் கவிதாவோ தனது கணவன் வருகையை எதிர்பார்த்து காலையில் செய்து கொடுத்த மதிய உணவுகளை வீசிவிட்டு இரவு தனது கணவன் களைத்து வருவார் என்றும் அவருக்காக தனக்கு தெரியாத இடத்திலே தனது பெண் தோழிகளின் உதவியுடன் **FRESH CHICKEN** வாங்கி வந்து அரைவாசியை கறியாக வைத்தும் அரைவா சியை தனது **Husband** க்கு பிடிச்ச போல பொரிச்சும் வைத்து தனது அம்மா பாசலில் போட்ட அரிசி மாவில புட்டும் அவிச்சு வைத்து தனது குழந்தையை நித்திரை ஆக்கி கட்டிலில் படுக்க வைத்த பின்னர் தான் குளித்து புதிய இரவு ஆடை அணிந்து அவரின் வருகையை எதிர்பார்த்து இருந்தவள் டக் டக் டக் என்ற சத்தத்துடன் ஓடி சென்று கதவை திறந்தாள்.

ஆனால் கணவனிடமிருந்து வந்த கதை "என்னடி கொம்மா கூட போனில கதைச்சிட்டு இருந்தியா" என்ற வாறு ஷோபாவில் சென்று அமர்ந்தார் அருண்.

எதிர்பார்த்து காத்திருந்த கவிதாவுக்கு முகத்தில் அடித்தால் போல பதில். ஆனாலும் கவிதா "அப்பா" சேட்டை கழட்டிட்டு குளிச்சிட்டு வாங்கோ **chicken** உம் புட்டுக் கறியும் வைச்சிருக்கன்.

எனக்கு ஒண்டும் வேணாம் என்னை நிம்மதியாக படுக்க விடு. அப்பா இண்டைக்கு நம்ம கல்யாண நாள். உங்களுக்கு நான் ஒன்று வாங்கினேன் என்றவாறு ஐபோன் 11 ஐ எடுத்து நீட்டினாள். அதைப் பார்த்த அருணுக்கு கோபம் எங்காலடி உனக்கு காசு. அம்மாவுக்கு காசு போடணும் இருக்கா என்று கேக்க என்ன சொன்னாயடி. அப்பா இது என்ர **Card** ல எடுத் தேன்.

நல்ல கதைடி. நீ இப்ப பெரிசா வளந்திட்டாய். என்னை கேக்கா மல் எல்லாம் செய்றாய். எல்லாம் வேலைக்கு போற என்ற திமிர். ஒன்றும் தெரியாம இருந்தனி இப்ப ஐபோன் வாங்கிற அளவில இருக்காய். சரி அந்த போனை தா என்ர தம்பி கேட்டவன். வாற மாதம் சித்தப்பா **ceylon** போவார் குடுத்து விடுவம்.

அப்பா மச்சானுக்கு வேற வாங் கிக் குடுப்பம். இண்டைக்கு நம்ம முதலாவது கல்யாண நாள். இது நான் தந்த **Gift**. இதை குடுக்க வேணாம்.

ஓம் நீ என்னை எதிர்த்து கதைக்கிற அளவு வளர்ந்திட்டாய் என்ன?

சரி அப்பா நீங்க தம்பிக்கே குடுங்க. அது எனக்கு தெரியும் போய் ரவலை எடுத்துவா...

கொண்டுவந்து கொடுத்ததும் குளிக்க சென்று குளித்து விட்டு வந்து சாப்பிட்ட அருணுக்கு அப்ப தான் வேலை களைப்பு குறைந்து புது உடை அணிந்த மனைவியை பார்த்து கண்ணசைத்தார்.

ஆனால் கவிதாவோ கோபத்துடன் அவர் சாப்பிட்டவுடன் தானும் சாப்பிட்டு விட்டு ஷோபாவில் அமர்ந்து ரீவியை பார்த்தாள்.

கோபம் தணிந்த அருண் மெதுவாக சென்று கவிதா அருகிலே அமர்ந்தார். மெதுவாக அவள் தோளின் மீது கைகளைப் போட கோபம் தணியாமல் இருந்த கவிதா தூக்கி போட்டாள்.

ஆனாலும் அருண் திரும்பவும் அவளது கையைப் பிடித்து பிணைந்த வண்ணம் **New Dress** என கிள்ளினார்.

அதே வெக்கமா என்று கையை தூக்கி போட கவிதா இப்பவும் கையை கோபத்துடன் தள்ளிய வண்ணம் மனதிலே நினைத்தால் இனி வச்சா விடுவம் என்று. ஆனால் கோபப்பட்ட அருண் கவிதாவை தள்ளி விட்டு போய் அறையில் படுத்தான்.

கவிதாவும் அவர் பேசின பேச்சுக்கு இப்பவும் கோபம் வேற வருது. திரும்ப வரட்டும் என்று ரீவியை பார்த்த வண்ணம் இருந்தால் ஆனாலும் நேரம் 9 ஐ தாண்டியும் அருண் வரல... பொறுமை இழந்த கவிதா எழுந்து சென்று தானும் அறையில் **light power** ஐ குறைத்து படுத்தாள்.

ஆனால் அங்கு அருணோ நித்திரை கொள்ளவில்லை. எப்பா வது **Sorry Appa** என்று சொல்லுவாள் கவிதா என்ற நினைப்பு. அதே போல கவிதாவுக்கும் இனி யாவது அருண் **Sorry Kavi** என்று சொல்லுவார் என்ற நினைப்பு.

இருவருமே ஒருவரை ஒருவர் ஏமாற்றிய வண்ணம் கை கால் களை தொடச்செய்வது. நித்திரை போல அருகே புரண்டு படுப்பது ஆனால் இருவருமே விட்டுக் கொடுக்கவில்லை.

நேரமோ மணி 11 ஐ தொட்டது. ஆனால் இருவரும் தமது கல்யாண நாளை நினைத்த வண்ணம் தம்மை மறந்து தூங் கினார்கள்.


கணவன் மனைவி வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கும் தன்மை இருந்தால் தான் வாழ்க்கை சிறக்கும். போன வருடம் போல் இந்த வருடம் அமையாது.

ஆனால் நாம் நினைத்தால் மட்டுமே ஓரளவுக்கு அமைத்துக் கொள்ள முடியும். நீங்களாவது விட்டுக்கொடுத்து வாழுங்கள்.





### இனியா

அனைவரிடமும் ஒரே மாதிரிப்பழகும் குணம் கொண்ட ஒருவரால் மட்டுமே அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியான மரியாதையைப் பெற இயலும்



### சுகந்தி

வாழ்வில் நீங்கள் பெற்றவை உங்களுக்குத் தகுதியானவை! மற்றவை உங்களிடம் இருக்கத் தகுதியற்றவை



### யாழினி

என்ன இருந்தாலும் மன இறுக்கத்தை விட்டுச் சிரித்துக்கொண்டே கடந்து செல்... அந்தப் புன்னகை எல்லாவற்றையும் நீ எளிதாகக் கையாள்வதற்குக் கற்றுக் கொடுக்கும்



### வினுஜா

யாரைப் போலவும் இல்லாமல் இதுதான் நான் என தன் இயல்பு மாறாமல் வாழ்வதும் ஒருவகையில் வாழ்நாள் சாதனைதான்




### ராகவி

உன் கனவுகளை ரசிக்கத் தெரிந்த நீ அதைச் செயலாக்கும் போது வரும் வலிகளையும் ரசிக்கக் கற்றுக்கொள். வாழ்க்கை என்பது என்ன என்று புரியும்



### அஸ்வினி

இன்றைய பொழுதை வைத்து எதையும் தீர்மானித்து விடாதீர்கள்... காலமும் நேரமும் மாறக்கூடியது.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 205

# சிறுநீரகங்கள் பழுதடைவதை தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்



சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது அனைவரும் அறிந்ததே. இவை பழுதடைந்து போனால் எமது உடலில் கழிவுப் பொருட்கள் தேக்கமடைவதுடன் குருதி அமுக்கம் அதிகரிக்கும். அத்துடன் குருதிச்சோகையும் எலும்புகளின் தாக்கங்களும் ஏற்படலாம். எனவே எமது உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சிறுநீரகங்களை பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அறிந்திருப்பது அவசியமாகும்.

விவசாய இரசாயனப் பொருட்களால் மாசடைந்த நீர் சிறுநீரக பாதிப்பிற்கு ஒரு முக்கியமான காரணியாக அமைகிறது. எனவே விவசாயத்தில் இரசாயனங்கள் பயன்படுத்தாது செய்யும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பது நன்மை பயக்கும். அத்துடன் போதியளவு தூய நீரை பருகுவது அவசியமாகும். தாகத்துடன் இருப்பதை தவிர்த்து விடவேண்டும்.

நோவு, வலி, உளைவு போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் வலி நிவாரண மாத்திரைகள் சிறுநீரகங்களை பாதிக்கும் ஆபத்து இருக்கிறது. எனவே இவற்றை இயன்றளவில் தவிர்த்து விடுவது நல்லது.

ஒருவருக்கு உயர் குருதிய முக்கம், நீரிழிவு போன்ற நோய் நிலைகள் காணப்பட்டால் அவற்றுக்குப் பொருத்தமான சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலம் சிறுநீரக பாதிப்புகள் ஏற்படும் சந்தர்ப்பத்தை குறைத்துக் கொள்ளலாம்.

புகைத்தல், மது அருந்துதல் போன்றவையும் சிறுநீரக பாதிப்புகளுக்கு காரணமாக அமையலாம். எனவே முற்றாக தவிர்ப்பது அவசியமாகும்.


உடலில் ஏற்படும் சில கிருமித்தொற்றுக்களும் சிறுநீரக பாதிப்புகளுக்கு காரணமாக அமையலாம். உதாரணமாக தோலில் ஏற்படும் தொற்றுக்கள், எலிக்காய்ச்சல், சிறுநீரக கிருமித்தொற்று, நுரையீரல் தொற்று போன்றவற்றை குறிப்பிடலாம்.

எனவே இவ்வாறான நிலைமைகள் ஏற்படின் பொருத்தமான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

சிறுநீரக அழற்சி.பாம்புக்கடி, நஞ்சருந்துதல் போன்றவையும் சிறுநீரக பாதிப்புகளுக்கு காரணமாக அமையலாம்.

எனவே இவை சம்பந்தமான விழிப்புணர்வும் அவசியமாகின்றது.

சிறுநீரக நோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டாஷ் பொருத்தமான நடவடிக் கைகள் மூலம் அதன் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளமுடியும். எனவே சுகதேகியாக இருப்பவர்களும் 3 வருடங்களுக்கு ஒரு தடவையாவது இதற்கான சிறுநீர் மற்றும் இரத்தப் பரிசோதனைகளை செய்து பார்த்துக்கொள்வது நல்லது. உங்கள் குடும்ப உறுப்பினர்கள் யாருக்காவது சிறுநீரக நோய் காணப்படுமாயின் வருடத்திற்கு ஒரு தடவையாவது இதற்கான சோதனைகளை செய்து பார்த்துக் கொள்வது அவசியமாகும்.



சிறுநீரகங்களில் கல் தோன்றும் தன்மை உடையவர்கள் அதற்கான அடிப்படை காரணத்தை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். சிறுநீரகங்களில் கல்தோன்றும் நிலை கவனிக்காது விடப்படின் இது நிரந்தரமான சிறுநீரக பாதிப்புகளுக்கு வழிகோலும்.

சமுதாய மட்டத்தில் சிறுநீரக நோய்த்தடுப்பு முறைகள் சம்பந்தமான ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படின் சிறுநீரக நோய்களின் தாக்கங்களை பெருமளவு குறைத்துக் கொள்ள முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

# முட்டை பற்றிய சில உண்மைகள்



- விலை குறைந்த அதியுச்ச ஊட்டச்சத்துள்ள உணவு.
- முட்டை உண்பதால் குருதி கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கமாட்டாது.
- பசியைக் கட்டுப்படுத்தும் வல்லமை முட்டைக்கு அதிகமாக இருப்பதால் ஒருவரின் நிறைகுறைப்பு முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்.
- ஆரோக்கியமான ஒவ்வொருவரும் தினமும் ஒரு முட்டை உண்டு வருவது அவரின் ஆரோக்கியத்தை பேண உதவும்.
- முட்டையை அரை அவியலாகவோ பச்சையாகவோ உண்பதை தவிர்த்து விடவேண்டும்.
- முட்டை மஞ்சட்கருவில் நிரம்பாத கொழுப்பமிலமும் அன்டி ஒக்சிடன்களும் பல கனியுப்புக்களும் அடங்கியுள்ளதால் உடலுக்கு ஆரோக்கியமானது. எனவே இதனை தவிர்த்து விடவேண்டிய அவசியமில்லை.
- காடை முட்டைகளில் கோழி முட்டைகளிலும் பார்க்க ஊட்டச்சத்துக்களின் செறிவு அதிகமாகும்.
- தாரா முட்டைகளும் உடல் நலத்திற்கு ஆரோக்கியமானது.
- முட்டைகளை சேமித்து வைக்கும் பொழுது அதன் கூரான பகுதி கீழ்நோக்கி இருக்கும்படி வைத்தால் அவை பழுதடையும் வீதம் குறைவாக இருக்கும்.
- அறை வெப்பநிலையில் முட்டைகளை 7 நாட்களுக்கு சேமித்து வைக்கமுடியும்.
- கோழி முட்டை ஒன்றின் சராசரி சக்திப்பெறுமானம் 70 k.cal ஆகும்.

Dr.சி.சிவன்சுதன், பொது வைத்திய நிபுணர்.